
கல்கி

KALKI 6-2-1972 45 காசு



ஏஸிஸியின் ஃபயர்க்ரீட் மற்றும்
ஃபயர்க்ரீட் ஸுபர் கேஸ்டபிள் ரிஃப்ராக்டரீஸ்
உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானது





உறுதியுடன் நீடித்து நிலைக்கும் ஃபயர்க்ரீட் கேஸ்டபிள்ஸ் விரைவிலே படிந்து உறுதியாகிறது. அவை வெப்ப அதிர்ச்சிகளை எதிர்த்து, அதிகமான பளுவையும் தாங்குகின்றன. உலைகள், கார் கூரைகள், நிலைவிட்டங்கள், கனிடிங் வேலைகள், வார்ப்பு வடிவங்கள், கொட்டு வாளியின் லைனிங்குகள், சாம்பல் குழிகள், மானோலிதிக் ரிப்ராக்டரி ஆகிய நிர்மாண வேலைகளுக்கு உபயோகமாகும் ஃபயர்க்ரீட் கேஸ்டபிளை எந்த வடிவிலும் வார்க்கலாம்.

1350°ஸி வரையிலான வெப்ப நிலைகளுக்கு ஃபயர்க்ரீட்; 1550°ஸி வரையிலான வெப்ப நிலைகளுக்கு ஃபயர்க்ரீட் ஸுபர்—மேலும் அதிகமான வெப்ப நிலைகளுக்கு, இன்ஸுலேடிங் கேஸ்டபிள்ஸ் உள்பட உங்கள் தேவைக்கேற்றவாறு விசேஷமாகத் தயாரிக்கப்படும் கேஸ்டபிள்ஸ் கிடைக்கும்.


ACC

உயர் தர
தயாரிப்புக்களுக்கு
உங்கள் உத்தரவாதம்

தி சிமெண்ட் மார்கெடிங் கோ. ஆப் இந்தியா லிட். மற்றும் அன்னாரது விநியோகஸ்தர்களிடம் தயாராகக் கிடைக்கிறது.

rss. ACC-263 TAM.

தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட் • தி சிமெண்ட் மார்கெடிங் கோ. ஆப் இந்தியா லிட்.



வண்ணங்களும் வகைகளும் பலப் பல
ஆனல் தரம் ஒன்றேதான்: உயர்தரம்!

அதுவே ‘பாரிவேர்’

தரத்தை விரும்புவோர் பாரிவேரை நாடுவதற்கு இதுதான் காரணம்.
வழவழப்புடன் கூடிய பளபளப்பு கொண்டது. நீரை உறிஞ்சாதது. விரிசல் விழாதது.
முற்றிலும் சுகாதாரமானது. முத்துப் போன்ற வெண்ணிறம், மற்றும் பிங்க்,
பிரிம்ரோஸ், டர்க்காயிஸ், ஸ்கைப்ளூ, மெல்லோ கிரீன்,
மிஸ்ட் கிரே ஆகிய நிறங்களில் கிடைக்கிறது.

Parryware VITREOUS

பொலிவான வாழ்க்கைக்கு
— பாரிவேர் விட்ரியஸ்

ஐ.எஸ்.ஐ. மற்றும் டி.ஜி.எஸ்.
அண்ட் டி. பட்டியல்களில்
இடம்பெற்றிருப்பது

ஈ.ஐ.டி. - பாரி லிமிடெட்
ராயல் டௌல்டன்ஸ், யு.கே.வின்
தொழில்நுட்ப ஆலோசனை கொண்டது
டேர் ஹவுஸ், சென்னை-1

இந்தியாவின் மிகப் பெரிய
ஸெராமிக் தொழிற்சாலையில்
தயாரிக்கப்பட்டு, அகில
உலகப் புகழ் பெற்றது

டிஸைன்
இண்டெக்ஸ்-க்கான
யு.கே. கவுன்ஸில் ஆஃப்
இண்டஸ்ட்ரியல் டிஸைன்
நிறுவனத்தின் பட்டியலில்
இடம் பெற்றிருப்பது

FDSPW 1334 BTM

கல்கி
பொருளடக்கம்



''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

விரோதிகிருது தை. 23 — பிப்ரவரி 6, 1972

தமிழ்த்திரு நாடுதன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
--- பாரதியார்

குடியரசு விழா; சாஸனம் விழலாமா?

ஜனவரி இருபத்தியாறும் தேதியன்று குடியரசு தினம் நாடெங்கும் கொண்டாடப் பட்டது. பாகிஸ்தானுடன் நடந்த யுத்தத்தில் நாம் அடைந்த வெற்றியின் காரணமாக, இவ்வருடக் குடியரசு விழாவில் விசேஷ உற்சாகம் பொலியக் கண்டோம்.

சுதந்திர தினம் ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி கொண்டாடப்படுகிறது. குடியரசு தினம் என்பது ஜனவரி இருபத்தியாறும் தேதி கொண்டாடப்படுகிறது. சுதந்திர தினம் என்பது என்ன? குடியரசு தினம் என்பது என்ன?

பொதுவாக மக்கள் இவை இரண்டையும் தேசம் அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்ட தினம் என்றே கருதுகின்றனர். குடியரசு தினத்தன்றுதான் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது என்று தப்பாகக் கருதுபவர்கள்கூட உண்டு. உண்மையில் அந்நிய ஆதிக்கத்திலிருந்து நாம் விடுபட்டது 1947 ஆகஸ்டு 15ந் தேதியன்றேயாகும். எனவே 'ஆகஸ்டு 15' என்பதே நமது சுதந்திர தினம். புதிய சுதந்திர இந்தியா தானே தனது ஆட்சி முறையை நிர்ணயித்துக் கொண்டது. இதற்காக நமது ஆட்சி முறையை வகுக்கும் அரசியல் மூல சாஸனத்தை வகுத்தது. இந்தப் புதிய அரசியல் சாஸனம் 1950 ஜனவரி 26ந் தேதியன்று அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆகையால் குடியரசு தினம் எனப்படும் ஜனவரி 26ந் தேதி, நமது மூல அரசியல் சாஸனம் செயற்படத் தொடங்கிய நாள் ஆகும்.

அரசியல் மூல சாஸனத்தின் உயிர் நிலையையே பறிக்கும் திட்டங்களில் இன்றைய ஆட்சியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டிருக்கையில் நாம் இத்தனை விமரிசையாக 'ஜனவரி 26' விழாவைக் கொண்டாடியது பிரமாதமான ஹாஸ்யமாகும். சர்க்காரின் சர்வாதிபத்தியத்துக்கு மக்கள் ஆளாவதற்கு இடம் தரக்கூடாது என்ற உயர்ந்த லட்சியத்தில் நமது மூல சாஸனம் மக்களுக்குச் சில அடிப்படை உரிமைகளை உறுதி கூறித் தந்தது. இந்த உரிமைகளை அரசாங்கம் பறிக்கக்கூடாது என்று உத்தரவாதம் தந்தது. தாற்காலிகமாகப் பார்லிமென்டில் பெரும்பான்மை பலம் பெறுகிற எந்த ஆட்சியாளரும் இந்த அடிப்படை உரிமைகளை மாற்றலாகாது என்பதே சாஸனத்தின் உத்தேசம். ஸுப்ரீம் கோர்ட் உயர் நீதிபதிகளும் இவ்வண்ணமே தீர்ப்புக் கண்டிருக்கின்றனர். இதையெல்லாம் மீறி மக்களின் ஆதார உரிமைகளை ரத்து செய்வதுதான் இன்றைய ஆட்சியாளரின் திட்டம். 'ஆதார உரிமை' என்ற வார்த்தைக்கே சாஸன பரிபாஷையில் விசேஷப் பொருள் உண்டு. மற்ற சாமானிய சர்க்கார் சட்டங்களைப் போல் இந்த ஆதாரமான அடிப்படை உரிமைகளைப் பார்லிமென்டின் பெரும்பான்மை பலத்தால் மாற்றிவிட முடியாது என்பதே அந்த உட்பொருள். இவ்விஷயத்தில் சில மாற்றுக் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுள்ள இன்றைய ஆட்சிப் பீடத்தினர் அடிப்படை உரிமைகள் மாற்றவொண்ணாத மதிப்பைப் பெறவில்லை என்று கருதுவதால் அவற்றையும் மாற்ற முற்பட்டு விட்டார்கள். ஆனால் இவ்விஷயத்தில் சட்ட ஞானத்தில் சிறந்த தேர்ச்சி பெற்ற ஸுப்ரீம் கோர்ட் உயர் நீதிபதிகளின் கருத்துக்கே அதிக மதிப்புண்டு. அவர்கள் அடிப்படை உரிமைகளைப் பார்லிமென்ட் பலத்தால் மாற்றக்கூடாது என்றே கருதி வந்துள்ளனர்.

சர்வாதிகாரம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே பார்லிமென்டின் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டு நடைபெறும் ஜனநாயக ஆட்சி முறையை அரசியல் சாஸனம் வகுத்துத் தந்தது. ஆனால் அந்தப் பார்லிமென்டின் பெரும்பான்மையே சாஸனம் உறுதி கூறிய அடிப்படை அம்சங்களையே தகர்க்க முற்பட்டிருப்பதும், இச்சமயத்திலேயே சாஸன தினமான ஜனவரி 26ந் தேதியன்று குடியரசு தினம் மகோற்சவமாகக் கொண்டாடப் பட்டதும் விபரீத வேடிக்கைதான்.

[அடிப்படை: ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.]

ராஜாஜியின் கருத்துக்கள்

மகிழ்ச்சிக்குரிய முன்னேற்றம்

நான் மிகவும் விரும்பிப் பிரார்த்திக்கும் இந்தியா—பாகிஸ்தான் நட்புக்கு ஆதரவாகத் திருப்திகரமான முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்கிறேன்.

பகைவர்களாக இருந்த இரு தரப்பினரில் ஒருவரின் போக்கில் அப்பட்டமான மோசடி தெரியாதவரையில், அவர் நட்புப்பான்மை தெரிவிப்பதை அந்தரங்கசுத்தமாகவே கருத வேண்டும். அதற்குரிய சாதகமான நடவடிக்கையை எதிர்த்தரப்பும் மேற்கொள்ள வேண்டும். அநாவசிய சந்தேகத்துக்கு இடம் தரக் கூடாது. குறிப்பாக, நட்புக் கொள்வதற்கு மிகுந்த முக்கியத்துவம் உள்ளபோது, காந்திய தர்மத்தின் முதல் விதியை மனத்தில் கொண்டு மறு தரப்பை அரவணைத்துப் போக முற்பட வேண்டும்.

எந்த விஷயத்தையும் மிகவும் அலசி ஆராய்ந்து வியாக்கியானம் செய்துகொண்டு போனால் பலவிதமான நிபந்தனைகளும் சந்தேகங்களும் எழும்பியபடிதான் இருக்கும். ஓயாமல் நிபந்தனை விதித்துக் கொண்டும், ஜாக்கிரதைப் படுத்திக் கொண்டும் இருப்போமாயின் அது நட்பு, நம்பிக்கை இவற்றின் ஜீவனையே கொன்றுவிடும். ஆவேசத்துணிச்சல் என்றே சொல்லக்கூடிய அளவுக்குத் தீரம் காட்டுவதுதான் நட்புக்கும் நம்பிக்கைக்கும் உயிர்நாடியாகும்.

வங்கதேச அங்கீகாரம்

நாம் உறுதியாக நம்பியது போலவே, வங்காள தேசத்தை ருஷியா அதிகாரபூர்வமாக அங்கீகரித்து நமது நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது. மேற்கத்திய வல்லரசுகள் இன்னமும் இந்தியாவையும் பாகிஸ்தானையும் 'சமமாக எடை போடுவதாகவே' சொல்லிக் கொண்டு எதையோ செய்து வருகின்றன. அவை ஏன் இப்படி நடக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை.

பிரிட்டிஷ் காமன்வெல்த்திலேயே உள்ள பார்படோஸ் என்கிற சின்னஞ் சிறு மேற்கிந்திய நாடு, பிரிட்டனின் உத்தரவை எதிர்பாராமலே வங்காள தேசத்தை அங்கீகரித்துள்ளது. பார்படோஸ் மக்களையும் அரசாங்கத்தையும் பாராட்டுகிறேன்.

முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளான ஸ்வீடன், டென்மார்க், ஃபின்லந்து, யூகோஸ்லாவியா ஆகியனவும் வங்காள தேசத்தை அங்கீகரித்திருப்பது மிகவும் பொருள் பொதிந்தது. சுதந்திரம் என்பது தன்னிறைவு பெற்ற ஓர் உண்மை. அது பிற நாடுகளின் அங்கீகாரத்தைச் சார்ந்த விஷயமல்ல. ஆயினும் பிற தேசங்கள் அங்கீகரிப்பதால் பல இனங்களில் அநுகூலம் உண்டாகிறது.

புது நாட்டுக்குப் படிப்பினை

ஒரு தேசம் செய்த தப்பிதங்களிலிருந்தும் அதனது துர்ப்பாக்கியத்திலிருந்துமே இன்னொரு தேசம் எச்சரிக்கை பெற முடியும். இந்தியாவின் இன்னல்களிலிருந்து வங்காள தேசம் படிப்பினை பெற்று, இவற்றுக்கான காரணங்களைத் தவிர்க்க வேண்டும். தேசம் முழுவதிலும் ஆலைத் தொழிலைப் பெருக்க வேண்டும் என்ற திட்டத்தினால் இந்தியா அந்நிய நாடுகளுக்கு ஏராளமாகக் கடன்பட்டு இன்று திவாலா நிலையை நெருங்கியுள்ளது. இந்திய மக்கள் சகிக்கவொண்ணாத வரிச் சுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். முதுகை முறிக்கும் கடன் சுமையில் பொருளாதாரத்தை ஆழ்த்திவிட்டு, முன்னேற்றம் ஏற்பட்டதாக வெளியிலே காட்டுவதில் எவ்வித உண்மை லாபமும் இல்லை. ஒரு தேசம் அடங்கி வாழ்வதால் இன்னலுக்கு ஆளாகாது; வறட்டு ஜம்பத்துக்கு ஆசைப்பட்டால்

நாசமே அடையும். அந்நிய 'உதவி' என்கிற பெயரில் 'கடன்' வழங்கப்படுவதே, சிறு தேசங்களைத் தவறான கொள்கைகளிலும் பேராசைகளிலும் இழுத்துச் செல்கிறது.

"தமிழ்நாடு" - 'டு' - விஷயம்

'Tamilnad' என்று இல்லாமல், Tamilnad-u என்று தி. மு. க. சர்க்கார் குறிப்பிடத் தொடங்கிய பின் 'தமிழ்நாடு'வின் இறுதியில் உள்ள 'டு'வை மற்ற மாநிலத்தவர் யாவரும் ஓர் அழுத்தமான உயிரெழுத்தாகவே உச்சரிக்கிறார்கள். மிட்டாய்க் கடையில் விற்கப்படும் 'லாடு'வுக்கு எதுகையல்ல 'நாடு'. 'நாடு'வில் வரும் 'உ'காரம் குற்றியலுகரம் எனப்படும். 'ட்' என்று மெய்யெழுத்தாக உச்சரித்துச் சுவாசத்தை அடைக்காமல், மூச்சைத் தளர்த்தி விடுகிற ரீதியில் அமைந்ததே இந்த 'டு'. அடுத்து ஒரு பூரணமான உயிரெழுத்து வரும்போது இந்தக் குற்றியலுகரம் மறைந்தே போகும். மெய்யெழுத்து அடுத்து வரும் உயிரெழுத்தைப் பற்றிக்கொள்ளும். இலக்கண சூத்திரம் வருமாறு:

உயிர்வரின் உக்குறள்
மெய் விட்டோடும்.

'உக்குறள்' என்பதன் ஒலி ஆங்கிலத்தில் able என்று சொல்லும்போது b-க்கும் l-க்கும் நடுவிலே வருகிற ஒலியை ஒக்கும்.

கற்பனை வேண்டாம்!

ஸ்ரீமதி இந்திரா காந்தி தம்மைப் பற்றி அறிந்திருப்பதைவிடச் சிறப்பாக அவரது மனப்பான்மையைத் தாங்கள் அறிந்திருப்பதாகச் சிலர் கற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள், இந்திரா காந்தி வெளிக்காட்சிக்குத்தான் சர்வாதிகாரியாகத் தோன்றுகிறாரே தவிர, உள்ளூற அவரும் நடைமுறைக்கு உகந்த மிதவாதியே ஆவார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இக்கற்பனையின் அடிப்படையில் இவர்கள் இந்திராவின் கட்சியில் சேர விரும்புகிறார்கள். இது அறிவீனம். இந்தப் போக்கு சர்வாதிகார ஆட்சியை விரைவுபடுத்துவதிலேயே முடியும்.

என் கண்ணீர்

சென்னையின் கடைத் தெருக்களில் 'மதுக்கடை' என்ற ஒளிவிளக்குப் பெயர்ப் பலகைகளைக் காணும்போது - இளைஞர்கள் இவற்றுக்குள் செல்வதற்காக ஒருவரை ஒருவர் ஊக்கிக்கொள்வதைப் பார்க்கும்போது — என் கண்களில் நீர் முட்டுகிறது. நான் உத்தேசிக்காமலே செய்துவிட்ட ஒரு காரியத்தை எண்ணிக் கண் கலங்குகிறேன். ஏனெனில் ஆட்சி பீடத்திலே தி. மு. க. அமருவதற்கு நானும் ஓரளவு காரணமோ என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

இப்போது சர்க்காருக்கு அற்ப வருமானம் கிடைக்கிறது என்பதால் இதுவரையில் பிராந்தி, விஸ்கி, சாராயம், கள் இவற்றின் மயக்குகளை முற்றிலும் அறியாமல் இருந்த இனம் தலைமுறையை மது அரக்கனுக்கு நிரந்தரமாக விற்றுவிட்டது!

புத்தாண்டில் பிறக்கும் குழந்தைப் பத்திரிகையின் பெயர் என்ன?
விரைவில் எதிர்பாருங்கள்!



முதல்முறையாக முதலை வைத்தியம்



கூவம் முதலை ஆகாரத்துக்காக நதியிலிருந்து ஏறிப் பக்கத்தில் உள்ள குட்டைக்குச் செல்லத் தொடங்கியிருக்க வேண்டும். எதிர்பாராத விதமாக மின்சார ரயில் ஏறி 1 அடி 3 அங்குல நீளத்துக்கு வால் துண்டிக்கப் பட்டது. முதலை சுமார் 5 மணி நேரம் ரத்த வெள்ளத்தில் தவித்துக் கொண்டிருந்தது. அதன் எடை சுமார் 70 ராத்தல். முதலையைப் பிடித்துக் கொண்டு வந்து இரும்பு வலையால் மூடப் பட்ட குட்டையில் விட்டு வேண்டிய சிகிச்சைகள் கால்நடை அதிகாரியின் மேற்பார்வையில் உடனே மேற்கொள்ளப்பட்டன. முதலையின் உடலில் இரத்த அழுத்தம் மிகக் குறைவாக இருந்ததால், இதயத் துடிப்பு மாறுபட்டு நெடு நேரம் சுய நினைவு இல்லாமல் இருந்தது. அதைத் தவிர்க்க ஊசியின் மூலமாக கார்டிஸோன், பெனிஸிலின், டெர்ராமைஸின், குளுகோஸ்சலைன் முதலிய மருந்துகள் செலுத்தப்பட்டன. இதுவே நாங்கள் முதல் முறையாக மேற்கொள்ளும் ''முதலை வைத்தியம்''. வாலில் உள்ள காயங்களுக்கு மேல் பூச்சு மருந்து போடப்பட்டது. முதலையைத் தண்ணீரில் விடாமல் கரையிலேயே வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறு எங்களால் இயன்ற வரையில் வைத்தியம் செய்தும் முதலையைக் காப்பாற்ற முடியவில்லையே என்று வருந்துகிறோம்.

முதலையின் தேக அமைப்பு பற்றிச் சில:

முதலையின் தேக உஷ்ணம் அது வசிக்கும் இடத்தை அனுசரித்து மாறுதல் அடையும். இவை சீதள ரத்தம் உள்ள பிராணிகள். இதனால் ஏதாவது காயம் ஏற்பட்டால் ரத்தத்தை எளிதில் தடுத்து நிறுத்த முடியாது. தேகத்தில் உள்ள ரத்தம் முழுவதும் ஒழுக முதலை எளிதில் மூர்ச்சையடைந்து உயிரை இழக்கக்கூடும்.

பெரிய முதலையானாலும் மிகச் சிறிய இதயம். அதுவுமல்லாமல் மற்றப் பிராணிகளுக்கு உள்ளது போல் 'டயாபிரம்' (Diaphragm) என்ற மாமிசத் திரை கிடையாது. ஆகையால் மார்பின் உள்பாகத்தில் இரத்தம் கசிந்தால் கீழ் பாகத்துக்கு வந்து சேர்ந்து உயிருக்கு ஆபத்தை உண்டுபண்ணும்.

டாக்டர் வி. வேங்கடநாராயணன்,
கால்நடை அலுவலர்,
சென்னை மாநகராட்சி

16-1-1934 — 16-1-1972

ஒத்த இந்த இரு தேதிகளும் ஒரு சுவையை உள்ளடக்கியுள்ளன. அது என்ன தெரியுமா?

''பங்காரு நாயுடு எழுந்து போய்க் காலண்டரில் வருஷத்தையும் தேதியையும் மாற்றினார். இப்போது அந்தக் காலண்டர் 1934ம் வருஷம் ஜனவரி மாதம் 16ந் தேதியைக் காட்டியது.''

'அலை ஓசை' முதல் பாகம், முதல் அத்தியாயத்தில் வரும் இப்பகுதியை யாவரும் படித்திருக்கலாம்.


அமரர் கல்கியின் 'அலை ஓசை' இப்போது மீண்டும் கல்கியில் வெளிவர ஆரம்பித்துள்ளதன்றோ! இந்தக் கல்கி இதழ் 16–1–1972 தேதியிட்டது. புரிகிறதா, இந்த இரு தேதிகளிலுள்ள சுவை!

கல்கி பொங்கல் மலரைச் சுவைத்த ஜோருடன் இந்தச் சுவையிலும் சற்றுத் திளைக்கலாந்தானே!

— வி. ச. வாசுதேவன்



இதிகாசப் போரும் இன்றையப் போரும்



ஸ்ரீ ராமபிரான் இலங்கையில் நிகழ்த்திய இதிகாசப் போருக்கும் தற்போது இந்தியா பங்களா தேசத்தில் அடைந்த வெற்றிக்கும் ஒரு முக்கிய ஒற்றுமையைக் காண்கிறோம். இரு போர்களிலுமே நாடு பிடிக்கும் ஆசை நமக்கு இருந்ததில்லை! இலங்கைப் பிரஜையான விபீஷணனையே அந்த நாட்டின் சம்பிரதாய வழக்கப்படி இலங்கை அரசனாக முடிசூட்டி மகிழ்ந்தான் ஸ்ரீராமன். ஸ்ரீமதி இந்திரா காந்தியும் பங்களா தேஷின் மக்கள் விருப்பப்படி அவர்களுக்கே அதிகாரத்தை வழங்கி விட்டார்!

- ஜி. இ. பி. ஏ. ஜர்னலில்
டாக்டர் டி. வி. குண்டப்பா



அமெரிக்க ஜனாதிபதிக்கு வரவேற்புக் கொடுக்க சீனா ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. முதல் ஏற்பாடு நாடெங்கும் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் அமெரிக்க எதிர்ப்பு வாசகங்களை அழிப்பது!

ஹிந்துஸ்தான் டைம்ஸ் - கே.ஆர்.



கொஞ்சுமிளம் தென்றலோ, குலவ வரும் மல்லிகையோ!

கம கமக்கும் மல்லிகை மணம். இளமை கொழிக்கும் மேனியெழில். இரண்டையும் உங்களுக்கு வழங்கவே ஜேய் அழகு சோப். வில்லை கரைந்தாலும் சுகந்தம் குறையாத அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. உங்கள் பைந்தளிர் மேனி என்றும் பதினாறாகப் புதுமையுடன் பொலிய உபயோகியுங்கள் ஜேய்—ஜிகினாத் தாளுறை தரித்த ஒரே அழகு சோப்!



உங்கள் புத்தெழில் பெருக ஜேய் அழகு சோப் மனங்கவர் மல்லிகை மணம் கமழ்வது.

டாடா தயாரிப்பு.



'ஜெய் பங்களா!'

1. வெற்றி வீரர் ஷேக் முஜீப்

''ஆமார் ஸோனார் பங்களா, அமி துமே பாலோ பாஷி'' என்ற அடிகள் சென்ற பத்து மாதங்களில் இன்று சுதந்திர நாடாகிவிட்ட வங்க தேசத்தில் பல கோடி முறைகள் உச்சாடனம் ஆகியிருக்கும். மகா கவி ரவீந்திர நாத் தாகூரின் காவியமான இந்த ''ஆமார் ஸோனார் பங்களா''வுக்கு அர்த்தம்: ''ஏ, பொன்னான வங்க தேசமே, நான் உன்னை அன்போடு நேசிக்கிறேன்.'' ஆம், பொன் போன்ற நாடு மட்டும் அல்ல. வாய்ப்புக் கொடுத்தால் பொன்னைப் போல் செல்வத்தைக் கொடுக்கக் கூடிய நீர் வளம், நிலவளம் படைத்த நாடு. பத்மா, மேக்னா போன்ற ஜீவ நதிகள் அலைபாய்கின்றன. வாழை, தென்னை, மாமரங்கள் எங்கு பார்த்தாலும் மண்டிக் கிடக்கின்றன. ஆகாய விமானம் வங்க தேசத்தின்மேல் பறந்து செல்லும் பொழுது கீழே ஒரு சௌந்தரியம் மிகுந்த மாது தன் கூந்தலை அவிழ்த்து விட்டுக் கொண்டு நீராடுவது போல் நதிகளும் உபநதிகளும் வளைந்து வளைந்து செல்லும் காட்சி நெஞ்சை அள்ளுகிறது.

(மேலே) விடுதலை பெற்று வந்த தலைவருக்கு டாக்காவில் அமோக வரவேற்பு.
(கீழே) கொளுத்திச் சாம்பலாக்கப்பட்ட ஷேக் முஜிபுர் ரஹ்மானின் கார்.



இந்த வங்க தேசத்தில் ஐம்பது வருடங்களுக்கு முன் பிறந்தார் ஷேக் முஜீபுர் ரஹ்மான். இந்தியா 1947ல் துண்டாடப்பட்ட பொழுது அவருக்கு வயது இருபத்தைந்து. கிழக்குப் பாகிஸ்தான் என்ற அரசியல் கோரத்தை என்றைக்கு வெள்ளையர்கள் உருவாக்கினார்களோ அன்று முதலே ஷேக் முஜீபுர் ரஹ்மான் ஜாதகத்தில் மோதல் என்ற அம்சம் குடிகொண்டது போலும்! பாகிஸ்தான் ஜனனம் ஆன சூட்டுடன் பாகிஸ்தானின் ஆட்சி மொழி உருது என்று அதன் தலைவர்கள் முடிவு செய்தார்கள். பாகிஸ்தானின் முடிவு அன்று கிழக்குப் பாகிஸ்தான் என்று நாமகரணம் செய்யப்பட்ட பகுதியில் ஆத்திரத்தை உண்டாக்கிற்று.

வங்காள மொழி, வங்க கலாசாரத்தைப் பற்றிச் சில வார்த்தைகள். வங்காளிமொழி வெகு மதுரமானது. சம்ஸ்கிருத வார்த்தைகள் அதிகமாக உள்ள மொழி. வங்காளிகள், ஹிந்துக்கள் முஸ்லிம்கள் உள்பட, தங்கள் மொழியை வெகுவாக நேசிப்பதுடன் அதன் வளர்ச்சிக்குத் தங்கள் கைங்கரியத்தையும் செய்துள்ளனர். தமிழ் நாட்டில் ''போப்'' ஐயர் தமிழுக்கும் அதன் வளர்ச்சிக்கும் தொண்டு புரியவில்லையா? அதைப் போல் வங்காள மொழி சம்பந்தப்பட்டவரை, மதம், ஜாதி, இனம் முதலிய பாகுபாடுகள் அதன் வளர்ச்சிக்குத் தடை செய்யவில்லை என்பதுடன் வங்க தேசியம் என்று இன்று சகஜமாக ஒப்புக் கொள்ளப்படும் தேசிய உணர்ச்சி வங்க மொழி மூலம் உருவாயிற்று. இந்த வங்க மொழிதான் வெள்ளையர்களையே பல்டியடிக்கச் செய்தது. லார்ட் கர்ஸான் வங்கத்தை இரு கூறுகளாகப் போட்டார். அதை எதிர்த்து வங்காளிகள் கிளர்ச்சி செய்தார்கள். ''வங்கப் பிரிவினை தீர்ந்துபோன விஷயம்'' என்று இறுமாப்புடன் பதில் சொன்னார் லார்ட் கர்ஸான். ''அப்படியா? தீர்ந்து போன விஷயத்தை மீண்டும் புனராலோசனை செய்யும்படி

கே. ஸ்ரீநிவாசன்

செய்வோம்'' என்று வங்காளிகள் மார் தட்டினார்கள்.' இறுதியில் இரு வங்கங்கள் ஒன்றுமின.

வங்கத்தில் ஹிந்து, முஸ்லிம் யார் என்று சொல்வது கஷ்டம். ஏனென்றால் இரு சமூகத்தினருக்கும் ஒரே பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள். மற்ற மாநில முஸ்லிம்கள் தலையில் குஞ்சலம் ஆடும் குல்லாய்கள் அணிவார்கள். உத்தரப் பிரதேசத்தில் 'ஷெர்வானி' என்ற நீண்ட கோட்டும் பைஜாமாவும் சாதாரணமாக முஸ்லிம்கள் அணிவது. வங்கத்தில் மட்டுமே முஸ்லிம்கள் ஹிந்துக்களைப் போலவே உடை உடுத்துவார்கள். கழுத்தைச் சுற்றி அழகாக அங்கவஸ்திரம் அணிவார்கள். ஜனாப் ஜின்னாவின் ''இரு குடி மக்கள்'' சித்தாந்த விஷம் பரவும்வரை வங்க முஸ்லிம்கள் வேஷ்டியை மூலக்கச்சமாகக் கட்டுவதுகூட உண்டு.



இந்த வங்க மொழியும் வங்க பிரத்தியேக கலாசாரமும்தான் கிழக்கு பாகிஸ்தான் என்ற ஒரு சரித்திர வாயிலாக உண்டான கோரத்தைக் குழி தோண்டிப் புதைத்துத் தனியான சுதந்திர வங்கத்தை மக்களுக்குக் கொடுத்துள்ளது. இந்தப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான். மயிலே, மயிலே இறகு போடு என்றால் மயில் இறகு போடுகிறதா? இறகைப் பலவந்தமாகத்தானே பிடுங்க வேண்டி வருகிறது? அதே மாதிரி பாகிஸ்தான் மயிலிடமிருந்து வங்க தேசத்தைப் பெறக் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் இவ்வளவு கோரமான அடக்குமுறை ஏற்படும், முப்பது லட்சம் மக்கள் ஈசல்கள் மடிவதைப் போல் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்று யார் எதிர்பார்த்திருக்க முடியும்? ஷேக் முஜிபுர் ரஹ்மான்கூட எதிர்பார்க்கவில்லை.

''வங்க தேசத்தை அடைந்தே தீருவோம்'' என்று மாணவர்கள் பல தடவை கொதித்தெழுந்துள்ளார்கள். முஜீபுர் ரஹ்மானும் ஒரு மாணவர் தலைவராகத்தானே முதலில் மக்களுக்கு அறிமுகமானார்? அவர் சுதந்திர வங்கம் என்றால் மேற்குப் பாகிஸ்தானிகளுக்கு ரத்த அழுத்தம் அதிகமாகும் என்று அறிந்தவர். ஆகையால் அவர் கோரியதெல்லாம் கிழக்குப் பாகிஸ்தானில் வாழ்ந்த ஏழரைக் கோடி மக்களுக்கு வாழ வழி, நியாயமான அரசு, மாநில சுயாட்சி. இதை அடைய ஆறு அம்சத் திட்டத்தை வகுத்திருந்தார்.

கிழக்கு வங்க மக்களின் குறைகள்தான் என்ன? இதை எழுதத் தனி அத்தியாயம் தேவை. இங்கு சொல்ல வேண்டியதெல்லாம் இதுதான்: பாகிஸ்தான் உருவானபொழுது அதற்கு அஸ்திவாரம் போட்டவர்கள் உத்தரப் பிரதேசத்தில் வாழ்ந்த நிலச்சுவான்தார்களும், பஞ்சாபில் இருந்த ஜமீன்தார்களுமே. பாகிஸ்தான் உண்மை, கனவு அல்ல என்று தெரிந்தது முதல் இவர்கள்தான் அரசில் அமர்ந்து அட்டகாசம் செய்ய முற்பட்



★ வங்க பந்து தம் அலுவலகத்துக்கு வருகிறார்.

★ பாகிஸ்தான் துருப்புக்களால் நிர்மூலமாக்கப் பட்ட ஷேக் முஜிபுர் ரஹ்மானின் பத்திரிகாலயம்- வெளித்தோற்றம்.

★ டாக்கா விமான நிலையத்தில் முஜிபுர் ரஹ்மானுக்கு அன்புத் தொல்லை.



டார்கள். ஜனத்தொகை சம்பந்தப்பட்ட வரையில் கிழக்குப் பகுதியில்தான் அதிக மக்கள் வாழ்ந்தார்கள். ஆனால் பாகிஸ்தானின் மத்திய அரசில் செல்வாக்கு பஞ்சாபி முஸ்லிம்களுடையதே. அரசில் அதிகாரிகள் அதிகப்படி பஞ்சாபி முஸ்லிம்கள், ராணுவத்திலும் பஞ்சாபி முஸ்லிம்கள்தான் தாண்டவம் புரிந்தார்கள். வர்த்தகத் துறையிலும் அகப்பட்டதை அடித்துக் கட்டும் பஞ்சாபி முஸ்லிம்கள் யாருக்கும் எதையும் விட்டு வைக்கவில்லை.



இதனால் கிழக்கு வங்கத்தை மேற்கு பாகிஸ்தான் குடியேற்ற நாட்டைப்போலவே மதித்து வந்தது. மத்திய அரசில் கிழக்குப் பகுதியினருக்குச் சரி பாதி பங்கு கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக 36 சதமே கிடைத்தது. 1969ல் கூட அதிபர் யாஹ்யா கானின் அதிகாரிகள் குழுவில் 19 காரியதரிசிகளில் மூன்றே பேர்தான் வங்காளிகள்.

இந்தியாவை மூன்று முறை தாக்கும் அளவுக்கு பாகிஸ்தான் ராணுவத்தை ஒரு பூதமாக சிருஷ்டித்தார்கள் அமெரிக்கப் புண்ணியவான்கள். பாகிஸ்தான் ராணுவத்தில் மூன்று லட்சம் நபர்கள் இருந்தனர். அதில் பல டஜன் உயர்ந்த அதிகாரிகள் இருந்திருப்பார்கள். குறைந்தது 50 அதிகாரிகள் மேஜர் ஜெனரல், லெப்டினன்ட் ஜெனரல் அந்தஸ்து உள்ளவர்கள். அதில் ஒரே ஒரு கிழக்கு வங்காளி லெப்டினன்ட் ஜெனரல். பாகிஸ்தான் விமானப் படையில் உயர் மட்டத்தில் வங்காளி அதிகாரிகளே கிடையாது.



கிழக்கு வங்கத்தில் படித்த இளைஞர்களுக்கு உத்தியோக வாய்ப்புகளோ அல்லது தாங்களே தங்களுக்குப் பிழைப்பைத் தேடிக் கொள்ளும் மார்க்கமோ இல்லாமற் போயிற்று. வளம் கொழிக்கும் வங்கத்தில் விளையாத பொருள் எது? உலக நாடுகளில் சணல் பொருள்களுக்கு கிராக்கி நிறைய உண்டு. அவைகளுக்குத்தேவையான சணலை வங்க தேசம் உற்பத்தி செய்து வந்தது. சணல் மூலம் கிடைத்த அந்நியச் செலாவணியை மேற்குப் பாகிஸ்தான் ஆனந்தமாகத் தன் பொருளாதாரத்தை மேம்படுத்த உபயோகித்தது. வங்க தேசத்துத் தேயிலைக்கு பிரிட்டனில் கிராக்கி உண்டு. அதன் மூலம் கிட்டிய அந்நியச் செலாவணியையும் மேற்குப் பாகிஸ்தான் கபந்தன் விழுங்கினான். சணலுக்கு ஓர் அப்துல்லா, தேயிலைக்கு ஓர் ஆடம்ஜி, பேப்பர் பொருள்களுக்கு ஒரு பாப்பட்மால் என்று மேற்குப் பாகிஸ்தானின் 22 பண மூட்டைக் குடும்பங்கள் பொருளாதாரத்தை வளைத்துக் கட்டின. திமிங்கலங்களும் சுறா மீன்களும் நடமாடிய கடலில் சிறு மீன்கள் பிழைக்க முடியுமா?


இவ்வளவு கேவலமான பொருளாதார நிலவரம் உள்ள வங்க தேசத்தில் காந்தம் போல இயங்கிய ஷேக் முஜிபுர் ரஹ்மான் பலதரப்பட்ட மக்களின் மனத்தைக் கவர்ந்ததில் வியப்பு ஏதுமில்லை. எப்படித் துண்டிக்கப்படாத வங்கத்தில் நேதாஜி சுபாஷ் போஸ் துருவ நட்சத்திரம் போல் சுடர் விட்டுப் பிரகாசித்தாரோ அதே போல ஷேக் சாகிபும் வங்க தேசத்து வானில் உயர்ந்து கொண்டே போனார். மக்கள் நன்மை, நாட்டின் நலம், மாணவ சமூகத்தின் மேம்பாடு தாழ்ந்துபோன கிராம வாசிகளைக் கைதூக்கி விடுவது ஆகியவை முஜிபுர் ரஹ்மானின் அரசியல் செயல்பாட்டின் அடிப்படை. இந்தக் குறிக்கோள்களை முன் வைத்து அவருடைய அவாமி லீக் 1970ம் ஆண்டில் டிஸம்பர் மாதம் நடந்த தேர்தலில் குதித்தது. அது வரலாறு காணாத வகையில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் உருவாகி இன்று இருபத்தைந்து வருடங்களாகின்றன. இதில் சரிபாதி ராணுவ ஆட்சி. தொட்டதற்கெல்லாம் ''மிலிடரி எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று சொல்பவர்களுக்குப் பாகிஸ்தானின் சரித்திரம் ஒரு படிப்பினை. எப்படி அயூப் கானில் ஆரம்பித்த ராணுவ ஆட்சி யாஹ்யா கானின் ஆட்சிக் காலத்தில் உலக்கை தேய்ந்து உளிப்பிடி ஆன கதைபோல் இறந்தது என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து படிக்கலாம். ராணுவத் தலைமை அரசியல் தலைமையைவிட சிறந்ததாக இருக்க முடியாது என்பதை பங்களா தேஷ் விடுதலை நிரூபித்தது.



1970ம் ஆண்டில் மத்திய சட்டசபைக்

அன்னத்தின் மென்னழகு மின்னிடும் உங்கள் முகத்தில்...



மென்துகிலாய் பொலியும் போலிமி புடவைகள், ஜார்ஜெட்டுகள், நைலான்கள்-
சாதாரண மற்றும் பிரிண்டுகள் - போலிமி புடவைகள் - பெண்மைக்களிக்கும்
சீர் வரிசைகள். மதிமயக்கும் உடுப்புத் துணிகள் - ஆண்களுக்கும்
பெண்களுக்கும் போலிமியின் கைவரிசை.

தி பாம்பே ஸில்க் மில்ஸ் லிட்.,
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், லால்பாக், பம்பாய்-12.

மெஸர்ஸ் G. I. மிர்புரி, 137, பீமசேனா கார்டன் ரோடு, மயிலாப்பூர், சென்னை - 4
மெஸர்ஸ் ரமண்லால் D. ஷா, மெஜூட்டி பிரஹ்லாத ராவ் பில்டிங், இரண்டாவது மாடி
11-25, 15, கொத்தபேட், விஜயவாடா - 1
மெஸர்ஸ் குலாப் K. ஷா, (மெஸர்ஸ் அனந்தலக்ஷ்மி ஏஜன்ஸீஸ்)
53, மார்க்கெட் தெரு, குகை, சேலம் - 6
மெஸர்ஸ் KN. பரமசிவன், 108, தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை - 1
மெஸர்ஸ் யுனிவர்ஸல் டிரேடிங் கார்ப்பொரேஷன், தேவஸ்தா மார்க்கெட், சிக்பேட், பெங்களூர்-2A
சர்வோதயா கார்ப்பொரேஷன், 12, கைலாஸ் மார்க்கெட், செகந்திராபாத் - 3

டெட் சலவை செய்யும் கட்டி
டெடர்ஜென்ட் சக்தி செறிந்தது





டெட் டெடர்ஜென்ட் சலவைக் கட்டி
சோப்பைவிட 50% அதிக துணிகளை, அதிவெண்மை- யாக சலவை செய்கிறது

—மென்னீரிலும், சாதாரணமாக நுரைவிடாத நீரிலும்

Shilpi HPMA.r.5/70 TM

கும் கிழக்குப் பாகிஸ்தான் மாநில சட்ட சபைக்கும் தேர்தல்கள் நடந்தன. பாகிஸ்தானில் அரசியல் சாஸனம் ஏற்படுத்துவது ஒரு கேலிக் கூத்து. பஞ்சாபில் வழக்கறிஞர் தங்கள் வழக்கு ஜெயிக்கும்வரை கீழ் மட்டத்திலிருந்து எல்லாவற்றுக்கும் உயர்ந்த கோர்ட்டுக்குப் போகும்படி தங்கள் கட்சிக்காரர்களைத் தூண்டுவார்கள். கேஸ் நல்லதா அல்லது உளுத்துப் போனதா என்பது பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை.

அதே மாதிரிதான் பாகிஸ்தானின் ராணுவத் தலைவர்களும். அதிபர் அயூப் கான் அரசியல் சாஸனம் ஒன்று உருவாக வேண்டும், பாகிஸ்தானின் சரித்திரத்தில் உண்டான அரசியல் இடர்ப்பாடுகளை மனத்தில் வைத்துக் கொண்டு அவைகளுக்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று பசப்பினாரே தவிர உண்மையில் மக்களுக்கு அதிகாரத்தை மீண்டும் கொடுக்கும் அபிப்பிராயம் அவருக்கோ இதர ராணுவத் தலைவர்களுக்கோ கிடையாது. ஆனால் அயூப் கானின் ஆட்சிக்கு ஆப்பு வைத்தது அரசியல்வாதிகளின் ஒன்றுபட்ட ஆர்ப்பாட்டம். 'வால் போச்சு கத்தி வந்தது டும் டும்' என்று அயூப் கான் அடித்த மேளத்தை யாஹ்யா கான் முழங்கத் தொடங்கினார்.

ஜெனரல் யாஹ்யாகான் என்னென்ன அரசியல் சூழ்ச்சிகள் செய்தார் என்பதைப் பின்னர் கவனிப்போம். தேர்தலில் அவாமி லீகுக்கு அதிகப்படி ஸ்தானங்கள் கிடைக்காது, அரசியல் சாஸனத்தை உருவாக்க வேண்டிய பொறுப்புள்ள மத்திய சட்டசபையில் இன்று அதிபராயுள்ள புட்டோவுக்கோ அல்லது ஷேக் முஜீபுர் ரஹ்மானுக்கோ அதிகப்படி ஸ்தானங்கள் கிடைக்காது என்று மனப்பால் குடித்தார். தேர்தலுக்கு முன் பாகிஸ்தானில் 36 கட்சிகள் இருந்தன! ஆகையால் ஒன்றின் குரல்வளையை மற்றொன்று பிடித்துக் கொள்ளும் என்று ஜெனரல் யாஹ்யா கான் எதிர்பார்த்ததில் தவறு ஏதுமில்லை. வங்க தேசத்தில் மக்களின் ஆத்திரம் கரை புரண்டு ஓடுவதையும் அதைப் பயன்படுத்திக் கொள்ள ஷேக் முஜீபுர் ரஹ்மான் காத்திருந்ததையும் அவர் அறியவில்லை. ஆகவே 313 ஸ்தானங்கள் உள்ள சட்ட சபையில் ஷேக் முஜீபுர் ரஹ்மான் 169 ஸ்தானங்களைப் பிடித்ததும் ஜெனரல் யாஹ்யா கானுக்கு அஸ்தியில் ஜுரம் கண்டது. கிழக்கு வங்கம் பாகிஸ்தானின் ஜனத்தொகையில் பாதிக்கு மேல் கொண்டது. தேர்தல் முடிவுகள் கிழக்கு வங்கம் பாகிஸ்தானில் வகுத்ததே வாய்க்கால் என்று தெளிவாக்கின. ஷேக் முஜீபுர் எந்தத் தலைவர் வீட்டுப் பந்தக்காலையும் கட்டிக் கொண்டு நிற்க வேண்டியதில்லை.

இந்த அசைக்க முடியாத நிலையில் இருந்த ஷேக் முஜீபுர் ரஹ்மான் பாகிஸ்தான் மீண்டும் கிழக்கு வங்கத்துக்கு அநீதி செய்யாமல் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார். பாகிஸ்தானின் அதிபர் யாஹ்யா கானுடன் அவருடைய சதிகாரக் கும்பலுடன் மோதுவதைத் தவிர்க்க முடியாது என்பது அவருக்குத் தெரியும். அவருக்குத் தெரியாதது ஜெனரல் யாஹ்யா கானும் அவர் சகாக்களும் அரசியல் அறிவிலிகள், பாகிஸ்தானின்

★ ஜனாதிபதி ரொம்பவும் நம்பகமானவர் என்று தாம் கருதுபவரோடு ஆலோசனை நடத்துகிறார்.

- அதாவது தனியாக இருக்கிறார்.



★ "மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை நிறுத்த முடியும்" - அதைப் பாடத் திட்டத்தோடு சேர்த்து விட்டால்!

மேட் - பாலி



★ சாதாரணமாக இரயில் வரும் பொழுது கதவு மூடப்பட்டு மற்ற வாகனங்கள் நிற்கவேண்டி வரும். ஆனால் ரஷ்யாவில் குறிப்பிட்ட நாட்களில் இரயிலுக்கே வழி மூடப்பட்டுவிடும்! சைபீரியாவுக்குள் இளவேனில் காலத்தில் குறிப்பிட்ட ஆறேழு நாட்கள் நடு இரவு பன்னிரண்டிலிருந்து காலை ஏழு மணி வரையில் இரயில்கள் செல்ல அனுமதிக்கப்படாது. துடின்கா இரயில் பாதையில் காரணம், சுமார் முப்பது லட்சம் மான்கள் பருவமாறுதலையொட்டிக் குளிர் சூழ்நிலையை எதிர்நோக்கி இரயில் பாதைக்கு ஒருபுறமுள்ள காட்டிலிருந்து மறுபுறம் நீண்ட தூரத்திலுள்ள காடுகளுக்கு மந்தை மந்தையாகச் செல்லுமாம்.

சோவியத் யூனியன்
- கீகாலன்




பொன் விளையும் பகுதியைக் கோட்டைவிடப் போகிறார்கள் என்பது.

வந்தது 1971ம் வருடம் மார்ச் மாதம். அதிபர் யாஹ்யா கான் டாக்கா நகரத்தில் முகாம் செய்தார், ஷேக் முஜீபுர் ரஹ்மானுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக; அரசியல் முட்டுக் கட்டையை அகற்றுவதற்காக. முட்டுக்கட்டையை யார் போட்டார்கள் என்பது பின்னர் தெளிவாகும். சில தினங்கள் டாக்காவில் முகாம் செய்த அதிபர் யாஹ்யா அடக்குமுறை, படுகொலை, கற்பழிப்பு முதலியவை மூலம் வங்க மக்களை ஒடுக்கலாம் என்று எதிர்பார்த்தார். ஷேக் சிறைபிடிக்கப்பட்டார்.

ஷேக் முஜீபுர் ரஹ்மான் தனியராக ரகசியமாக மேற்குப் பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்டார். 1972ம் வருடம் ஜனவரி மாதம் அவர் டாக்கா திரும்பியபோது தலைநகரமே இரண்டு விமான தளத்தை முற்றுகையிட்டது. "ஜெய் பங்களா" என்ற கோஷம் பல்லாயிரம் மெஷின் துப்பாக்கிகளின் சப்தத்தையும் அடக்கிவிடத் தக்கதாயிருந்தது. அதைவிட அதிகமாகக் கிடுகிடுக்க வைத்த முழக்கம் ஒன்றும் இருந்தது: "வங்க தேசம் சுதந்திர சோஷலிஸ, மதச்சார்பற்ற நாடு. நமக்கும் பாகிஸ்தானுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது!" — இந்த கர்ஜனை ஷேக் முஜீபுர் ரஹ்மானிடமிருந்து வந்தது.

(தொடரும்)

புதிய
ரேம்கோ ஜுகல்பந்தி



க்ராஸ்
ஓவர்
சவுண்ட்

வேறு எந்த ரேடியோவும் ஈடு செய்ய முடியாத அம்சங்களுடன்!

மிக உயர்ந்த வெளிப்படுதிறன்: 10 வாட்
மிகக் குறைந்த தொனிச்சிதைவு: 75%
வெளிப்படுதிறனில் சிதைவு 1%.
3 ஸ்பீக்கர்களுடன் "க்ராஸ்-ஓவர் ஸிஸ்டம்"

5 பாண்ட், 7 வால்வுகள், ஃபைன்
ட்யூனிங்குடன். விலை ரூ. 975/- (வரிகள் தனி).

ரேம்கோ

ரேடியோ & எலெக்ட்ரிகல்ஸ்
மேன்யுஃபேக்சரிங் கோ. லிட்.,
மைசூர் ரோடு, பெங்களூர்-26.

மைசூர், கோவா, தமிழ்நாடு, காரைக்கால்
மற்றும் பாண்டிச்சேரிக்கு விநியோகஸ்தர்கள்:

ஹெகடே அண்ட் கோ.,
குப்தா மார்க்கெட், கெம்பகவுடா ரோடு,
பெங்களூர்-9 மற்றும் 11, அகர்சந்த்
மேன்ஷன், 35, மவுண்ட் ரோடு, சென்னை-2.

SISTA'S-RR 306 TAM

அலை ஓசை

7. பத்மாபுரம்

சென்னைப் பட்டினத்தின் ஒரு புதிய பகுதியான பத்மாபுரத்தைப் பற்றி அறியாதவர்கள், அறியாதவர்களே ஆவர். தினப் பத்திரிகை வாசகர்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளியாகும் பத்திரிகையில் நகர நிகழ்ச்சிக் குறிப்புகளில் 'பத்மாபுரம்' என்ற பெயரைக் கட்டாயம் படித்திருப்பார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை அன்றும் பத்மாபுரம் சர்வக்ஞ சங்கத்தின் ஆதரவில் ஏதேனும் ஒரு கூட்டம் கட்டாயம் நடந்தே தீரும். அந்தக் கூட்டத்தில் யாரேனும் ஓர் அரசியல் நிபுணரோ அல்லது பிரசித்தமான சமூகப் பிரமுகரோ அல்லது இலக்கிய மகா வித்வானோ உபந்நியாசங்கள் செய்தே தீருவார். திங்கட்கிழமை தினப் பத்திரிகை



அமரர்
கல்கி

களில் முக்கியமான இடத்தில் இரண்டு பத்தியை மேற்படி உபந்நியாசங்கள் அடைத்துக் கொண்டு மற்றச் செய்திகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடும்.

பிரசங்கசாகர உபந்நியாச ரத்னாகர படாடோப பயங்கர பிருந்தாவனாச்சாரியாருக்கு எண்பத்தேழாவது அப்த பூர்த்தி விழா ஒரு சமயம் வந்தது. அதை இந்தப் பரந்த உலகத்தில் யாருமே கவனியாமல் இருந்துவிட்டார்கள். ஆனால், பத்மாபுரம் சர்வக்ஞ சங்கத்தார் சும்மா விட்டுவிடவில்லை. ''உலகமெல்லாம் கொண்டாடாமல் விட்டாலும் நாங்கள் கொண்டாடுவோம். மேதாவியின் பெருமையை எங்களைப் போன்ற மேதாவிகளால்தான் அறிய முடியும்; மற்றவர்களாலே எப்படி முடியும்?'' என்று சொன்னார்கள். எண்பத்தேழு அங்குல நீளம், எண்பத்தேழு அங்குல அகலம், எண்பத்தேழு அங்குல உயரமுள்ள ஒரு மகத்தான பிரசங்க மேடையை அமைத்தார்கள். எண்பத்தேழு கால் நாட்டிப் பந்தல் போட்டார்கள். ஐன்ஸ்டீன், ரோமேன் ரோலண்டு, ரொனால்டு கால்மென், பெர்னார்டு ஷா, மிக்கி மவுஸ் முதலிய உலகப் பிரமுகர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பினார்கள். அன்று மாலையில் பத்மாபுரத்தில் பார்த்தால் ஒரே அல்லோலகல்லோலமாய் இருந்தது. அன்றைய கூட்டத்தில் தினப் பத்திரிகை நிருபர்கள் மட்டும் பதினைந்து பேர்கள் வந்திருந்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அந்தப் பதினைந்து

பத்திரிகை நிருபர்களும் பத்மாபுரத்தில் சொந்த வீட்டிலோ அல்லது வாடகை வீட்டிலோ குடியிருப்பவர்கள். எனவே, அவர்கள் சபையோர்களாகவும் விளங்கு வார்கள்; பத்திரிகை நிருபர்களாகவும் தங்கள் கடமையைச் செய்வார்கள்.

பத்மாபுரம் சர்வக்ஞ சங்கத்தின் ஆதரவில் கூட்டம் என்றால் எப்படிப் பட்ட பிரமுகர்களும் உடனே பிரசங்கம் செய்ய ஒப்புக் கொள்வதன் இரகசியம் இதுதான். பத்மாபுரத்தில் முப்பது பேர் அடங்கிய சபையில் பிரசங்கம் செய்வதும் சரி, வேறு எங்கேயாவது முப்பதினாயிரம் ஜனங்கள் அடங்கிய சபையில் பிரசங்கம் செய்வதும் சரி என்பது உபந்நியாசகர்களின் உலகத்தில் சகலரும் அறிந்த உண்மை. ஆகவே, பத்மாபுரம் சங்கத்திலிருந்து பேசுவதற்கு அழைப்பு வந்துவிட்ட தென்றால் ஹைகோர்ட் ஜட்ஜுகள் என்ன, அரசியல் தலைவர்கள் என்ன, பேராசிரியர்கள் என்ன, பிரசங்க கான மேகங்கள் என்ன, சங்கீத கலாநிதிகள் என்ன — யாராயிருந்தாலும் பெருமிதம் அடைந்து மகிழ்வார்கள்.

பத்மாபுரத்தைப் பற்றி எதற்காக இவ்வளவு வர்ணனை? — என்று வாசகர்கள் கேட்கலாம். எம் அன்பார்ந்த தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகளே! பத்மாபுரத்தைப் பற்றி நாம் இத்தனை தூரம் வர்ணிப்பதற்குத் தகுந்த முகாந்திரம் இருக்கிறது. அசைக்க முடியாத காரணங்கள் இருக்கின்றன. (கேளுங்கள் கேளுங்கள்!) ....சரிதான்! பத்மாபுரத்துப் பிரசங்க ஆவேசம் நம்மையும் பிடித்துக் கொண்டது; மன்னிக்கவும்.

நம்முடைய கதையின் பிரதான கதாநாயகனை ஸ்ரீ சௌந்தரராகவன் தற்சமயம் பத்மாபுரத்தில் இருக்கிறான் என்று சொன்னால், அதற்கு மேலே வேறு என்ன சொல்ல வேண்டும்? பத்மாபுரத்தைப் பற்றி எவ்வளவு வர்ணனை செய்தாலும் அதிகமாகிவிடாதல்லவா?

பத்மாபுரத்தில் மொத்தம் பன்னிரண்டு வீதிகள் உண்டு. ஒவ்வொரு வீடும், முன்னாலும், பின்னாலும் இருபுறமும் தோட்டமுள்ள பங்களாக்கள். அநேகமாக எல்லா வீடுகளும் மச்சு வீடுகள். மாடி இல்லாத வீட்டைப் பத்மாபுரத்துப் பன்னிரண்டு வீதிகளிலும் தேடினால் ஒரு வேளை எங்கேயாவது





ஒன்று இரண்டு இருக்கலாம். அவையும் மற்றப் பெரிய மச்சு வீடுகளுக்குமத்தியில் தாம் இருப்பது பற்றி வெட்கப்பட்டுக் கொண்டு சுற்றிலுமுள்ள மரங்களினால் தங்களை மறைத்துக் கொண்டு நிற்கும்.

பத்மாபுரத்து மாடி வீடுகளுக்குள்ளே ஒரு மாடி வீடு தனி அந்தஸ்துடன் தலை நிமிர்ந்து நின்றது. அதனுடைய வாசல் கேட்டின் இரு பக்கத் தூண்களிலும் இரண்டு கரும் பளிங்குக் கற்கள் பதிக்கப் பட்டிருந்தன. அவற்றுள் ஒன்றில், ''தேவி ஸதனம்'' என்றும், இன்னொன்றில் ''ராவ் பகதூர் பத்மலோசன சாஸ்திரி பி. ஏ., பி. எல். மாஜி சப்-ஜட்ஜ்'' என்றும் எழுதப்பட்டிருந்தன.

பத்மாபுரத்தில் வசித்த பிரமுகர்களிலே ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரிகள் முதன்மை பெற்றவர். பத்மாபுரம் சர்வக்ஞ சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் எந்தக் கூட்டத்திலும், பிரசங்க மேடைக்குப் பக்கத்தில் போடப்படும் கௌரவ நாற்காலிகளிலே முதல் நாற்காலியில் ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரிகளையும் அவருடைய வெள்ளிப் பூண் போட்ட கைத்தடியையும் காணலாம்.

ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியாரை இன்னும் சில இடங்களிலேயும் அந்தக் காலத்து மனிதர்கள் கண்டிருக்கலாம். ஆங்கில தினப் பத்திரிகைகளில் நேயர்களின் கடிதப் பத்தியில் அடிக்கடி அவருடைய பெயர் தென்படுவதுண்டு. முக்கியமாக ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியும் பேராசிரியர் பரிவிராஜக சர்மாவும் அவ்வப்போது நடத்திக் கொண்டிருந்த யுத்தங்கள் உலகப் பிரசித்தமானவை. எப்போதாவது காந்தி மகாத்மாவோ பண்டித மதன் மோகன் மாளவியாவோ ஆசிரியர் ராதாகிருஷ்ணன் அவர்களோ தங்களுடைய பொதுப் பேச்சுக்களில் பகவத்கீதையைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டார்களானால், வந்தது விபத்து. உடனே ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியார் தமது கைத்தடியை எடுத்துச் சுவரின் மூலையில் சாத்திவிட்டுக் கையிலே தம்முடைய 'ஆய்வந்த' உலக்கைப் பௌண்டன் பேனாவை எடுத்துக் கொள்வார்; எடுத்துக் கொண்டு எழுதத் தொடங்குவார். எழுதுவார், எழுதுவார், அப்படியே எழுதுவார். எழுதியதைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு கையில் மறுபடியும் தடியை எடுத்துக் கொண்டு பத்திரிகைக் காரியாலயத்துக்குப் போய்ப் பத்திரிகாசிரியரை நேரிலே பார்த்துத் தமது கடிதத்தைக் கொடுப்பார். கடிதத்தில் என்ன எழுதியிருக்கும் என்று தெரிய வேண்டுமா? காந்திஜிக்காவது, மாளவியாஜிக்காவது, ராதாகிருஷ்ணனுக்காவது பகவத்கீதையைப் பற்றிப் பேசுவதற்கு என்ன யோக்யதை என்பதாக ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டு, அவர் குறிப்பிட்ட பகவத்கீதை சுலோகத்துக்கு அர்த்தம் இப்படி என்று எடுத்துக் காட்டுவார். அந்தச் சுலோகத்தை அவர்கள் தப்பாகக் கையாண்டிருப்பதை எடுத்துக் காட்டி, இனிமேல் மேற்படியாளர்கள் வேறு எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் பகவத்கீதையைப் பற்றி மட்டும் பேசவேண்டாம் என்று எச்சரிக்கை செய்து முடித்திருப்பார்.


சாஸ்திரிகளின் கடிதம் பிரசுரமான இரண்டு நாளைக்கெல்லாம் பரிவிராஜக சர்மாவின் கடிதம் பிரசுரமாகும் என்று வாசகர்கள் நிச்சயமாக எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகாது. சர்மாவின்

கடிதமும் அச்சில் வரும். அதில் சர்மா வானவர் காந்திஜியையும் மாளவியா வையும் பற்றிச் சாஸ்திரியார் எழுதி யிருப்பதை ஒப்புக் கொண்டு பலமாக ஆதரிப்பார். ''அவர்களுக்கெல்லாம் பகவத்கீதையைப் பற்றி ஒன்றும் தெரியாது; ஒன்றுமே தெரியாது; தங்களுக்குப் பகவத் கீதையைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது'' என்று சொல்லிவிட்டு, ''ஆனால்'' என்று ஆரம்பிப்பார். ஆரம்பித்து ஓர் அதிசயமான கேள்வியைப் போடுவார். ''ஆனால் நமது ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரிக்கு மட்டும் பகவத்கீதையைப் பற்றித் தெரியுமா? பகவத்கீதையை அவர் குருமுகமாகப் பாடங் கேட்டதுண்டா? பாராயணம் செய்ததுண்டா? பகவத் கீதையைக் கண்ணாலாவது அவர் பார்த்தது உண்டா? அப்படிப் பார்த்திருந்தாரானால் பகவத்கீதையின் பதினோராவது அத்தியாயத்தில் இருபத்தேழாவது சுலோகத்தைக் குறிப்பிட வந்தவர் இருபத்தெட்டாவது சுலோகத்தை எதற்காகக் குறிப்பிட்டார்? அதையாவது சரியாகக் குறிப்பிட்டாரா? இருபத்தெட்டாவது சுலோகத்தில், 'அர்ச்சுனா! என்னைப் பார்!' என்று பகவான் அருளியதாகச் சொல்லியிருப்பது எவ்வளவு அசம்பாவிதம்? 'என்னைப் பார்!' என்று பகவான் சொன்னாரா? சாஸ்திரியாரே! பகவத்கீதை புஸ்தகத்தை எடுத்துக் கண்ணையும் கண்ணாடியையும் நன்றாகத் துடைத்துக் கொண்டு பாரும். பாரும், ஐயா பாரும்! என்னைப் பார் என்று பகவான் சொல்லி யிருக்கிறார்? அப்படிச் சொல்லியிருந்தால் அவர் பகவான் ஆவாரா? 'என்னைப் பார்ப்பாயாக!' என்றல்லவோ பகவான் சொல்லியிருக்கிறார்? 'என்னைப் பார்!' என்பதற்கும், 'என்னைப் பார்ப்பாயாக!' என்பதற்கும் மலைக்கும் மடுவுக்கும் ஆனைக்கும் பூனைக்கும் எருமைக்கும் எறும்புக்கும் உள்ள வித்தியாசம் உண்டு என்பது தெய்வீக சமஸ்கிருத பாஷையில் அ, ஆ படித்திருக்கும் குழந்தைக்கும் கூடத் தெரியவரும். ஆனால் இரண்டு குட்டிச்சுவர்களுக்கு ஆன வயதாகியிருக்கும் பத்மலோசன சாஸ்திரிக்கு அது எங்கே தெரியப்போகிறது? சமஸ்கிருதம் என்பது என்னவென்று அவருக்குத் தெரிந்தால் அல்லவா பகவத்கீதையைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்? 'என்னைப் பார்!' என்பதற்கும், 'என்னைப் பார்ப்பாயாக!' என்பதற்குமுள்ள அஜகஜாந்தரமான வித்தியாசத்தைச் சாஸ்திரியாரால் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்!''

இப்படியாகப் பேராசிரியர் பரிவிராஜக சர்மா வெளுத்து வாங்கியிருப்பார். ஆனால் அந்த வெளுப்புக்கெல்லாம் பயந்து போகிறவரா சாஸ்திரியார்? 'வெளுப்பானுக்கு வெளுப்பான் வண்ணாரச் சின்னான்' என்பது போலச் சாஸ்திரியார் மறுபடியும் பேனாவை எடுப்பார். சர்மாவின் கடிதத்தையும் அவருடைய யோக்கியதையையும் அக்கு வேறு ஆணிவேறாகப் பிய்த்தெறிந்து இன்னொரு கடிதம் எழுதிப் பத்திரிகைக் காரியாலயத்துக்கு எடுத்துச் சென்று பத்திரிகாசிரியரை நேரில் பார்த்து அதைப் பிரசுரிக்கச் செய்வார். இவ்விதம் குறைந்த பட்சம் ஆறு மாதம் சாஸ்திரியாருக்கும் சர்மாவுக்கும் வாதப் போர் நடந்த பிறகு, ''இத்துடன் இந்த விவாதம் முற்றுப் பெற்றது'' என்று பத்திரிகாசிரியர் குறிப்பு எழுதி முடிப்பது வழக்கம்.

ஆனால் நாளது 1934ம் வருஷம் ஜனவரி மாதம் பிறந்து தேதி இருபத்தொன்று ஆகியும் இதுவரையில் அவர்களுக்குள் விவாதம் ஒன்றும் ஆரம்பமாகவில்லை. இதற்குக் காரணம் சில காலமாக ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியார் தமது இரண்டாவது குமாரனாகிய சௌந்தர ராகவனைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருந்ததுதான்.

சாஸ்திரியின் மூத்த குமாரனாகிய சங்கரநாராயணனைப் பற்றி ஏற்கனவே சாஸ்திரியாருக்கு ஒரு வகையில் ஏமாறம் உண்டாகியிருந்தது. சங்கரநாராயணன் நல்ல புத்திசாலிதான்; பள்ளிக்கூடத்திலும், கலாசாலையிலும் நன்றாகப் படித்து நல்ல மார்க்குகள் வாங்கி முதல் வகுப்பிலேயே எப்போதும் தேறிக் கொண்டு வந்தவன்தான்; சாஸ்திரியாருக்குப் புதல்வனாய்ப் பிறந்து படிப்பிலே சோடையாகிவிடுவானா? பி.ஏ. பரீட்சையில் தேறி, எம்.ஏ., பரீட்சையில் தேறி, பி. எல். பரீட்சையிலும் எம். எல். பரீட்சையிலும் பிரமாதமாகத் தேறி, அப்புறம் பாஸ் செய்வதற்கு வேறு பரீட்சை இல்லையே என்று சில காலம் தவித்துவிட்டுப் பிறகு வக்கீல் தொழிலில் இறங்கினான். அவனுடைய பிரசித்திபெற்ற பிரபல மாமனாராகிய அட்வகேட் வியாக்ரமய்யரின் ஆதரவிலே தொழிலை ஆரம்பித்தான். இதுதான் விபரீதமாக முடிந்தது. அட்வகேட் வியாக்ரமய்யர் தம்மிடம் தொழில் கற்க வந்த மாப்பிள்ளையை அப்படியே விழுங்கிக் கொண்டு விட்டார். அதாவது மாமனார் வீட்டிலேயே மாப்பிள்ளை ஐக்கியமாகிவிட்டான். நடை உடை பாவனை எல்லாம் வைதிக பாணியி



புதுமையின் பொலிவுக்கு
ஹமாம்
HAMĀM
the family soap
हमाम
நாள்தோறும் ஹமாம் தேய்த்துக் குளியுங்கள். ஹமாம் தரும் நறுமணமுள்ள நுரை உங்கள் சருமத்தை சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு கவர்ச்சியான மெருகையும் ஊட்டுகிறது. நெடுங்காலம்...நீடித்திருக்கும் ஹமாம் டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.
அதிக காலம் நீடித்துழைக்கும் டாய்லெட் சோப்
டாடா
தயாரிப்பு
CMTH-14-203 TAM

விருந்து நவநாகரிகத்துக்கு மாறிப் போய்விட்டது. அவனுடைய மனைவியின் அபிப்பிராயத்தை அனுசரித்துத் தன்னுடைய பெற்றோர்களைப் பற்றிச் 'சுத்த கர்நாடகம்' என்று நினைக்கக் கூடிய அளவுக்கு அவனுடைய மனமும் மாறிப் போய்விட்டது. இன்னும் ராவ் பகதூர் சாஸ்திரியார் அடிக்கடி பத்திரிகைகளில் நடத்தி வந்த விவாதங்களை அவன் ஆட்சேபித்துக் கண்டிக்கும் அளவுக்கு நிலைமை மிஞ்சிப் போய்விட்டது. ஒரு தடவை அவன் தன் தகப்பனார் எழுதும் பத்திரிகைக் கடிதங்களைப் பற்றி 'ரெடிகுலஸ்' என்ற சொற்றொடரைப் பிரயோகித்த போது, இத்தனை காலமும் ஒருவாறு அவனுடைய அதிகப் பிரசங்கத்தைப் பொறுத்துக் கொண்டிருந்த சாஸ்திரியாருக்கு இனிமேல் பொறுக்க முடியாது என்று ஆகிவிட்டது. ''ஆமாம் அப்பா, சங்கரா! நான் 'ரெடிகுலஸ்'தான்; உன் தாயாரும் 'மிஸ்ஸஸ் ரெடிகுலஸ்'தான்! நீயே அதிமேதாவி! அட்வகேட் வியாக்ரமய்யரின் சாக்ஷாத் சீமந்த மாப்பிள்ளை அல்லவா? நீ எங்களுக்குப் பிள்ளை இல்லை, பிறக்கும்போதே வியாக்ரமய்யரின் மாப்பிள்ளையாகப் பிறந்து விட்டதாக எண்ணிக் கொள்கிறேன். போ! போ! என் முகத்தில் இனிமேல் விழிக்காதே!'' என்று சாஸ்திரிகள் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். சாஸ்திரிகளுக்குக் கோபம் வந்தால் வந்ததுதான்; யாராலும் அதை மாற்ற முடியாது. ஆகையால் ஏற்கனவே மாமனார் வீட்டில் பதினாறு அணா ஐக்கியம் அடைந்திருந்த சங்கர நாராயணன் எம். ஏ., எம். எல்., இப்போது பதினாறு அணா ஐக்கியமாகி மன நிம்மதி அடைந்தான்.

சாஸ்திரியாரின் இளைய குமாரன் சௌந்தர ராகவனும் தமையனைப் போலவே மகா புத்திசாலி. கலாசாலைப் படிப்பு பரீட்சை எல்லாம் அவனுக்குத் தண்ணீர்பட்டபாடாயிருந்தது. பி.ஏ. ஆனர்ஸ் வகுப்பில் பொருளாதார விஷயத்தை எடுத்துக் கொண்டு மாகாணத்திலேயே முதலாவதாகத் தேறினான். அவன் தேறிய வருஷத்தில் இந்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையைப் பற்றிப் பத்திரிகைகளில் சர்ச்சை நடந்துகொண்டு வந்தது. ஒரு ரூபாய்க்குப் பதினெட்டு பென்ஸ் கிடைத்தால் நல்லதா பதினாறு பென்ஸ் கிடைத்தால் நல்லதா என்பது பற்றிச் சர்ச்சை. பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதும் ஆற்றலைத் தகப்பனாரிடமிருந்து பெற்றிருந்த சௌந்தரராகவன் மேற்படி பொருளாதார விவாதத்

பாஹிஹிஸ்தான்!


இரண்டு பாகிஸ்தான் வீரர்கள் ரேடியோத் தொடர்பு கொண்டு பேசும் போது:

''அப்பனே! நீ எப்படி இருக்கிறாய்?''

''சுகமாக இருக்கிறேன். என்னைச் சுற்றிலும் மனிதர்கள் மனிதர்களாக இருக்கிறார்கள். மனம் நிம்மதியாக இருக்கிறது.''

''பலே! பாகிஸ்தான் ராணுவம் அந்த அளவுக்கு அபிவிருத்தி அடைந்து விட்டதா என்ன?''

''முட்டாள்! நான் இப்போது பேசுவது இந்தியாவிலிருந்து!''



■

ஒரு பாகிஸ்தான் ராணுவ வீரன் திடீரென்று சந்தேகம் எழ அதிகாரியிடம் ஓடிக் கேட்டான்:

''சார்! துப்பாக்கியை எந்தப் பக்கமாக வைத்துக் கொண்டு சுட வேண்டும்?''

அதிகாரி சொன்னார்: ''நீ துப்பாக்கியை எந்தப் பக்கமாக வைத்துக்கொண்டு சுட்டாலும் அது உன் தேசத்துக்கு நீ செய்த ஒரு பெரிய சேவையாக இருக்கும்!''



■

இரண்டு பாகிஸ்தான் வீரர்கள் சந்தித்துக் கொண்ட போது:

''டேய், நான் இன்றைக்கு வங்க தேசப் பிரஜை ஒருவனின் காலை வெட்டினேன்!''

''காலை ஏன் வெட்டினாய்? தலையை அல்லவா சீவ வேண்டும்?''

''நான் என்ன செய்வது? எனக்கு முன்பே எவனோ அதைச் செய்து விட்டிருந்தானே!''



■

ஒரு பத்திரிகை நிருபர் பாகிஸ்தான் வீரர்களைப் பேட்டி கண்டு கொண்டு வந்தபோது ஒரு வீரனிடம் கேட்டார்:

''பாகிஸ்தான் ராணுவத்தில் நீ எப்படி இருக்கிறாய்?''

''குறைப்படும்படியாக ஒன்றும் இல்லை.''

''பாகிஸ்தான் ராணுவத்தில் சேருவதற்கு முன்பு நீ எப்படி இருந்தாய்?''

''சந்தோஷமாக இருந்தேன்!''



--கே. வி. எம்.

தைப் பற்றித் தானும் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதினான். அது பிரசுரமாயிற்று. நாட்டில் பல பொருளாதார நிபுணர்களின் கவனத்தைக் கவர்ந்தது. இந்திய சர்க்காரின் பொக்கிஷ இலாகா அதிகாரிகளின் கவனத்தைக்கூடக் கவர்ந்தது. அந்த இலாகாவின் தலைமை அதிகாரி இவனுக்கு ஒரு கடிதம் எழுதினார். இவன் அவரைப் போய்ப் பார்த்தான். அந்தப் பேட்டியின் பயனாக இந்திய சர்க்காரின் வரவு செலவு இலாகாவில் சௌந்தர ராகவனுக்கு உத்தியோகம் கிடைத்தது. எடுத்தவுடனேயே சம்பளம் மாதம் 750 ரூபாய். மேலே எங்கே போய் நிற்கும் என்பதற்கு வரையறையே கிடையாது.

ஆகவே தமது இளைய புதல்வனைப் பற்றிப் பத்மலோசன சாஸ்திரி பெருமைப்படுவதற்கு எல்லாக் காரணங்களும் இருந்தன. அப்படியிருக்க அவர் கவலைப்படுவதற்குக் காரணம் என்ன?

வேறு ஒன்றுமில்லை, அவனுடைய கல்யாணத்தைப் பற்றித்தான்.

சாதாரணமாகப் பெற்றோர்கள் பெண்களின் கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்படுவதுதான் வழக்கம். பத்மலோசன சாஸ்திரியின் கவலை இதற்கு நேர்மாறாயிருந்தது. தம் அருமைப் புதல்வனின் கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்பட்டார். மூத்த பிள்ளை தேவலை என்று இரண்டாவது பிள்ளை செய்து விடுவான் போலிருக்கிறதே என்று மிகவும் கவலைப்பட்டார்.

அவருடைய வாழ்க்கைத் துணைவி காமாட்சி அம்மாள் அவரைக் காட்டிலும் அதிகமாகக் கவலைப்பட்டாள்.

இவர்கள் கீழ் வீட்டில் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் நாம் மேல் மச்சுக்குச் சென்று நம் கதாநாயகனைச் சந்திக்கலாம்.

8. சௌந்தரராகவன்

ஐந்து அடி ஆறு அங்குல உயரமும் அதற்குத் தகுந்த வாட்டசாட்டமும் சிற்பி செதுக்கியதுபோல் கம்பீரமாக அமைந்த முகமும் கச்சிதமாகக் கிராப் செய்து நன்கு படியும்படி வாரிவிட்ட தலையும் நாகரிகமான உடையுமாக இதோ மேஜையருகில் நாற்காலியில் அமர்ந்திருப்பவன்தான் நம் கதாநாயகன் சௌந்தரராகவன்.

அவன் எதிரே மேஜை மீது யாரிடமிருந்தோ அவனுக்கு வந்த கடிதம் ஒன்று இருந்தது. இவன் எழுதத் தொடங்கியிருந்த கடிதம் ஒன்று அதன் பக்கத்திலே கிடந்தது. ஸ்வீடன் தேசத்துப் பேராசிரியர் இப்ஸன் எழுதிய நாடகத் தொகுதிப் புத்தகம் ஒன்று இருந்தது. அதன் அடியில் அன்று வந்த தினப் பத்திரிகையும் இருந்தது. இவற்றைத் தவிர அழகாகச் சட்டமிட்டு மேஜைக்கு அலங்காரமாக விளங்கிய புகைப்படம் ஒன்றும் காணப்பட்டது.

சௌந்தரராகவன் கையிலே அழகிய நீல நிறப் பௌண்டன் பேனா வைத்திருந்தான். அவனுடைய அழகிய களை பொருந்திய முகத்தில் இப்போது கோபத்தோடு ஏமாற்றமும் துயரமும் குடி கொண்டிருந்தன. அடிக்கடி அவனுக்குப் பெருமூச்சு வந்து கொண்டிருந்தது. அறிவொளி திகழ்ந்த அவனுடைய கண்ணில் வெகுதூரத்தில் உள்ள எதையோ பார்க்கும் கனவு மயக்கம் காணப்பட்டது.

மேஜை மீதிருந்த புகைப்படத்தைச் சற்று நோக்குவோம். ஆகா! அவள் ஒரு வடநாட்டுப் பெண்; அழகிற் சிறந்த யுவதி. பிராயம் இளம் பிராயமாகத்தான் இருக்க வேண்டும்; ஆயினும் அவளுடைய முழு மதி முகத்தில் உலக அனுபவத்தினாலும் உள்ளத்தின் சிந்தனையினாலும் ஏற்படும் முதிர்ச்சி தோன்றியது.

இவள் யார்? இந்த வடநாட்டு நங்கையின் புகைப்படம் ராவ்பகதூர் பிரம்மஸ்ரீ பத்மலோசன சாஸ்திரிகளின் புதல்வனுடைய மேஜையின் மீது ஏன் இருக்கிறது? அந்தப் படத்தைப் பார்த்துப் பார்த்து இவன் எதற்காகப் பெருமூச்சு விடுகிறான்? நல்லது; மேஜையின் மீதுள்ள கடிதங்களைப் பார்த்து ஏதேனும் விவரம் கண்டுபிடிக்க முடியுமா என்று பார்ப்போம். கடிதங்கள் மேஜை மீது பிரித்தே வைக்கப்பட்டிருப்பதால், ராகவனுடைய தோள் மேலாக அவற்றைப் படிப்பதில் சிரமம் ஏற்படாது.

முதலில் ராகவனுக்கு வந்திருந்த கடிதத்தைப் பார்க்கலாம். எழுத்தைப் பார்த்ததும் அது ஒரு பெண்மணியின் கடிதம் என்று தெரிந்து விடுகிறது. ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருந்தது. நம்முடைய வாசகர்களின் வசதிக்காக அதைத் தமிழ்ப்படுத்தித் தருகிறோம்.


ஜி.ஐ.பி. மார்க்கம்
21 — 1 — 34

ஸ்ரீ சௌந்தரராகவன் அவர்களுக்கு,

நமஸ்தே.

தாங்கள் பம்பாய்க்கு எழுதிய கடிதம் நான் ரயிலுக்குப் புறப்படுகிற

இன்று—ஜானகியின் வீட்டுவேலை பூராவும் முடிந்தது. அம்மாவைப் பார்த்துவிட்டு, வரும் வழியில் கடைக்கும் போய் வந்தாயிற்று. இப்போது — மகன் ராஜனுடன் விளையாடும் நேரம்.



“என்ன இருந்தாலும் ‘ஹார்லிக்ஸ்’ தரும் முழுமையான ஊட்டச்சிறப்பே தனி”


என்கிறுள் ஜானகி

முழு ஆடைப்பால், செழுமையான கோதுமை இவை தரும் நிறைவான பயனும் புரதச்சத்தும் நிரம்பியது ‘ஹார்லிக்ஸ்’.

அன்றாட உணவில் விட்டுப்போகும் ஊட்டக்குறையை ‘ஹார்லிக்ஸ்’ ஈடுசெய்து உடலுக்கு உறுதியும் அதிக சக்தியும் அளிக்கிறது.

60 ஆண்டுகளுக்கும் மேலாக டாக்டர்கள் சிபாரிசு செய்து வரும் ‘ஹார்லிக்ஸ்’ தாய்மார்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது.

‘ஹார்லிக்ஸ்’ அருந்துங்கள். தரமான சத்தும் அதிக சக்தியும் அளிப்பது அதுவே.



முழுமையான ஊட்டம்பெற—‘ஹார்லிக்ஸ்’

‘ஹார்லிக்ஸ்’ பதிவு பெற்ற டிரேட் மார்க்.

HL-2916 A

விஜிபி

மக்களின் வாழ்க்கைத் தரத்தை புரட்சிகரமான மாற்றத்துடன் சிறப்பிக்க உதவுகிறார்கள்



விஜிபி யின் சுலபத்தவணைத் திட்டத்தின் மூலம் வாழ்க்கைக்குத் தேவையான பல பொருட்களை, சிக்கனமாக, வசதியாக வாங்கலாம். குறைந்த வருவாயிலும் நிறைந்த வாழ்வை பெறுங்கள்

வி.ஜி.பன்னீர்தாஸ் & கோ.

விஜிபி பில்டிங்க்ஸ்
சைதாப்பேட்டை, சென்னை-15 போன் : 442333
தி. நகர், சென்னை-17 போன் : 440246
ரத்தன் பஜார், சென்னை-3 போன் : 33214
விக்டரி ஹவுஸ், 7, மவுண்ட்ரோடு சென்னை-2.
போன் : 812121

வி. ஜி. பன்னீர்தாஸ் & கோ

விஜிபி சதுக்கம், சைதாப்பேட்டை, சென்னை-15

சென்னை, செங்கல்பட்டு, வட ஆர்காடு, தென் ஆர்காடு மாவட்டங்களில் வசிப்பவர்கள் இந்த கூப்பனை பூர்த்தி செய்து மேற்கண்ட முகவரிக்கு அனுப்பினால், எங்கள் பிரதிநிதி உங்களிடம் வந்து எமது சுலபத் தவணை திட்டத் தின் மூலம் பொருள்கள் வாங்க உதவுவார்.

பெயர் ____________________

முகவரி ____________________

____

____________________ KL

VGP விஜிபி தரமான பொருட்களின் இந்தியாவின் மிகப்பெரிய விற்பனையாளர்கள்

VGP · Godrej · RIVEX · Prestige · NIPPON · TIMESTAR · FAVRE-LEUBA GENEVE · Sunset · Vijay · Rallifan · Atlas · RALEIGH · MERRITT

NAS

விஜிபி புதிய ஷோரூம் → விக்டரி ஹவுஸ், 7, மவுண்ட்ரோடு, சென்னை-2 போன் : 812121

தறுவாயில் கிடைத்தது. ஆகையால் ஓடுகிற ரயிலில் இருந்து கொண்டு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நாக புரி ரயில்வே ஸ்டேஷனில் இதைத் தபால் பெட்டியில் போடலாம் என்று உத்தேசித்திருக்கிறேன்.

தங்களுடைய கடிதம் நான் தங்களைப் பிரிந்த பிறகு தங்களுடைய மனோ நிலை இன்னதென்பதை நன்கு வெளியிடுகிறது. அதை அறிந்து நான் மிகவும் வருந்தினேன் தங்களை நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்வது, கூடிய சீக்கிரத்தில் தாங்கள் என்னை மறந்து விட வேண்டும் என்பதே.

தாங்கள் ஆண் மகன்; இவ்வுலகத்தில் தாங்கள் செய்வதற்கு எத்தனையோ காரியங்கள் இருக்கின்றன. அவற்றில் தீவிரமாகக் கவனம் செலுத்தினால் தங்கள் மனோ நிலை மாறிவிடும். மனத்தை மாற்றிக் கொள்வதற்கு வேறு ஒரு நல்ல மார்க்கமும் இருக்கிறது. தங்களுக்குத் தெரியாவிட்டால் தயவுசெய்து தங்களுடைய பூஜ்ய மாதாஜியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கோருகிறேன்.

தங்களுடைய தாயாரிடம் எனக்கு அளவில்லாத பக்தியும் மதிப்பும் ஏற்பட்டன. துர்பாக்கியத்தினால் அவருக்கு மருமகளாக எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அதனால் அவரிடத்தில் என்னுடைய பக்தி சிறிதும் குறைந்து விடவில்லை. ஸநாதன ஹிந்து தர்மமே உருவெடுத்ததுபோல் என் கண்களுக்குத் தோன்றிய அந்த மூதாட்டி இந்தப் பதிதையின் காலில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். தினந் தினம் புது மலர் எடுத்துச் சக்தியைப் பூஜை செய்த அவருடைய புனிதமான கரங்களினால் என்னுடைய பாதங்களைத் தொட்டு, 'பெண்ணே! உன்னை வேண்டுகிறேன்! என் கோரிக்கையை நிறைவேற்று!' என்று கேட்டுக் கொண்டார். அப்படியே செய்வதாக அவருக்கு நான் வாக்குறுதி கொடுத்தேன். அதை நான் அவசியம் நிறைவேற்றுவேன். உலக வாழ்க்கையில் நான் இன்னும் என்னென்ன தீய காரியங்களைச் செய்து என்னுடைய பாவ மூட்டையைப் பெருக்கிக் கொண்டாலும், தங்களுடைய தாயாருக்குக் கொடுத்த வாக்கை அவசியம் நிறைவேற்றி வைப்பேன். அந்த ஓர் எண்ணமானது இந்த உலக வாழ்க்கையாகிய பெரும் பாரத்தைச் சுமப்பதற்கு வேண்டிய மனோதிடத்தை எனக்கு அளித்துக் கொண்டிருக்கும்.

அன்பரே!.... இப்படி நான் தங்களை அழைப்பதில் தவறு ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். தவறாயிருந்தாலும், —

தி. சா. ராஜு எழுதும் துணைவழி

இம்மாத நாவல்

27.2.1972

இது கடைசித் தடவையாக அத்தவற்றை நான் செய்வதாக இருக்கலாம்' அதற்காக ஆண்டவன் என்னை மன்னித்து விடுவார்.

பம்பாய்க்குத் தாங்கள் எழுதிய கடிதத்தையும் அதற்கு முன்னால் பல சமயங்களில் எழுதியிருந்த கடிதங்களையும் தீயில் போட்டு எரித்து விட்டேன். அவற்றை வைத்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்? தாங்களும் தயவு செய்து அவ்விதமே செய்யக் கோருகிறேன். நான் எழுதிய பழைய கடிதங்களையும், இந்தக் கடிதத்தையும், என்னுடைய புகைப்படம் ஒன்று வைத்திருந்தீர்களே, அதையும் சேர்த்துத் தீயில் போட்டு எரித்துவிடக் கோருகிறேன். அவற்றை வைத்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்? உன்னதமான நிலையில் ஏறத் தொடங்குகிறவர்கள் தங்களிடம் உள்ள சாமான்களில் உபயோகமில்லாதவற்றைக் கழித்துவிடுவதுதான் நல்லது. நாம் இருவரும் இப்போது புதிய பாதையில் போகத் தொடங்கியிருக்கிறோம். புனர்ஜென்மம் எடுத்துப் புதிய வாழ்வைத் தொடங்குகிறோம் என்றே சொல்லலாம். உலகத்தில் புதிதாகப் பிறக்கும் குழந்தையை எப்படிச் சுமையே இல்லாமல் கடவுள் அனுப்பி வைக்கிறார், பாருங்கள்! பூர்வ ஜன்மத்துப் பழைய மூட்டை முடிச்சுகளையெல்லாம் தூக்க வேண்டியதாயிருந்தால் குழந்தையானது தன் வாழ்க்கையைச் சௌகரியமாகத் தொடங்க முடியுமா? அம்மாதிரியே நாமும் நம்முடைய புது வாழ்க்கையைத் தொடங்கும் போது பழைய சுமைகளை யெல்லாம் தீயிலே போட்டு எரித்துவிடலாம்.

இந்தக் கடிதத்தை முடிக்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. அடுத்தபடி ரயில் நிற்கும் ஸ்டேஷன் நாகபுரி என்று அறிகிறேன். வண்டி நின்ற ஒவ்வொரு ஸ்டேஷனிலும் சில சில வரிகளாக இத்தனை நேரமும் இதை எழுதி

வந்தேன். பக்கத்திலே இருப்பவர்கள், 'என்ன இப்படிப் பிரமாதமாக எழுதுகிறாய்? ஏதாவது பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுகிறாயா?' என்று அடிக்கடி கேட்பதற்குப் பதில் சொல்லச் சங்கடமாக இருந்தது.

நானாவது, பத்திரிகைக்குக் கட்டுரை எழுதவாவது? அதற்குப் பிறந்தவர்.... சீ! ஏதேதோ பழைய ஞாபகங்கள் வருகின்றன. என்னுடைய பிரயாணத்தின் நோக்கத்தைப் பற்றி எழுதி இதை முடிக்கிறேன்.

பீஹாரில் ஏற்பட்ட பயங்கரமான பூகம்பத்தைப் பற்றித் தாங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். அதன் பலனாக பீஹாரின் மக்களுக்கு விளைந்திருக்கும் கோர விபத்துக்களைப் பற்றியும் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இயற்கையின் விபரீத கோபத்தினால் கனவிலும் நினைத்திருக்க முடியாத துன்பங்களுக்கு ஆளாகியிருக்கும் பீஹார் மக்களுக்குச் சேவை செய்யத் தொண்டர்கள் தேவை என்று பீஹாரின் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாத் விண்ணப்பம் விடுத்திருக்கிறார் அல்லவா? அதற்கிணங்க, பம்பாயிலிருந்து தொண்டர் கோஷ்டிகள் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முதலில் புறப்பட்ட தொண்டர் கோஷ்டியில் நானும் சேர்ந்து போய்க் கொண்டிருக்கிறேன்...

இந்த ஜன்மம் எடுத்ததற்கு யாருக்கேனும் ஏதாவது உதவி செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தால் அதுவே நான் மனச் சாந்தி அடைவதற்குச் சாதனமாயிருக்கும். வேறு வழியில் நான் மன நிம்மதி அடைய முடியாது. இயற்கை கடுஞ் சோதனைக்கு ஆளாக்கியிருக்கும் மக்களுக்குச் சேவை செய்யும் சந்தர்ப்பத்தில் இந்த அற்ப உயிரை இறைவன் காணிக்கையாக ஏற்றுக் கொண்டால் அதைக் காட்டிலும் திருப்தியான காரியம் வேறு எதுவும் இராது. தங்களுக்கு என்னால் நேர்ந்த பலவித சங்கடங்களுக்காக மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தயவுசெய்து என்னைச் சீக்கிரத்தில் மறந்து விடுங்கள் என்று மறுபடியும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம், தாரிணி.

மேற்கண்ட கடிதத்தைப் படித்து விட்டுச் சௌந்தரராகவன் பெருமூச்சு விட்டதைப் பற்றி வாசகர்கள் வியப்படைய மாட்டார்கள். சர்வ கலா சாலையின் கடுமையான பரீட்சைகளிலெல்லாம் அநாயாசமாக விடை எழுதி வெற்றி பெற்ற மேதாவி இந்தக் கடிதத்துக்குப் பதில் எப்படி எழுதுவதென்று தெரியாமல் திணறியது பற்றியும் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

பத்மாபுரம், சென்னை
24—1—34

ஸ்ரீமதி தாரிணி தேவி அவர்களுக்கு,

தாங்கள் கருணை கூர்ந்து ரயிலில் பிரயாணம் செய்தவண்ணம் எழுதி அனுப்பிய கடிதம் வந்து சேர்ந்தது. அதில் தாங்கள் எழுதியிருந்த வார்த்தை ஒவ்வொன்றும் என் நெஞ்சைப் பிளந்து எப்படி வேதனை செய்தது என்பதை நீ அறிந்தாயானால்..... அதைப் பற்றி உனக்கு எழுதி என்ன பயன்? இரும்பையும் கல்லையும் சநாதன தர்மத்தின் கொடும் விதிகளையும் ஒத்த உன்னுடைய ஈரமில்லாத இருதயம் என்னுடைய மன வேதனையை எப்படி அறியப் போகிறது?...

இவ்வளவுடனேயே ராகவன் எழுதத் தொடங்கிய கடிதம் நின்று போயிருந்தது. மேலே என்ன எழுதுவது என்று யோசித்து ஏதேதோ எழுதிப் பார்த்துச் சரியாகத் தோன்றாமையால் வரி வரியாக அடித்திருந்தான்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பூஜை வேளையில் கரடி விடுகிறது என்ற பழமொழிக்கு உதாரணமாகும்படியாக, வாசலில் ஒரு குரல், ''ஸார்!'' என்று கேட்டது.

ராகவன் சற்றுக் கோபத்துடன் எழுந்து வந்து மச்சுத் தாழ்வாரத்தின் ஓரமாக நின்று பார்த்தான். பங்களாவின் தெரு வாசற் கதவண்டை இரண்டு பிராமணோத்தமர்கள் நின்று கொண்டிருக்கக் கண்டான்.

''யார் அது?'' என்ற ராகவனின் குரலைக் கேட்டு அவர்கள் இருவரும் தலைநிமிர்ந்து பார்த்தார்கள். அவர்களில் ஒருவர் நமது நண்பர் ராஜம்பேட்டை கிராம முனிசீப் மிட்டாவய்யர்; இன்னொருவர் பழையமாம்பலம் வாசியான மிட்டாவய்யரின் சின்ன மாமா சுப்பய்யர்.

சுப்பய்யர் முகத்தைப் பார்த்ததும் அவர் தன் தகப்பனாருக்குத் தெரிந்தவர் 'என்பதை அறிந்திருந்த ராகவன் ''ஓகோ! அப்பாவைப் பார்க்க வந்தீர்களா? இதோ கதவைத் திறக்கச் சொல்கிறேன்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

அவனுடைய முகம் மறைந்ததும் சுப்பய்யர் மிட்டாவய்யரின் கையைத் தொட்டு, காதோடு இரகசியமாக ''இந்தப் பையன்தான் மாப்பிள்ளை; பார்த்தாயல்லவா?'' என்றார்.

''பையன் முதலில் மாப்பிள்ளையாகட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்றார் மிட்டாவய்யர். (தொடரும்)

ஜீ. ராஜேந்திரன்

எழுதும்

"ஸைக்கோ ஸாரநாதன்"

தொடர்கதை

மார்ச் 5 -

இதழில் ஆரம்பம்



ஆனந்தம் எங்கே?

• ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

நமக்கு எண்ணிமுடியாத ஆசைகள் இருக்கின்றன. ஆனாலும் என்றோ ஒரு நாள் நாம் ஆசைப்படும் வஸ்துக்கள் நம்மை விட்டுப் பிரிவது அல்லது நாம் அவற்றை விட்டுப் பிரிவது சர்வ நிச்சயம். சாவின் மூலம் இந்தப் பிரிவு ஏற்படாமல், அதற்கு முந்தி நாமாக ஆசைகளை விட்டுவிட்டால் அத்தனைக்கத்தனை ஆனந்தமாயிருக்கலாம். நமக்கு எத்தனை ஆசைகள் இருக்கின்றனவோ அத்தனை முளைகளைத் துக்கத்துக்கு அடித்துக் கொண்டு நம்மைக் கட்டிப் போட்டுக் கொள்கிறோம். ஆசைகளைக் குறைக்கக் குறைக்கத் துக்கமேறுதுவும் குறையும். இந்தப் பிறவி முடியுமுன் நாம் சகல ஆசைகளையும் விட்டுவிட்டால் மறுபடியும் பிறந்து 'அவஸ்தைப்படவே வேண்டாம்; அப்படியே பரமாத்மாவில் கரைந்து ஆனந்தமாகிவிடலாம்.

மனிதன் மற்ற விலங்குகளைவிட விசேஷ ஞானம் உடையவன் என்று பெருமைப்படுகிறோம். ஆனால் இவன் மட்டும் அவற்றைவிட விசேஷமாக என்ன செய்துவிடுகிறான்? நாயும் நரியும் கரப்பான் பூச்சிகளும்கூடத்தான் உண்கின்றன, இன விருத்தி செய்கின்றன, இறக்கின்றன. பொதுவாக மனிதனும் இதற்கு மேல் எதுவும் செய்வதாகத் தெரியவில்லை. அப்பொழுது இவனது விசேஷ ஞானத்தில் பெருமைப்பட என்ன இருக்கிறது? எல்லாவற்றிலும் பெரிய ஞானம் நிலைத்த ஆனந்தத்துக்கு வழி கண்டு கொள்வதுதான். மனிதன் இப்படிப்பட்ட நிலைத்த ஆனந்தத்தைப் பெறுகிறானா? யோசிக்குமிடத்து, இந்த 'ஞானம்', 'ஆனந்தம்', 'நாம்' என்பதெல்லாமே ஒன்றுதான். நாம் உண்மையில் யார் என்பதை உணரும் ஞானம் வரும்போது, நாமே ஞான மயமான ஆனந்தம் என்று கண்டுகொள்வோம்.

வெளி வஸ்துக்களிலிருந்து நமக்கு ஆனந்தம் வரவில்லை. நம்மிடமிருந்தேதான் ஆனந்தம் பிறக்கிறது. நமது உண்மை ஸ்வரூபமான ஆனந்தத்தை நாம் அஞ்ஞானத்தினால் மூடி மறைத்துக் கொண்டாலும் கூட, 'நம்முடையது' என்று ஒன்றிடம் சம்பந்தம் வைக்கும்போதுதான் அதிலிருந்து ஆனந்தத்தை அடைகிறோம். அந்தச் சம்பந்தம் போய்விட்டால் ஆனந்தம் போய்விடுகிறது. உதாரணம் சொல்கிறேன்: ஒருவருக்குச் சொந்தமாகக் கொஞ்சம் நிலம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் முதலில் வருஷத்துக்கு வருஷம் விளைச்சல் அதிகமாவதாக வைத்துக் கொள்ளுங்கள். 'இந்த வயல் என்னுடையது' என்பதால், விளைச்சல் அதிகமாகும்போதெல்லாம் அவருக்கு மனம் குளிருகிறது. ஆனந்தம் உண்டாகிறது. அப்புறம் விளைச்சல் குறையத் தொடங்குகிறது. வயலை வேறு ஒருவருக்குச் சாசனம் பண்ணி விற்றுவிடுகிறார். மறுபடி அடுத்த வருஷம் அதே வயலில் ஏகமாக விளைச்சல் கூடியிருக்கிறது. இப்போது அதைப் பார்க்கும்போது மனம் குளிரவா செய்கிறது? 'அடடா, போன வருஷம் நம் கையில்

இருந்தபோது தரித்திர மாதிரி பொட்டலமாக இருந்தது: இப்போது எவனோ ஒருத்தனுக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறதே!' என்று வயிற்றெரிச்சல்தான் உண்டாகிறது. 'எனது' என்ற சம்பந்தம் இருந்தமட்டும்தான் அமோக விளைச்சலில் சந்தோஷம் இருந்தது: பிறகு அந்த உணர்ச்சி அடியோடு மாறிவிட்டது.

இன்னொர் உதாரணம் சொல்கிறேன்: என்னிடம் பல பெற்றோர்கள் குழந்தைகளை அழைத்து வந்து, அவற்றுக்கு பில்லி சூனியம் இருக்கிறது, அது நிவிருத்தியாக வேண்டும் என்று கேட்டுக் கொள்வதைப் பார்த்திருப்பீர்கள். இதற்கு நேர்மாறாக ஒரு தகப்பனார் நடந்துகொண்டார்! அவர் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டவர். இளையாளுக்கு மூத்தாள் பிள்ளைகளோடு ஒத்துவரவில்லை. ஏகச் சண்டை போட்டுக் குடும்பம் பிரிந்தது. இவர் இளையாள் தரப்பிலேயே இருந்தார். பிள்ளையைக் கைவிட்டு விட்டார். அவர் ஒரு நாள் என்னிடம் வந்து, 'மூத்தாள் பிள்ளை இளையாளுக்குப் பில்லி சூனியம் வைத்தான். நல்ல வேளையாக அது அவனையே திருப்பி அடித்து விட்டது' என்றார். எல்லாத் தகப்பனார்களும் பிள்ளைக்குச் சித்தப்பிரமை ஏற்படும்போது கவலைப்படுகிறார்களென்றால், இவரோ அதிலேயே சந்தோஷப்படுகிறார்! ஏன்? இவருக்கு அவனிடம், 'நம்முடையவன்' என்ற சம்பந்தம் போய்விட்டது. இளையாளிடம் மட்டும் 'நம்முடையவள்' என்ற எண்ணம் இருக்கிறது.

மாயைக்கு ஆளான 'நான்' என்பதன் சம்பந்தத்துக்கே இத்தனை ஆனந்தம் இருக்கிறது என்றால், எதிலும் சம்பந்தப்படாமல் பூரண ஞானமாக இருக்கின்ற அந்த வெறும் 'நான்' எத்தனை ஆனந்த மயமாயிருக்கும்! வெல்லம் போட்டால் கசப்புப் பாகற்காய்க் கறியிலும் சிறிது தித்திப்பு இருப்பதை உணர்கிறோம். வெல்லத்தின் சம்பந்தத்துக்கே தித்திப்பு இருப்பதால், வெல்லம் தித்திப்பு மட்டுமே என்பதில் சந்தேகம் என்ன? கசப்பான துக்க உலகத்தில், 'நான்' என்பதின் மாயக்கிரணங்கள் சம்பந்தப்படுகிற போதே அதில் தித்திப்பு ஆனந்தத்தைப் பெறுகிறோம் என்றால், அந்த 'நான்' எத்தனை ஆனந்தமயமாக இருக்க வேண்டும்? சிறிய பொத்தல்கள் கொண்ட ஒரு சட்டியால் ஒரு தீபத்தை மூடி வைத்தால் துவாரங்கள் வழியாக மெல்லிய ஒளிக் கிரணங்கள் வெளிவரும். மாயையால் மூடப்பட்ட ஆத்ம தீபத்திலும் இந்திரிய துவாரங்கள் வழியாகக் கொஞ்சம் கொஞ்சம் ஆனந்த ஒளியைப் பார்க்கிறோம். மாயச் சட்டியை உடைத்து விட்டால் ஆனந்த ஜோதிர்மயமாகவே ஆகிவிடலாம். துவாரங்களின் அளவைப் பொறுத்துப் பல வேறு அளவுகளில் ஒளி வெளி வந்தாலும், உள்ளேயிருப்பது ஏகஜோதிதான். நாம் மாயச் சட்டியை உடைத்துவிட்டால் உலகத்தில் பார்க்கும் வித்தியாசங்களெல்லாம் மறைந்து, எல்லாம் ஒன்றான ஆனந்த ரூபமாகவே தெரியும்.

மாயையை எப்படி உடைப்பது என்றால் ஆசைகளை அடக்குவதுதான் வழி. மனம் இருக்கும் வரை ஆசைகள் இருக்கத்தான் செய்யும். அதனால் மனத்தை அடக்கிவிட வேண்டும். மனம் அடங்கி விட்டால் மரண நிலையில் இருப்பதுபோல் ஒரு சக்தியுமின்றி ஆகிவிடுவோம் என்று எண்ணக்கூடாது. அதுதான் சகல சக்திகளுக்கும் ஆதாரமான நிலை. சாதாரணமாக ஏதாவது ஓர் அங்கத்தில் ஊனம் உள்ளவர்களுக்கு இன்னொர் அங்கத்தில் அதிக தீக்ஷண்யம் இருக்கும். பல வாய்க்கால்களில் ஒன்றில் ஜலத்தை அடைத்துத் திருப்பினால் இன்னொன்றில் அதிகம் நீர் பெருகுவதுபோல், ஓர் அங்கத்தில் ஊனம் இருப்பதே இன்னொன்றில் தீக்ஷண்யத்தைத் தருகிறது. ஆத்ம சக்தியைப் பலவாறாகச் சிதறச் செய்யும் எல்லா இந்திரியங்களையும் அடைத்துக் கொண்டு விட்டால், அப்போது சகல சக்திகளும் ஒரே இடத்தில் அமைதியாக, ஆனந்தமாகக் கூடி நிற்கும். மிகுந்த சக்தியுடன் உலகுக்கு நல்லது செய்யலாம்.

ஆத்ம ஞானம் பெற்ற ரிஷிகளின் சக்தியே இதற்கு திருஷ்டாந்தம். சகல லோகங்களுக்கும், சகல காலங்களுக்கும் சென்று அவர்கள் விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். நம் காதுக்குக் கேட்காத சப்தங்களை ஆகாயத்தில் கேட்டு வேத மந்திரங்களைக் கொடுத்தார்கள். 'எப்படி ஆசையை அடக்குவது, எப்படி மனத்தை நிறுத்துவது, எப்படி நிலைத்த ஆனந்தத்தை அடைவது?' என்று கேட்கிறவர்கள் அந்த வேதங்கள் சொன்னபடி நடந்தாலேபோதும், முடிவில் பேரானந்தம் அடையலாம். இதற்குப் பரமேசுவரன் அநுக்கிரகம் செய்வானாக!

இயந்திர நகரத்தின் ஆஸ்திக நிலையம்

இயந்திரமயமான நெய்வேலி நகரில் ஆஸ்திகத்தைப் பரப்பி வருகிறது "மணி தீபம்" என்ற சத்சங்கம். இச்சங்கத்தில் பெரியோர்களுக்கும், குழந்தைகளுக்கும் நான்மறைப் பகுதிகள், தமிழ்மறைகள், தோத்திரப் பாடல்கள் இவைகள் போதிக்கப்படுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் சுமங்கலிகளால் ஸ்ரீ அம்பாள் ஆராதனையும், மற்றும் பஜனையும், சூர்ய நமஸ்காரம் ஆகியனவும் நடைபெற்று வருகின்றன. சங்கம் தற்பொழுது ஒரு கீற்றுக் கொட்டகையில் இயங்கி வருகிறது. இதனை நிரந்தரமானதாகவும், விசாலமானதாகவுமாக மாற்றி அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது. சங்கத்தின் வாயிலில் வேம்பு - அரசமரத்தடியில் குடிகொண்டுள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகருக்கு மண்டபம் அமைக்கவும் உத்தேசித்திருக்கிறது. ஆஸ்திக அன்பர்களின் பொருளுதவி கோரப்படுகிறது. பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: பொதுக் காரியதரிசி, சத்சங்கம் - மணி தீபம், நெய்வேலி-1.


மூன்று மந்திரவாதிகள்
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராஜ்
19
கோட்டைக்குக் காவல் எதுவுமில்லை. தள்ளாடித் தடுமாறியபடி உள்ளே புகுந்த பார்த்திபன் நினைவிழந்தான். மறுபடி அவனுக்கு நினைவு திரும்பிய போது...
நான் எங்கிருக்கிறேன்...?
இருக்க வேண்டிய இடத்தில் தான். துங்கபுரி நாட்டுக் கோட்டைக்குள்.
எழுந்திருந்து நில...
விரைவில் உன் உயிருக்கு விடுதலை கிடைக்கும்.
கவலையில்லை. என்னை உங்கள் தலைவர் சசாங்கனிடம் அழைத்துச் செல்லுங்கள்.
இந்தப் பயலுக்கு உயிர் கெட்டி போலிருக்கிறதே...
நீ அரக்கனின் பிடியிலிருந்து தப்பி வந்திருக்கிறானே, தெரியவில்லையா? இதுவரை யாரும் ஆற்றைக் கடந்து கோட்டைக்குள் வந்ததில்லையே.
மன்னர் சசாங்கரை உடனே காண முடியாது. பாதாளச் சிறையில் மற்ற கைதிகளோடு அடைபட்டுக் கிட. அழைப்பு வந்ததும் அழைத்துப் போகிறோம்.
பசியாலும் களைப்பாலும் பார்த்திபன் பாதாளச் சிறையில் நினைவிழந்து கிடந்தான் பல நாட்கள். ஒரு நாள் காவலர்கள் அவனை உலுக்கி எழுப்பி...
ம்... வேகமாகப் போ... மன்னர் உனக்காகக் காத்திருக்கிறார்... ம்... தள்ளாடாதே...
சசாங்கனின் முன்னால் பார்த்திபனைக் கொண்டுபோய் நிறுத்திய போது, அவனால் எதையுமே பார்க்க முடியவில்லை. இருள் சூழ்ந்த கூடத்தில், ஜ்வாலை வீசி எரியும் நெருப்புக் குழியின் முன்னால் ஓர் உயர்ந்த பீடத்தில் அது... அந்த உருவம்...?
வந்து விட்டாயா? நீ என் அடிமை நினைவிருக்கட்டும். என் கட்டளை எதுவானாலும் நீ அதை நிறைவேற்ற வேண்டும்.


எத்தனை பயங்கர மானவன்? இத்தனை கொடிய ஒருவனு டைய மகள் எப்படி நல்லவளாக இருப்பாள்? அவள் வார்த்தைகளை நம்பலாமா?
உன்னிடம் மூன்று பைகள் தரப்படும். அவைகளில் முறையே நெல், கோதுமை, தினை ஆகியவை இருக்கும். அந்த விதைகளை இன்றிர வுக்குள் விதைத்து...
பயிரிட்டு, அறுவடை செய்து, அந்தந் தானி யங்களை மாவாக்கி, மூன்று வித மாவிலும் மூன்று விதமான பணியாரங்களைச் செய்து காலையில் என்னிடம் தர வேண்டும். தவறினால் என் முன்னுள்ள இத்தீக்குழி உன்னை வரவேற்கும்... ஹா... ஹா... ஹா!
அவனிடம் மூன்று தானியப் பைகளைத் தாருங்கள்.
இரவுக்குள் விதைத்து, விளைவித்து, அறுவடை செய்து, மாவாக்கி, அதில் பலகாரங்களும் செய்து... முடியாத தைச் செய்யச் சொல்லி என் வாழ்வை முடிக்கவே இந்தச் சூழ்ச்சி.
தனித்து விடப்பட்ட பார்த்திபன் புறா வென் அளித்த இறகைக் கையிலெடுத்து...
புறா, புறா! பறந்து வா, என் உதவிக்கு.
என்னை அழைத்த காரணம் என்ன, அரசகுமாரனே?
உனக்குத் தெரியாதா, உன் அப்பாவின் சூழ்ச்சி? இதோ இந்த மூன்று தானியங்களையும் கொண்டு அதிசயம் நிகழ்த்த வேண்டுமாம்! ஆகக்கூடிய காரியமா?


இவ்வளவு தானே? இதற்காகக் கலங்குவார்களா? நீங்கள் கவலைப் படாமல் தூங்குங்கள். காலையில் அற்புதம் நிகழ்ந்திருக்கும்.
புஷ்பப் பெண் சொன்னபடி அற்புதம் நிகழ்த்தி விட்டாள். காலையில் கண் விழித்த போது...
அதிசயம், ஆனால் உண்மை! சொன்னபடியே செய்து வைத்திருக்கிறளே என் அன்புப் புஷ்பா!
சசாங்கரே! இதோ நீங்கள் கேட்டபடியே, நீங்கள் கொடுத்த தானியங்களைப் பயிரிட்டுத் தயாரித்த அப்பம், தோசை, தேன் கலந்த தினைமா... போதுமா?
நான் சொன்னபடி தானியங்களை விதைத்து, விளைவித்து, அறுவடை செய்து...
ஆம், ஆம். அப்படிச் செய்து தயாரிக்கப்பட்டவை தான் இந்தப் பட்சணங்கள்.
இதைச் செய்த நீ,என் மூத்த பெண் கடலில் கை நழுவ விட்ட வைர மோதிரத்தையும் சுலப மாகக் கொண்டு வரலாமே! ம்... போ! விரைவில் மோதிரம் என் கைக்கு வர வேண்டும்.
தொடரும்



Made in India by Geoffrey Manners & Co., Ltd.

சுந்தரேசனின் கல்யாணம் நடக்கவிருந்த மண்டபம் திருவல்லிக்கேணிப் பகுதியிலே இருந்தது. ரங்கப்பாவும் கைலாசமும் கச்சிதமாக உடை மாற்றிக் கொண்டு தாங்களே மாப்பிள்ளைகளாகிவிட்டோமோ என்ற எண்ணத்துடன் ஜானவாசத்துக்குச் சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்து விட்டார்கள். இருவரும் பிரம்மச்சாரிகள். ஒரே அறையைப் பகிர்ந்து கொண்டு ஒரே ஹோட்டலில் சாப்பிட்டு ஒரே காரியாலயத்தில் வேலை பார்த்து வந்த நண்பர்கள். ரங்கப்பாவுக்குக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைதான். ஆனால் அவன் குடும்பத்திலேயே அதற்கு இடைஞ்சல். அவன் அண்ணன் பத்மநாபன் இருபத்தி எட்டு வயதைத் தாண்டிய பிறகு கூட இல்லறத்தைப் பற்றி யோசிக்க அவகாசமில்லாமல் சேலம் மாவட்டத்தில் உதவி தாசில்தாராக ராஜ்ய பாரம் நடத்தி வந்தான். இந்த ஒரு விஷயத்தில் பத்மநாபன் மீது ரங்கப்பாவுக்குப் படு ஆத்திரம்!

மாப்பிள்ளை சுந்தரேசன் தன் இரு நண்பர்களுக்கும் பலத்த உபசாரம் செய்தான். பஜ்ஜியும் கேசரியுமாக வாய்க்குள் திணித்தான். தன் உறவினர்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்தி வைத்தான்.

அங்கு வந்திருந்த கிழவனார் ஒருவர் தம் மனைவி வகையில் தூரத்து உறவினர் என்று தெரிந்து கொண்டவுடன் கைலாசம் அவருடன் ஒட்டிக் கொண்டான். ரங்கப்பா தனியனானான். பார்வையைச் சுற்றி வர ஓட்டினான். ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்த பார்வை அங்கேயே நின்று விட்டது. அங்கிருந்து அகல மறுத்து விட்டது. அங்கேதான் சாருமதி நின்று கொண்டிருந்தாள்.

''ஒரு கல்யாணத்தில் பல கல்யாணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன'' என்ற வாசகம்



சற்றே விலகி இரும் பிள்ளாய்!

கோமதி ஸ்வாமிநாதன்


'சட்' என்று ரங்கப்பாவுக்கு நினைவு வந்தது. அந்தக் கணத்திலேயே அவன் தன் திருமணத்தை மானசீகமாக நிச்சயித்துக் கொண்டான். அந்த நேரத்தில் பெயர் கூடத் தெரியாத அந்தப் பெண் — சாருமதி என்ற பெயரை அப்புறம்தான் தெரிந்து கொண்டான் — அவன் கற்பனையில் மணப் பெண்ணாக நின்றாள்.

அந்தப் பெண் 'ஓஹோ' என்ற அழகு இல்லாத போனால் கூட அவளிடம் ஒருவித அற்புதக் கவர்ச்சி இருந்தது. ஒரு தடவை அந்த முகத்தைப் பார்த்தவர்களை மறுபடியும் தீவிரமாகப் பார்க்கத் தூண்டும் காந்த சக்தி இருந்தது. நிறம்கூடச் சுமார்தான். மேக் அப், நகைகள், உடைகள் எல்லாமே சராசரிதான். ஆனாலும் அவள் அங்கு குழுமியிருந்த பெண்கள் கூட்டத்தில் தனித்துப் பிரகாசித்தாள். அதனால்தான் ரங்கப்பா தன் வருங்கால மனைவியின் இலக்கணத்தை அவள் முக லாவண்யத்தில் கண்டான்.

அப்புறம் அவனால் சும்மா இருக்க முடியவில்லை. பக்குவமாகச் சுந்தரேசனிடமும், சுந்தரேசனின் மாமாவிடமும் தன் விசாரணையைத் தொடங்கினான்.



கல்யாணக் கதைகள் – 4





சாருமதியின் தகப்பனார் ராமசாமி ஒரு பெரிய குடும்பஸ்தர். சால்ட்குவார்ட்டர்ஸ் பகுதி மரக்கடை ஒன்றில் கணக்கராக வேலை செய்து வருகிறார். சுமாரான வருமானம் தான். சாருமதிதான் மூத்த பெண். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்துவிட்டுக் கடந்த மூன்று வருடங்களாக வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறாள். வேலை கிடைக்கவில்லை. அவளுக்கு நாலைந்து தம்பி தங்கைகள். வசதிக் குறைவினால்தானோ என்னவோ சாருமதிக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. ராமசாமி, புது மாப்பிள்ளை சுந்தரேசனின் மாமனாருக்குத் தூரத்து உறவு. ரூளைப் பகுதியில் ஒண்டுக் குடித்தனம்.

ரங்கப்பா நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டான். இது ஒன்றும் எட்டாத உயர்ந்த இடமில்லை. அவனும் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்துவிட்டு உத்தியோகத்துக்கு வந்தவன் தான். ஆறுவருட சர்விசில் நானூறு ரூபாய் சம்பளத்தை எட்டிப் பிடித்திருந்தான்.

பக்குவமாக ராமசாமியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் பெண்ணுக்கு வேலைக்கான விண்ணப்பங்கள் போட இரண்டு மூன்று இடங்களையும் குறிப்பிட்டான். ராமசாமிக்கு ரங்கப்பாவை மிகவும் பிடித்துப் போய்விட்டது.

ஜானவாசஊர்வலம் கோயிலிலிருந்து கிளம்பியது. சாருமதி சர்க்கரைத் தட்டுடன் வந்து கொண்டிருந்தாள். அன்றைக்கு அறைக்குத் திரும்புவதற்குமுன் அவளுடன் ஒரு வார்த்தையாவது பேசிவிட வேண்டும் என்று துடித்தான். அதற்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. மறுநாள் முகூர்த்தத்தின்போது ராமசாமியோ சாருமதியோ அவன் கண்களில் தென்படவேயில்லை. அவர்கள் இன்று வேறு ஒரு கல்யாணத்துக்குப் போகவேண்டியிருந்ததால் முதல் நாளிரவு ஜானவாசத்திற்குத் தலையை நீட்டிவிட்டுப் போனார்களாம்!

ரங்கப்பா சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினான். பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது.

பக்கத்துத் தெருவில் ஜாதகப் பரிவர்த்தனை நிலையம் ஒன்று இருந்தது. ஓய்வுபெற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர், தம் ஜ்யோதிஷ அறிவு மறந்துவிடாமல் இருக்க ஜாதகங்கள் பொருத்தம் பார்த்துக்கொடுத்து வந்தார். அத்துடன் தம் கைக்கு வந்த பெண், பிள்ளை ஜாதகங்களைச் சொற்ப ஊதியம் பெற்றுக் கொண்டு கேட்பவர்களுக்குக் கொடுத்தும் உதவினார்.

ரங்கப்பா அவரைச் சந்தித்துப் பேசினான். ''சார்! என் அண்ணன் பத்மநாபன் ஜாதகம் இதோ இருக்கிறது. இதற்குப் பொருத்தமாக நான்கைந்து பெண்கள் ஜாதகங்கள் இருக்க வேண்டும். நடுத்தரமாக இருந்தால் போதும்'' என்று சொல்லிப் பத்மநாபன் ஜாதகத்தையும் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றையும் அவர் முன் வைத்தான். பத்மநாபன் ஜாதக நகல் ஒன்று வெகுநாட்களாகவே ரங்கப்பாவின் பெட்டியில் கிடந்தது. அந்த மனிதரும் தம் பேரேடுகளைத் திருப்ப ஆரம்பித்தார்.


''மிஸ்டர் ரங்கப்பா!'' என்று ஆரம்பித்தார் அந்தப் பெரியவர். ''இன்னும் இரண்டு மூன்று புத்தகங்களைப் பார்த்துத் தேட வேண்டும். நாளைக்குச் சாயங்காலம் வந்து வாங்கிக் கொண்டு போங்களேன்'' என்றார்.

ரங்கப்பா ஒரு நிமிஷம் யோசித்தான். ''சார்! ஒரு சிறு உதவி செய்யுங்கள். இந்த ஜாதகங்களையெல்லாம் நானாகச் சேகரித்து அனுப்பியதுபோல் இருக்க வேண்டும். என் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதி உங்களிடம் கொடுக்கிறேன். என் அண்ணன்கூடத்தான் அவள் இருக்கிறாள். அந்த விலாசத்துக்கு நீங்களே ஜாதக நகல்களையும் அந்தக் கடிதத்தையும் நாளைக்கு அனுப்பி விடுங்கள்...'' என்று சொல்லிவிட்டுத் தன் தாயாருக்கு நாசூக்காக ஒரு கடிதம் எழுதினான். தான் வெகு சிரமப்பட்டு நான்கைந்து இடங்களில் பத்மநாபனுக்கு ஜாதகம் வாங்கினதாகக் குறிப்பிட்டான். எதற்காக இளைய பிள்ளை இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்கிறான் என்று தாயார் ஊகித்துக் கொள்ள மாட்டாளா? அதற்காகத்தானே ஐந்து ரூபாய் செலவழிக்கத் தயாரானான்! பணத்தைக் கொடுத்துவிட்டு, கடிதத்தையும் தபால் செலவுக்கான சில்லறையையும் வைத்துவிட்டு ரங்கப்பா வெளியே வந்தான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை. ராமசாமியின் ரூளைப் பகுதி விலாசம் அவனுக்குத் தெரியும். சாருமதி ஏதாவது வேலைக்கு மனுப் போட்டாளா என்று கேட்கும் சாக்கில் போகலாம். அவளையும் பார்க்கலாம். ஆனால் அவ்வளவு துணிச்சல் வரவில்லை. ரூளையில் அந்தத் தெரு வரையில் போன ரங்கப்பா வீட்டைக் கண்டு பிடிக்காமலேயே திரும்பிவிட்டான். அதற்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமை எப்படியாவது போய்ப் பார்க்க வேண்டும். ஏதாவது காரணத்தைச் சொல்லி, அவளுடைய தற்கால அதிருஷ்ட பலனைப் பார்க்கலாம் என்ற முகாந்திரத்திலாவது அவளுடைய ஜாதகத்தை வாங்கிக் கொண்டு வரவேண்டும். அது எவ்வளவு சரியில்லாமல் இருந்தாலும் யாராவது மரத்தடி ஜோசியனிடம் கொடுத்துத் தன் ஜாதகத்துக்குப் பொருந்தும்படி மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். அப்புறம் பெற்றோர்களுக்கு அதை அனுப்பி வைக்க வேண்டும் என்ற திட்டங்கள் அவன் உள்ளத்தில் வரிசையாகப் பதிந்தன.

இரண்டு நாட்கள் கழித்து அவன் வேலை பார்க்கும் நிறுவனத்தின் மேல் அதிகாரி அவனைத் தம் அறைக்கு அழைத்தார். ஒரு விசேஷப் பயிற்சி பெற்றுக் கொள்ள அந்தக் கிளையிலிருந்து ரங்கப்பா உட்பட ஆறு நபர்கள் பத்துத் தினங்கள் பெங்களூர் போக வேண்டும் என்றும் அவர்கள் அன்றிரவே புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுவிட்டன என்றும் அறிவித்தார். ரங்கப்பா அன்றிரவே பெங்களூர் மெயிலில் புறப்பட்டு விட்டான். மறுநாள் காலையில் அவன் அண்ணன் பத்மநாபன் எழுதிய கடிதம் ஜன்னல் வழியாக அவன் அறைக்குள் வீசப்பட்டு அவன் திரும்பி வரும் வரையில் பிரிக்கப்படாமலேயே கிடந்தது.

பத்து நாட்களில் ஒரு பிரளயமே நடந்திருக்கிறது என்பது பாவம் ரங்கப்பாவுக்குத் தெரியாது. ஊரிலிருந்து திரும்பியதும் அறையில் கிடந்த கடிதத்தைப் பிரித்தான். பத்மநாபன்தான் எழுதியிருந்தான். ரங்கப்பா எழுதிய கடிதங்களும், ஜாதக நகல்களும் கிடைத்தனவென்றும் அன்று இரவு புறப்பட்டுத் தாயாருடன் சென்னைக்கு ஒன்றிரண்டு



'' என்ன சார் உங்க பையன் பிச்சைக்கார னுக்கு அரிசியை எண்ணிப் போடறான் ''!

'' ஐயையோ! அவனுக்குச் சரியாவே எண் ணத் தெரியாதே !''

இடங்களில் பெண் பார்க்க வரத் திட்டமிட் டிருப்பதாகவும், ஸ்டேஷனில் வந்து சந்திக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தான். பத்ம நாபனும் அவன் அம்மாவும் வந்து ரங்கப்பா பெங்களூர் போயிருப்பதைத் தெரிந்து கொண்டு திரும்பிப் போய்விட்டார்கள் என்று அவன் அறையைப் பகிர்ந்து கொண்டிருந்த நண்பன் கைலாசமும் சொன்னான்.

இரண்டு நாட்கள் கழித்துத் தபால்காரர் ஒரு கவரை ரங்கப்பா கையில் கொடுத்து விட்டுப் போனார். பத்மநாபனின் கை யெழுத்து விலாசத்தில் தெரிந்தது. அவசர மாகக் கடிதத்தைப் பிரித்தான்.

இரண்டு மூன்று இடங்களைப் பார்த்ததில் ஓர் இடம் திருப்திகரமாக இருந்ததாம். அவர்கள் சற்றுச் சிரமதசையில் இருப்பதால் பத்மநாபன் எதையும் எதிர்பாராமல் சிக்கன மாக உப்பிலியப்பன் கோவிலில் அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணத்தை வைத்துக் கொள்ளச் சம்மதிக்கிறானாம். ரங்கப்பா அவர்கள் வீட்டுக்குப் போய்ச் சம்மதம் தெரி வித்துவிட்டுப் பெண்ணுக்குப் பிள்ளையைப் பிடித்திருக்கிறதா என்பதையும் நாசூக்காகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமாம். கடைசியில் ரங்கப்பா போய்க் கல்யாண சம் பந்தம் பேசிவிட்டு வரவேண்டிய விலாசத் தையும் எழுதியிருந்தான். அதைப் பார்த்த தும் ரங்கப்பாவுக்குத் தலைசுற்ற ஆரம்பித்து விட்டது. ராமசாமியின் குடி விலாசம்தான் அது. பெண் பெயர் சாருமதி!

''அடப் பாவி!'' என்று மனத்துக்குள் கத்திக் கொண்டான் ரங்கப்பா. இவனுக்குத் தெரியாத விஷயம் இதுதான். இரண்டு வரு ஷங்களுக்கு முன் சாருமதிக்குத் தம் சக்திக்கு ஏற்பச் சுமாரான இடமாகக் கிடைத்தால் கல்யாணம் செய்துவிடலாம் என்ற ஆசையில் ராமசாமி ஜாதகப் பரிவர்த்தனை நிலையத்தில் ஒரு ஜாதகப் பிரதியை விட்டு வைத்திருந் தார். அந்த ஜாதகம் பத்மநாபனுக்குப் போய்ச் சேர்ந்தது. பத்மநாபனும் சாருமதி யைப் பார்த்துக் கிறங்கிவிட்டான்.

'நந்தி நகர்ந்தாலும் ஆண்டவன் தரிசனம் கிடைக்காது போலிருக்கே' என்று மன வருத் தப்பட்டுக் கொண்டே தன் கடமையைச் செய்வதில் முனைந்தான் ரங்கப்பா.

ராமசாமியின் வீட்டுக்கு அவன் போன போது அங்கே சாருமதி மட்டும்தான் இருந் தாள். ''ஒரு மணி நேரத்தில் அப்பா வந்து விடுவார்'' என்றாள்.

''பரவாயில்லை, உன்னிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டாலே போதும்'' என்றான் ரங்கப்பா. அவளை வந்து பெண் பார்த்துவிட் டுப் போனது தன் அண்ணன்தான் என்பதை விளக்கிவிட்டுப் பத்மநாபன் அவளை மணந்து கொள்ளத் தயாராயிருப்பதையும் கூறினான், வருத்தத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல்.

''ரொம்ப வந்தனம்'' என்றாள் சாருமதி. ''உங்க அண்ணா அடியேன் பேரில் கருணை வைத்ததற்கு நன்றி. ஆனால் பாவம், அவ ருக்கு நான் ஏமாற்றம் அளிக்கப் போகிறேன். என் மனம் வேறு ஒருவரை ஏற்கனவே நாடி விட்டது. அவர் பெண் பார்க்கவென்று வந்த போது இதைச் சொல்ல எனக்குத் தயக்க மாகவும் கூச்சமாகவும் இருந்தது. என்னை அவருக்குப் பிடிக்காமல் போய்விடும், பிரச்னை எழாது என்று ஆசையோடு நம்பியிருந்தேன். ஆனால் உங்கள் அண்ணா என் எண்ணத்தில் மண்ணைப் போட்டு விட்டார். இப்போது எனக்கு உண்மையைச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. உங்கள் அண்ணனை நான் மணந்து கொண்டால் அது யாருக்குமே நியா யம் செய்ததாகாது '' என்றாள்.

சற்று நேரம் பிரமித்துப் போய் நின்ற ரங்கப்பா, மெல்லத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு திரும்பிச் செல்ல முற்பட்டான். வாசல்வரை சென்றவன் ஏதோ நினைத்துக் கொண்டவனாகத் தயங்கித் திரும்பிக் கேட் டான்: ''உன் மனம் வேறு ஒருவனை நாடி விட்டது என்றால் அவனுக்கும் உனக்கும் ஏன் இன்னும் திருமணம் நடக்கவில்லை? ஒருவேளை உன் அப்பா சம்மதிக்கவில்லையா?''

''அதொன்றுமில்லை; அப்பாவுக்கு விஷயமே இன்னும் தெரியாது. ஏன், எனக்கே கூட அந்த ஒருவர் என்னை விரும்புகிறாரா என்று தெரியாது! நான் அவரை மனத்தால் வரித்துவிட்டேன் என்பது மட்டும்தான் எனக் குப் புரிகிறது'' என்றாள் சாருமதி.

ரங்கப்பாவுக்குச் சந்தேகம் தட்டியது. 'அப்படியும் இருக்குமா?' என்று நினைக்கை யிலேயே நெஞ்சம் குளுகுளுத்தது. 'அப்படி இல்லாது போனால்?' என்று எண்ணியதும் உள்ளத்தை இறுக்கிப் பிழிவது போலிருந்தது.

மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கேட்டான்: ''அந்த ஒருவனை நீ சுந்தரேசன் கல்யாணத்தில் சந்தித்தாயோ? பார்ப்பதற்கு அவன் ஏறத்தாழ என்னைப் போலத்தான் இருப்பானோ?''

''போங்கள்! இதற்கு மேல் ஒரு பெண்ணால் எப்படி விண்டுரைக்க முடியும்? உங்கள் அண் ணாவுக்குச் சீக்கிரம் வேறு இடத்தில் பெண் பார்த்துக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய் யுங்கள்'' என்று முகம் சிவக்கக் கூறிவிட்டுத் தலை குனிந்தாள் சாருமதி.

(இக் கதையில் வரும் சம்பவங்கள் உண்மை; பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளன.)

இலுப்பைப் பூ சர்க்கரை!

'ஆலையில்லா ஊரில் இலுப்பைப் பூ சர்க்கரை!' என்பது பழமொழி. பொங்கல் தோறும் சேப்பாக்கத்தில் டெஸ்ட் மாட்சுகள் கண்ட சென்னை மக்களுக்கு டெஸ்ட் இல்லாத இந்த வருஷத்தில் ரஞ்சித் கோப்பைப் பந்தயம் கூட ஒரு பெரிய நிகழ்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால் என்ன ஏமாற்றம்! 'பால் பொங்கிற்று' என்று கேட்பதற்குப் பதில் 'துக்கம் பொங்கிற்று' என்றல்லவா ஒருவரை ஒருவர் கேட்டுக் கொள்ளும் படியாகி விட்டது! இதோ சில குட்டி விமர்சனங்கள் :

ரேடியோ விமர்சகர் முருகேஷ் :

'பிட்ச்'சில் பந்து வளைந்து வளைந்து வேகமாக வந்து மோசமான 'பிட்ச்'சில் நம் சென்னை ஆட்டக்காரர்களை ஆட விட்டுவிட்டுப் பிறகு அவர்கள் நன்றாக ஆடவில்லையே என்று வருந்தலாமா? இந்த 'பிட்ச்' பௌலர்களுக்கு ரொம்ப ஒத்தாசை செய்துவிட்டது. பாட்ஸ்மன் களைக் கவிழ வைத்துவிட்டது!

தமிழகக் கிரிக்கெட் கழக உதவி காரியதரிசி திரு அண்ணாதுரை :

எந்த மோசமான பிட்ச்சிலும் ஆடிச் சமாளிக்கக் கூடிய திறன் படைத்தவர்களாக ஆட்டக்காரர்கள் இருக்க வேணும். மஞ்சரேகர் எந்த மோசமான 'பிட்ச்'சிலும் தம் 'டெக்னிக்'கை மாற்றிக் கொண்டு ஆடிச் சோபித்த தில்லையா?



காப்டன் வெங்கட்



வி. வி. குமார்



காப்டன் ஜெயசிம்மா



பட்டோடி



அபீத் அலி

என். மேத்தா



ஆட முடியாமல் போய்விட்டது என்கிறார்கள் நமது சென்னை பாட்ஸ்மன்கள். ஹைதராபாத் பந்து வீச்சு நிபுணர்களுக்கு அவர்கள் இவ்வளவு பயந்து 'கௌரவம்' கொடுத்திருக்க வேண்டியதில்லை. நம் சென்னை ஆட்டக்காரர்கள் பயந்து பயந்து ஆடி வெற்றியைக் கோட்டை விட்டுவிட்டார்கள்.

விளையாட்டு விமர்சகர் பி. என். சுந்தரேசன்:

நல்ல சங்கீத வித்வானை மோசமான ஹாலில் பாடச் சொல்லி விட்டு, கச்சேரி சோபிக்கவில்லையே என்று வருந்துவது போல

தமிழகக் கிரிக்கெட் உதவித் தலைவர் திரு எம்.ஜே. கோபாலன்:

நம்ம பையன்கள் முதலிலேயே பாய்ந்து அடித்து (Offensive game) ரன்களைக் குவித்திருக்க வேண்டும். அவர்களுக்குள்ள திறமை முழுவதையும் அவர்கள் பயன்படுத்தவில்லை. எதற்காக இப்படிப் பயந்து ஆடி விக்கெட்டு களைப் பறி கொடுத்திருக்கணும்? தமிழகக் கிரிக்கெட் இந்தப் பந்தயத்தின்போது இழந்த கௌரவத்தை மறுபடியும் நிலைநாட்டுவது சிரம சாத்தியம். - குண்டூசணி



18. பக்தியின் சக்தி; பொறுமையின் பெருமை

எந்தத் தேவி எல்லா உயிர்களிடத்தும் பொறுமை வடிவில் உறைகிறாளோ, நம்பிக்கை வடிவில் உறைகிறாளோ அந்தத் தேவிக்கு வந்தனம், வந்தனம், மீண்டும் வந்தனம். - ஸ்ரீ துர்கா சப்தசதீ

சாரதாமணியைப் பூஜித்ததோடு ராமகிருஷ்ணரின் நீண்ட நெடுங்கால சாதனைகள் அனைத்தும் முடிந்தன. சகல சாஸ்திரங்களிலும், சகல மதங்களிலும் கூறப்பட்டுள்ள மார்க்கங்களை எல்லாம் அநுஷ்டித்து, அவை ஒவ்வொன்றின் மூலமும் சத்திய சாக்ஷாத்காரம் பெற்ற ராமகிருஷ்ணர் இந்தச் சாதனைகளுக்குப் பட்டாபிஷேகமாகவே மனையாளை மகா திரிபுர சுந்தரியாக வழிபட்டார். அவள் பட்டம் சூடியதே இவருக்குச் சாதனைகளின் துறவாக ஆயிற்று!

இந்த மண்ணிலே ஏதுமறியாத சாரதையாக வந்த பராசக்தி, அவரிடமிருந்து சகல ஞானத்தையும் ஏற்றுக்கொண்ட பின்னும், பொதுவாக ஏதுமறியாதவள் போலவே வாழ்க்கையைத் தொடர்ந்தாள் — ஆயினும், இதன்பின் தகுந்த பாத்திரம் கிடைத்தபோது அவள் தனது மகத்தான ஞானப் பிரபாவத்தையும் காட்டலானாள்! அபூர்வமான சாதகர்களுக்கே இந்தப் பாக்கியம் கிட்டியது. ஆனால் வெளியுலகம் முழுவதற்கும் இன்னொரு பாக்கியம் கிட்டியது. அன்றிலிருந்து சாரதையின் அன்னையன்பு முன்னிலும் சிறப்பாகப் பிரவகிக்கலாயிற்று! 'அன்னையன்பு' என்றால் அன்னையாக இருந்து அவள் செய்த அன்பு என்றும் பொருள் கொள்ளலாம்; அல்லது, உலகை எல்லாம் அன்னையாகக் கண்டு அவள் செய்த அன்பு என்றும் பொருள் கொள்ளலாம். ராமகிருஷ்ணர் மெய்வருந்திப் பல்லாண்டுகள் கடினமான சாதனைகளைச் செய்து பெற்ற இலட்சியம் உலகனைத்தையும் திவ்விய மாதாவாகக் கண்ட பாவமேயாகும். அதை எவ்வித உழைப்பும் இன்றி அவரிடமிருந்து சுலபமாகப் பெற்றுவிட்டாள் சாரதை! ஒன்றும் தெரியாதவள் போலிருந்து எத்தனை பெரிய கொள்ளையிட்டு விட்டாள்! ஆனால் இதனினும் அதிசயம் யாதெனில் கொள்ளைக் கொடுத்தவரிடமும் அந்த மகாபாவம் நீங்காமல் நின்றது! சாரதைக்குத் தாம் செய்ய வேண்டிய பொறுப்பு முழுவதையும் ஈடேற்றிவிட்டோம் என்ற ஆனந்தமும் அதோடு அவருக்கு ஏற்பட்டது!

சாட்சாத் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் தன்னை வைத்துப் பூஜித்தார் என்றால் வேறெந்தப் பெண்ணும் இறுமாப்படைந்திருப்பாள்; அதைப் பறைசாற்றிப் பெருமை கொண்டிருப்பாள். அன்னை சாரதாமணியோ இது பற்றி அபூர்வமாகவே பேசுவாள். பேசுகையில் இறுமாப்பும் இராது, அதிவிநயமும் இராது. அதைப் பற்றி சகஜமாகப் பேசுவாள்.

அவளது மைத்துனர் மகள் லக்ஷ்மி பெரியவளானபின் ஒரு முறை கேட்டாள்: ''சித்தி, உனக்குக் கூச்சம் ரொம்ப அதிகமாச்சே! சித்தப்பா உன்னைத் தொட்டுப் பீதாம்பரம் போத்தினதையும், உன் காலில் செவ்வரக்குப் பூசினதையும், உன் வகிட்டிலே சிந்தூரம் இட்டதையும், உன் வாயிலே பட்சணமும் தாம்பூலமும் ஊட்டினதையும் நீ எப்படித் தாங்கிண்டே?''

சாரதை அதற்குச் சொன்ன பதில் இவ்வளவே: ''அப்போ நான் நானாகவே இல்லை.''


அதற்கு மேல் என்ன சொல்லக் கிடக்கிறது?

வசந்த காலத்திலே மாமரம் கனிகளை உதிர்க்கிறது. உண்கிறோம். அடுத்த ஆண்டு மறுபடி வசந்த காலத்தில் மாமரம் மீண்டும் கனிகளை உதிர்க்கிறது! ராமகிருஷ்ணர் தமது அநுபவக் கனிகளை சாரதையிடம் உதிர்த்தபின்னும் மீண்டும் அவரிடம் அக்கனிகள் தோன்றிக் குலுங்கலாயின, இவை சாதனைகளை அப்பியசித்ததால் தோன்ற

வில்லை. எவ்வித சாதனையும் அற்ற சாரதைக்கு அவர் எப்படிக் கனிகளைத் தந்தாரோ, அவ்விதமே பராசக்தி அவரிடம் தானாக அந்த அநுபவங்களை அருளினாள்.

ஆறு மாத காலம் இரவுகளிலெல்லாம் இப்பேர்ப்பட்ட பரவச பாவநிலைகளில் திளைத்தார் ராமகிருஷ்ணர். அந்த உயர் நிலைகளிலிருந்து அவரது மானுட சரீரத்தை மீட்டுத்தருவதற்காக சாரதை இரவெல்லாம் கண் விழிக்கவேண்டியிருந்தது. அவரது அற்புத அழுகைகளில் அந்தக் கோமள சரீரமே கரைந்துவிடுமோ என்று அவள் பொறி கலங்கியதுண்டு! அவரது அட்டகாசச் சிரிப்பிலே அந்த மலர் உடல் அப்படியே வெடித்துவிடுமோ என்று அவள் கதறித் துடித்ததுண்டு.

''ஐயோ, அம்மாடி! அப்ப நான் பட்டபாட்டைச் சொல்லி முடியாது. டாகூர் (ராமகிருஷ்ணரை அவரது அணுக்கத் தொண்டர்கள் 'டாகூர்' என்றே அழைப்பர்) எந்தெந்த நிலைகளில் ஆழ்ந்திருந்தார்னு வார்த்தையால் வர்ணிக்கவே முடியாது. தெய்விக பரவசத்திலே என்னென்னவோ சொல்லிண்டு போவார், சிரிப்பார், அழுவார், சில சமயத்திலோ ஒரு செயலும் இல்லாம கல்லாக ஸ்தம்பிச்சுடுவார். ஒரு ராத்திரி முழுக்க இப்படி இருந்திருக்கார். சுவாசம் இருக்கா, இதயத் துடிப்பு இருக்கான்னு கூடத் தெரியாது. நான் எப்படி நடுநடுங்கிண்டு உட்கார்ந்திருப்பேன் தெரியுமோ? அவர் காதிலே திவ்ய நாமங்களையும் மந்திரங்களையும் உரக்கச் சொல்லமுடியாதபடி என் நா வறண்டு போயிடும். பொழுது விடியாதா, ஹ்ருதய் மாதிரி அழுத்தக்காரா வந்து அவரைச் சமாதியிலேயிருந்து கலைச்சு பஹிர்முகமாக்க மாட்டாளான்னு தவிச்சுண்டு உட்கார்ந்திருப்பேன். ஒரு ராத்திரி



டாகூர் போயிட்டார்னே நினேச்சு 'ஓ'ன்னு அழுதுட்டேன்! அப்புறம் காளியம்மாங்கிற வேலேக்காரியை விட்டு ஹ்ருதயரைக் கூப்பிட்டுண்டு வரச் சொன்னேன். ஹ்ருது வந்து மணிக் கணக்கா டாகூர் காதிலே கத்தினபின் தான் அவருக்கு இகலோக ஸ்மரணை வந்தது. நான் கண்ணீரும் கம்பலேயுமா கண் இடுங்கி முகம் வீங்கியிருந்ததைப் பார்த்து அந்தக் காருண்யமூர்த்தி தவிச்சுப் போயிட்டார். 'அம்மா, இப்படி எத்தனையோ ராத்திரி எனக்காக நீ கண் முழிச்சுண்டு உட்கார்ந்திருக்கியா? பகலெல்லாம் உனக்கு ஓயாத உழைப்பு. ராத்திரியும் என்னுலே உன் தூக்கம் கெட்டுப் போறதா, கூடாது கூடாது! போறும், நீ என் ரூமிலே ராத்தங்கியது. உனக்கு நான் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லியும் ஆச்சு. இனிமேலே நஹுவத்திலேயே தூங்கு. இங்கே எனக்கு என்ன ஆயிடறதோன்னு கவலேப் படாதே. அம்மா பார்த்துக்குவா. உனக்கும் அது தெரியும். ஆனுலும் நீ என் பக்கத்திலேயே இருந்தா கவலேயும் பயமும் படத்தான் செய்வாய். அதனுலே இனி மேல் நஹுவத்திலேயே நித்திரை வைச்சுக்கோ' என்ருர். நானும் அன்னிலேருந்து அப்படியே செஞ்சேன்'' என்று பிற்காலத்தில் சாரதை சொல்லுவாள்.

பகலில் வெளி வராத கோஷா ஸ்திரீயான சாரதாமணி இப்போது இரவிலும் கணவருடன் தங்காததால் அவரைப் பார்ப்பதே துர்லபமாகத் தொடங்கியது. ஒரு நாள் அபூர்வமாக இருவரும் தனித்திருந்தனர். தனிமையில் அவர் தமக்குப் பூஜை செய்தது அவளுக்கு நினேவு வந்தது போலும்! அதற்குப் பிரதி போல் அவரை ஜகன்மாதாவாகவே பார்த்து வணங்கினுள்.

அவர் சிரித்தார்: ''நாம் பகவதி மட்டுமல்ல, திவ்விய மாதாவுக்குப் பாங்கியராகப் பணிவிடை செய்கிற சகிகளும் நாமே'' என்ருர்.

'தாஸோஹம்' என்ருல் 'நான் உன் அடிமை' என்று இறைவனிடம் சொல்கிற நிலே. இந்த நிலேயிலிருந்தே 'ஸோஹம்' என்கிற நிலே — 'நானும் இறைவனும் ஒன்றே' என்று அநுபவிக்கிற இறுதி நிலே—சித்திக்கும். 'ஸோஹம்' என்கிற ஹம்ஸ ராமகிருஷ்ணருக்கு இப்போது என்னவோ 'தாஸோஹம்' ஆசை வந்தது. அதனுல்தான் சர்வேசுவரியின் சேடியாகத் தம்மையும் சாரதையையும் சொல்லிக் கொண்டார்.

அவரையே கண் கொட்டாமல் பார்த்த தேவி, ''ஆமாம், நீங்கள் அம்மாவின் சேடிதான்'' என்ருள்.

பட்டுச் சேலே ஒன்றைக் கொண்டு வந்து அவருக்கு உடுத்தினுள்; நெற்றியில் திலகம் தீற்றினுள்; வளேயலும், ஹாரமும் அணிவித்தாள் — அன்ருெரு நாள் அவருக்கு அவர் செய்ததை எல்லாம் இன்று திருப்பி விட்டாள்! சாது சாரதை அவரிடம் கடனுளியாகிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்த மகா கெட்டிக்காரிதான்!

''நாம இரண்டு பேரும் அம்பாளோட சேடிகள்'' என்று உற்சாகமாகச் சொன்னுள்.

அந்தத் தம்பதியரிடை புனித ஆனந்தம் பேரலேகளே மோதியது.

அலே உயர்ந்தால், அதை அடுத்து மடிந்து விழவும்தானே வேண்டும்?

ஆனந்த சாரதைக்கு மலேரியாக் காய்ச்சல் கண்டது. மதுர்பாபுவுக்குப் பிறகு காளி கோயில் நிர்வாகியாக வந்த சம்புநாத மல்லிக், பிரசாத் பாபு என்ற வைத்தியரைக் கொண்டு சாரதைக்குச் சிகித்ஸை தந்தார். ஆனுல் பணிவிடை செய்யவே பிறந்த அவளால், பிறரது பணிவிடைக்குப் பாத்திரமாகிப் புக்ககத்தில் இருக்க முடியவில்லே. ''நான் ஜயராம்பாடிக்கே போயிடறேனே!'' என்ருள் கணவரிடம்.

''ஓ, பேஷாக!'' என்ருர் அவர். அதுதான் சந்நியாசி என்பது!

1873 ஜூன் மாதத்தில் சாரதை பிறந்தகத்துக்குப் புறப்பட்டாள்.

பிறந்தகத்துக்குப் போகும் வழியில் காமார்புகுருக்குச் சென்ருள் சாரதை. அங்கே ஒரு துயரச் சம்பவம் நிகழ்ந்தது.

ஹ்ருதயரோடுகூட தக்ஷிணேசுவரத்தில் ஆலய பூஜையை நடத்தி வந்த ராமகிருஷ்ணரின் தமையனுரான ராமேசுவரர் அப்போது காமார்புகுரில் இருந்தார். சுபவாத ஜுரம் கண்டது அவருக்கு. தாரக நாமமாகிய ஸ்ரீராம நாமாவை ஜபித்தபடி யிருந்தார். கடைசியாகச் சுற்றியிருந்தவர்களேப் பார்த்து, ''இந்தச் சரீரத்தை ச்மசானத்து மத்தியிலே வெச்சுக் கொளுத்த வேண்டாம். சாலே ஓரமான இடத்திலே புதையுங்கோ. அந்தச் சாலே வழியா ரொம்ப சாதுக்கள் போவா. அவாளோட பாத தூளி எப்பவும் இந்தச் சரீரத்தைப் புதைச்ச இடத்துக்கு மேலே பட்டுண்டே இருக்கட்டும்'' என்ருர்.

அன்றிரவே அந்தப் புனித ஜீவன் மண்ணுலகிலிருந்து விடை கொண்டது.

மதனியின் ஆருத் துயரத்தில் சாரதை பங்கு கொண்டாள். துயரம் செறிந்த சூழலில் நோயாளியான தன்னுல் வேறு

இப்பெண்ணின் பேரழிலுக்குக் காரணமென்ன?



முத்தென ஒளிரச் செய்யும் லக்மே வேனிஷிங் க்ரீம்

லக்மே வேனிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தில் மறைந்து செயலாற்றுகிறது. அது உடனடியாக உங்கள் முகத்தை எழிலோங்கச் செய்கிறது. சிறிது தடவிப் பாருங்கள். முத்துப் போல் ஒளிரச் செய்யும் அதன் விசேஷ செயலாக்கம் விந்தை புரிவது தெரியவரும்.

உங்கள் முகமலர் முத்தென ஒளிரும். இந்த இலேசான படிமானத்தின் மீது சிறிது லக்மே முகப்பவுடர் பூசுங்கள். இப்போது கண்ணாடியில் பாருங்கள். நீங்கள் எழிலோங்கி எடுப்பாக விளங்குவீர்கள் !

லக்மே வேனிஷிங் க்ரீம்

AGP/L-86

இம்சை நீடிக்க வேண்டாம் எனக் கருதி ஜயராம்பாடிக்கு விரைந்தாள்.

அவளுக்கு உடம்பு தேறவில்லை. மனத்திலும் வழக்கமான தெளிவில்லை. வழக்கம்போல் ஊராரின் வம்பு, அம்மாவின் குமுறல் எல்லாம் சேர்ந்து கொண்டன. தக்ஷிணேசுவரத்து ஆனந்த வாழ்வுக்கும், ஷோடசி பூஜையின் உன்னதத்துக்கும் சம்பந்தமேயில்லாத சுவையற்ற அவல வாழ்வாயிற்று! சாரதை, ஷோடசியாகி அணிந்த பீதாம்பரத்தையும் சங்கு வளையலையும் தனது அம்மாவுக்குத் தந்தாள். ராமகிருஷ்ணரின் உத்தரவுப்படியே அப்படிச் செய்தாள். ஆனால் அதிலும்கூட ஆனந்தமில்லை. ஏதோ ஒரு மங்களம் முடியுமுன் இந்த மங்களத்தைச் செய்துவிட வேண்டும் என்பது போலவே செய்தாள்.

ஒரே ஒரு சந்தோஷ சம்பவம் இதனிடை நிகழ்ந்தது. சாரதையின் மூன்றாவது தம்பி காளிகுமாருக்குப் பூணூல் கல்யாணம் நடத்தினார்கள்.

அதற்கு நான்காம் நாள் ஸ்ரீராம நவமி. எதிர்பாராத துக்க சம்பவம் நிகழ்ந்தது. சாரதையின் அருமைத் தந்தை ராமசந்திர முகர்ஜி ஸ்ரீ ராமபிரானின் இணையடி அடைந்து விட்டார்! ராமன் பெயரைச் சூட்டிக்கொண்டு, ராமா ராமா என்று வாழ்ந்த அந்த நல்ல மனிதர் ராமநவமியன்றே ராமனைச் சென்றடைந்தது, அவரைப் பொறுத்தமட்டில் பெரிய பாக்கியம் தான். ஆனால் சியாமசுந்தரியின் கரத்திலிருந்து சங்கு வளையல் கழன்றது. அவளும், சாரதையும், மற்றக் குழந்தைகளும் தவித்தனர்.

பொருளாதாரத் துயரம் பயங்கரமாக வந்து பீடித்தது. ராமசந்திரர் பெரிய சொத்து எதுவும் வைத்துப் போகவில்லை. பயிரிடவே லாயக்கில்லாத நிலையில் சிறிது நிலம் இருந்தது, அவ்வளவுதான்! புருஷக் குழந்தைகள் எதுவுமே இன்னும் உத்தியோகம் பார்க்கிற அளவுக்குத் தலை எடுக்கவில்லை. கல்கத்தாவில் புரோகிதம் செய்து வந்த ராமசந்திரரின் சகோதரர் ஈசுவர சந்திரர் தமது அற்ப சம்பாத்தியத்திலே ஏதோ சிறிது மிச்சம் பிடித்து அனுப்பினார். அது எப்படி எட்டு ஜீவன்களின் வயிற்றை நிரப்பும்?

இத்துணை இன்னலில் அங்கு தானும் ஒரு பாரமாக இருக்கக் கூடாது என்று கருதித் தக்ஷிணேசுவரம் திரும்பி விட்டாள் சாரதை.

தேவி சியாமசுந்தரி கூலிக்கு உழைத்துக் கொட்டலானாள். ஊர் பெரியதனக்காரரான பானர்ஜியின் வீட்டு நெல்லைக் குத்திக் கொடுத்து, அதில் கால் பாகம் கூலி பெற்றாள். குஞ்சும் குளுவானும் நிறைந்த தன் வீட்டை விட்டு வெளியே சென்று சமைத்துப்போட இயலாததால், தன் வீட்டுப் புறக்கடையிலேயே பன்னிரண்டு அடுப்புக்களை ஏக காலத்தில் மூட்டிக் கொண்டு பல குடும்பங்களுக்குச் சமையல் செய்து அனுப்பி வைத்தாள். குடித்தனம் நடத்தவும் பிள்ளைகளைப் படிக்க வைக்கவும் இதில் கிடைத்த கூலி போதவில்லை. மூன்று பிள்ளைகளை உறவினர் வீடுகளுக்கு அனுப்பி வைத்தாள்.

சாரதை சாம்பிக் கிடந்தாள் தக்ஷிணேசுவரத்திலே. அவளுக்குப் பயங்கரமான வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. சம்பு பாபு சிறந்த சிகித்சைக்கு ஏற்பாடு செய்த போதிலும் நோய் குணமாவதாகக் காணோம். புத்திர சோகப்பட்ட மாமியாரிடம் தன் நோயைப் பற்றிப் பிரஸ்தாவமே செய்யாமல், மூச்சைக் கையில் பிடித்துக் கொண்டு கைங்கரியம் செய்தாள் சாரதை. அப்பாவின் மரணமே அவளை உருக் குலைத்துவிட்டது என்று அந்தக் கிழவி நினைத்தாள்.

ராமகிருஷ்ணர் இப்போது சாரதையிடம் நடந்து கொண்ட விதம் விசித்திரமாயிருந்தது. எவளை ஸ்ரீராஜ ராஜேசுவரியாக வழிபட்டாரோ அவளை இப்போது அவர் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இதற்கும் காரணம் அந்த ராஜராஜேசுவரியேதான். அவர் ஷோடசி பூஜை முடிவில் தமது சாதனைகள் அனைத்தின் பலனையும் சாரதையின் உட்செலுத்திவிட்டு, தாம் திறந்த வானைப் போல் இலேசாகிவிடப் பார்த்தார் அல்லவா? ராஜ ராஜேசுவரி அதை அநுமதிக்கவில்லை. ஊரில் திருடர்கள் மிகுந்திருக்கையில் காவல் அதிகாரி நிம்மதி தேடிக் கொள்ள முடியுமா? கலி முற்றப் போகிறது, இந்த சுதாயிதான் அதைத் தடுக்கும் காவல் பட்டாளத்தை அமைக்க வேண்டும் என்று அம்பிகை திருவுள்ளம் கொண்டனள். அவர் எந்த சாதனையும் புரியாமலே அவருள் மீண்டும் மகா வித்யைகளைப் பயிரிடத் தொடங்கினாள். அவற்றின் அறுவடையை அவர் பல புண்ணிய சீடர்களுக்குப் படைத்து அவர்களை விவேகாநந்தர், பிரம்மாநந்தர், ராமகிருஷ்ணாநந்தர், சாரதாநந்தர் முதலிய தர்ம போதகர்களாக ஆக்க வேண்டும் என்பது திவ்விய மாதாவின் சங்கற்பம். எனவே, இப்போது ராமகிருஷ்ணர் மீண்டும் பல அநுபவங்களையும் உபதேசங்களையும் தம்முள் பெற்றார். அதன் கனம் தாங்

கொணுததாக இருந்தது. தர்மகர்த்தச் சொத்துப் போல், அம்பாள் நியமித்துள்ள சீடர்களுக்கு வழங்கவே இந்த ஆத்மிக தனம் தம்மிடம் வந்து சேர்ந்திருக்கிறது என்றும் அறிந்து கொண்டார். அந்தச் சீடர்கள் சீக்கிரமே வந்து தனத்தைப் பெற்று, தமது கனத்தைக் குறைக்கமாட்டார்களா என்று பரிதவிக்கலானார். பசு மாடு மடியிலே பால் முட்டிக் கனக்கிறபோது, கன்று வந்து பருகாதா என்று எப்படி ஆவலோடு, ஆதுரத்தோடு, ஆதங்கத்தோடு எதிர்பார்த்து நிற்குமோ அப்படியே சீடர்களுக்குத் தமது ஆத்ம தனத்தை ஊட்ட ஆர்வத் துடிப்பு கொண்டிருந்தார் ராமகிருஷ்ணர். பசு அடிவயிற்றிலிருந்து 'அம்மா' என்று கத்துவது போலவே ராமகிருஷ்ணர் 'ஒளிந்திருக்கும் என் குழந்தைகளே, வாருங்கள் வாருங்கள்' என்று கதறலானார்.

இந்தப் பெரியக் கதறலுக்கிடையே, சாரதை ஒளித்து வைத்திருந்த துயரம் அவருக்கு எப்படித் தெரிய முடியும்?

ராமகிருஷ்ணர் மனம் வைத்திருந்தால் ஒரு சில பிரபுக்களிடம் சொல்லி மாமியார் குடும்ப வறுமையைத் தீர்த்திருக்கலாம். ஆனால் அவருக்கு அப்போது மனம் என்பதே சாதாரண ரீதியில் செயல்படவில்லே. சாரதையும் இவ்விஷயமாக வாய் திறந்தாளில்லே.

ஓராண்டு உடல் உபாதையைப் பொறுத்துக் கொண்டு பதிக்கும், பக்தர்களுக்கும் சுசுருஷை செய்தாள். பிறகு இடம் மாறி இருந்து பார்த்தால் வித்தியாசம் தெரியலாம் எனக் கருதி ஜயராம்பாடிக்குத் திரும்பினாள்.

வித்தியாசம் தெரிந்தது! அதாவது வயிற்றுப் போக்கு மகா பயங்கரமாகி அவளே மரணத்தின் நுழை வாயிலுக்கே அழைத்து வந்துவிட்டது.

நடைப்பிணமாகக்கிடந்தாள்சாரதை.

ராமகிருஷ்ணருக்கு எப்படியோ விஷயம் தெரிந்தது. அப்போது அவரது மனமும் விஷயத்தை வாங்கிக் கொள்ளும் நிலேயில் இருந்தது! பெண் பிள்ளையைப் போல் அலமாந்து போனார். "ஹ்ருதே, கடைசிலே எல்லாம் இப்படியா முடியணும்? அவள் ஜன்மா எடுத்ததுக்கு எத்தனேயோ செய்யணுமே! அதொண்ணும் செய்யாமல், சாதாரண மநுஷ்யாள் வந்து போறாப்பலேயா அவளும் போயிடப் போறா? இதுவா அம்பாளோட சங்கல்பம்?" என்று விம்மினார்.

அதுவல்ல அம்பாளின் சங்கற்பம் என்றும் அப்போதே புரிந்து கொண்டார். உடனேயே பத்தினியின் கவலேயை அடியோடு மறந்து, சீடர்களுக்காகப் படுகிற கவலேயை எடுத்துப் போட்டுக் கொண்டார்.

பின்னிக் கொள்கிற கால்களோடு கஷ்டப்பட்டு ஏரிக் கரைக்கு வந்த சாரதாமணி கிழித்த நாராகக் கீழே சாய்ந்தாள். ஏரித் தண்ணீருக்குள் அவளது பிரதிபிம்பம் தெரிந்தது. 'அடி, சாரதே! உன் சரீரத்தைப் பார்த்தியா? ஒரு காலத்தில் எப்படித் தளதளன்னு இருந்தது? இப்போ எலும்பும் தோலுமா ஆகியிருக்கு. கதுப்புக் கன்னத்திலே எலும்பு மேடு இட்டிருக்கு! கமுகுக் கழுத்து நேர்ந்து நலிஞ்சிருக்கு! தங்க வர்ணம் பித்தளேயாப் பல்லே இளிச்சிடுத்து! இதுதாண்டியம்மா மநுஷ சரீர' என்கிறது. இதுக்குத்தான் ஊர்ப்பட்ட சிங்காரமும், சவரணேயும் பண்ணியாறது. சை, இதோடே உன்னே ஏன் சம்பந்தப்படுத்திக்கணும்? இது இங்கேயே இப்படியே கிடக்கட்டும்; இதை விட்டுட்டு நீ போயிடேன்' என்று சொல்லிக் கொண்டாள்.

அவளேப் போக விடுவாளா தேவி?

வயிற்றுப் போக்கு நின்றது.

மெலிந்த உடல் பருக்கலாயிற்று.

ஆனால் இதென்ன? அது ஆரோக்கியப் பருமனக நிற்கக் காணுமே! ஊளேச் சதை போடுகிறதா என்ன?

ஊளேச் சதையும் அல்ல. உடம்பெல்லாம் நீர் சுரந்து குத்தல் கொடுக்கிறது.

தலேவலிபோய்த் திருகுவலி. வயிற்றுப் போக்கு நின்றது, இப்போது உடம்பெல்லாம் துர்நீர் பரவி வதைக்கிறது.

பொறுமையின் அவதாரத்தை உலகுக்குக் காட்ட வேண்டும் என்பதற்காக அம்பாள் அவளே வறுத்தெடுக்கிறாள். வறுத்தெடுக்கவில்லே, விஷ நீர்ப் பாண்டத்துக்குள் அமுக்கி எடுக்கிறாள்!

சாரதையின் மூக்கிலிருந்தும் கண்ணிலிருந்தும் ஊனீர் பிரவாகமாக வழிந்தபடி இருக்கிறது. உடம்பை அசைக்கவும் முடியாமல் கிடக்கிறாள்.

தம்பி உமேஷ் அருமை அக்காவின் பக்கத்தில் வந்து அமருகிறான். தனக்குக் குளிப்பாட்டி, உடை உடுத்தி, உணவூட்டி வளர்த்த தமக்கை திணறிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவன் உள்ளம் குழைகிறது. தேம்பியழாத குறையாகச் சொல்கிறான்: "அக்கா, பக்கத்திலேயே சிம்மவாஹினி இருக்கச்சே உனக்கு உடம்புக்கு வரப்படுமா? அவள் உன் உடம்பைச் சரியாக்கினுலொழிய சாப்பிடறதில்லே, உபவாசமிருந்து செத்தாலும் சரின்னு விரதம் எடுத்துக்கோயேன்!"

அந்தப் பிள்ளே திடுமென அப்படிப் பேசியது சாரதைக்கு ஆச்சரியமாயிருந்தது. 'இதுவும் சிம்மவாஹினியின்

லேதானே? எனக்கு உடம்பு குண மாகிறதோ, இல்லையோ, இவன் சொல்கிறபடி உபவாசமிருந்து மாண்டு போனாலும் நல்லதுதானே! அம்பாளுக்காக விரதம் இருந்து மரணமடைந்தால் அதில் தற்கொலை என்ற தோஷமும் வராது அல்லவா?"

''அக்கா, நான் சொல்றதைத் தட்டாதே! இதோ, என் கையைப் பிடிச்சுக்கோ. நானே உன்னைத் தாங்கலாக அணைச்சுண்டு அம்பாள் கோயிலிலே கொண்டு போடறேன். அங்கேயே கிட. ஒண்ணு, அவள் உன் உடம்பைக் குணமாக்கட்டும், இல்லாட்டா இந்தப் பாழாப் போற குடும்பத்துக்கு உழைச்சுக் கொட்டி ஓடாயிட்ட நீ....''

உமேஷ் வார்த்தைகளை முடிக்கமாட்டாமல் திக்கிய போதே, சாரதை அவனது கையைப் பிடித்துக் கொண்டு எழுந்திருக்க முயன்றாள்.

அவனுக்கு ஒரே குஷியாகிவிட்டது.

'' பௌர்ணமியா, அமாவாசையான்னு வித்தியாசம் தெரியாதபடி என் கண்ணிலேருந்து ஓயாமல் ஜலம் கொட்டி நான் குருடியாவே இருந்தேன். உமேஷ் என்னைப் பிடிச்சுண்டு போய் சிம்மவாஹினி சந்நிதியிலே கிடத்திட்டுப் போயிட்டான். தன்னந் தனியாக் கிடந்தேன். அவஸ்தைக்கு மகுடாபிஷேகம் பண்ணற மாதிரி வயிற்றுப் போக்கும் திருப்பிண்டது. மூணு நாலு தடவை குழந்தை மாதிரி தவிழ்ந்தே வெளிலே போயிட்டு வந்தேன். இப்படி நான் தனியாக் கிடக்கறேன்னு பக்கத்து வீட்டு அம்மாளுக்குத் தெரிஞ்சுது. அவளை நான் செவிலித் தாயாவே நினைச்சு 'ஆயா'ன்னு கூப்பிடற வழக்கம். வயசுப் பெண்ணான நான் கண்ணும் தெரியாமல் தனியாக இருப்பதனால் எங்கே பயந்து நடுங்குவேனோன்னு அவளுக்குக் கவலை. அதனாலே அடிக்கொரு தடவை இருமிக் காட்டிண்டே இருந்தா—'' நம் அம்மாவின் பிற்கால வர்ணனை இது.

நேரம் போய்க் கொண்டேயிருந்தது. சிம்மவாஹினியிடமிருந்து சாரதைக்கு எந்த சூசகமும் வரவில்லை.

அவளுக்குத் தெரியாதா, சாரதையை விடத் தவிக்கிற இன்னொரு ஜீவனுக்குத்தான் தன் தரிசனத்தை முதலில் தர வேண்டும் என்று?

'ஊரொப்பக் குடித்தனமும் பண்ணாமல், இப்படி மாளாத வியாதிப் பிண்டமாக இந்தப் பெண் வந்து சேர்ந்ததே!' என்று பெற்ற வயிறு பற்றி எரிய அமர்ந்திருந்தாள் சியாமசுந்தரி. கூலி கொடுக்கும் யஜமானர்களுக்குச் சமைத்து அனுப்ப வேண்டியிருந்ததால் அவள் வீட்டை விட்டும் வர முடியவில்லை. தனியே அமர்ந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

திடுமென ஒரு பன்னிரண்டு வயதுப் பெண் அவள் முன் வந்து நின்றாள். பார்த்தால் கருமார் வகுப்புப் பெண் போலத்தான் இருந்தது. ஆயினும் கருமை ஆர்ந்த காளியாக, கருமம் தீர்க்கும் காளியாக அவளே சியாமசுந்தரியின் உள் மனத்துக்குத் தென்பட்டாள்.

அந்தப் பெண் சியாமசுந்தரியின் கையில் ஒரு மருந்துப் பொட்டணத்தைத் திணித்தாள். ''சட்டுனு போ, ஊம், ஜல்தி! அவளை எழுப்பி இங்கே அழைச்சிண்டு வந்து இந்த மருந்தைக் கொடு'' என்றாள். உடனே மறைந்தும் போனாள்.

மறைந்தவள் இங்கே சாரதையிடம் வந்தாள். ''சாரதா! சுரைப் பூ இருக்கே, அதோடு உப்பை வெச்சு அரைச்சுப் பிழிஞ்சு, அந்தத் துளியைக் கண்ணிலே விட்டுக்கோ; குணமாயிடுவே'' என்றாள்.

சாரதை தனது திடீர் விதிர்ப்பை உணரவும், அவளுக்கு நன்றி சொல்லி நமஸ்கரிக்கவும்கூட அவகாசம் தராமல் நொடியிலே மறைந்தாள்.

சியாமசுந்தரி கோயிலுக்கு வந்தாள். பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்து மருந்து தந்தாள். சாரதை சொன்ன வண்ணம் உப்புச் சேர்ந்த சுரைப்பூச் சாரத்தைக் கண்ணில் பிழிந்தாள்.

அவ்வளவே! மளமளவென்று கண்களிலிருந்து எதுவோ உதிர்ந்தது. வற்றாத ஊற்று வற்றியது. அந்தக் கணமே சாரதையின் தெள்ளிய திருநயனங்கள் தமது பழைய காந்தியை, சாந்தியைப் பெற்றுவிட்டன.

உடல் வீக்கமும் மாய மந்திரமாக வடியலாயிற்று.

இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? 'சர்வ வியாதி பிரசமனி'யும், 'சர்வ மிருத்யு நிவாரிணி'யுமான தேவி சங்கற்பித்துவிட்டாலே போதும்; எந்த வியாதியும் பறந்து போகும்! அப்படியிருக்க அவள் மருந்து கொடுத்தும், சாறு பிழியுமாறு சொல்லியும் சிறிது வேலை வாங்கி, சிறிது போது கழித்தே நிவாரணம் தந்தாளே அதுதான் ஆச்சரியம். அவள் இஷ்டம், அப்படி விளையாடினாள்!

சாரதைக்கு எல்லையில்லாத விச்ராந்தி உண்டாயிற்று. பிறருக்குத் தந்த தொந்தரவு ஓய்ந்ததே! ''சாக்ஷாத் அம்மாவே மருந்து தந்தாள்'' என்று வருபவர் போகிறவரிடமெல்லாம் வாயாரச் சொல்லி, தேவியின் கருணையை நினைந்து நெஞ்சுருகினாள்!

(தொடரும்)


மகிழ்ச்சிதுள்ளும்
வளமான வாழ்வு
கிராமங்களிலே...
ராக்ஃபோர்ட் டால்மியா சிமெண்ட்
உறுதியான எதிர்காலத்திற்கு எழுப்பப்படும்
இன்றைய கட்டடம்.
டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிட்.
SOYANI/HF

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் எண்பத்தெட்டு

பட்டாபிஷேகம்

அருள்மொழி வர்மர் தொடர்ந்து புலவரைப் பார்த்துக் கூறினார்: ''ஐயா! தங்களை இன்னும் ஒன்று கேட்கிறேன். சிபிச் சக்கரவர்த்தி முதல் சிவஞான கண்டராதித்தர் வரையில் எங்கள் சோழ குலத்து மன்னர்களின் புகழைத் தாங்கள் விரித்துரைத்தீர்கள். அவையெல்லாம் இந்தப் புராதன குலத்தில் பிறக்கும் பாக்கியம் பெற்ற எனக்கு எவ்வளவு பொருத்தமோ, அவ்வளவு என் சிறிய தந்தையும்,

அமரர் கல்கி



மகான் கண்டராதித்த சோழரின் உத்தமத் திருப்புதல்வருமான மதுராந்தகத் தேவருக்கும் பொருத்தமாகுமல்லவா?''

புலவர் ''ஆம்'' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். சபையிலிருந்தவர்கள் அத்தனை பேரின் கண்களும் சுந்தர சோழரின் மறு பக்கத்தில் அடக்க ஒடுக்கத்துடன் அமர்ந்திருந்த மதுராந்தகத் தேவரின் மீது திரும்பின. இப்போதுதான் புதிதாகப் பார்ப்பது போல் மதுராந்தகரைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள். முன்னமே மிக்கக் கூச்சத்துடன் அமர்ந்திருந்த மதுராந்தகர் இப்போது மேலும் சங்கோசம் அடைந்தவராகிப் பூமாதேவியைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு குனிந்த தலை நிமிராமல் இருந்தார்.

* * *

இதற்கிடையில் மாறு வேடம் பூண்டிருந்த ஆழ்வார்க்கடியான் மண்டபத்தின் ஒரு மூலைக்கு அவனை அழைத்துச் சென்ற சின்னப் பழுவேட்டரையரிடம் கவலை தரும் ஒரு செய்தியைக் கூறினான். பாண்டிய நாட்டு ஆபத்து உதவிகளைச் சேர்ந்தவளும் படகோட்டி முருகய்யனின் மனைவியுமான ராக்கம்மாள் என்பவளை மகுடாபிஷேக வைபவத்துக்காக வந்து கூடியிருந்த ஜனத் திரளிடையே அவன் கண்டான். எதற்காக இங்கு அவள் வந்திருக்கிறாள் என்பதை அறியும் பொருட்டுப் பின் தொடர்ந்து சென்றான். சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனைக்கு அருகில் ஜனக் கூட்டத்தில் அவள் மறைந்து விட்டாள். ஆழ்வார்க்கடியான் அங்கேயே நின்று அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தபோது அவள் மறுபடியும் காணப்பட்டாள். அவளுடன் இன்னொரு பெண் இடுப்பில் ஒரு குழந்தையுடன் சென்றாள். அந்த இன்னொரு பெண் சின்னப் பழுவேட்டரையரின் மகளைப் போல் தோன்றவே ஆழ்வார்க்கடியான் என்ன செய்வது என்று தெரியாமல் சிறிது நேரம் திகைத்தான். சின்னப் பழுவேட்டரையரின் மகள்தான் என்று நிச்சயமாகச் சொல்லவும் முடியவில்லை. கொஞ்ச தூரம் அவர்களுடன் போய் உறுதி செய்து கொள்ளலாம் என்று போனான். கூட்டத்தில் அவர்களைப் பின் தொடர்ந்து போவது எளிய காரியமாக இல்லை. அவன் பின் தொடர்ந்து வருகிறான் என்பதை ராக்கம்மாளும் கவனித்திருக்க வேண்டும். அவள் திடீரென்று கூட்டத்துக்கு மத்தியில் ''ஐயையோ! இந்த ஆள் எங்களைத் தொந்தரவு செய்கிறான். பெண்களைத் தொடர்ந்து வந்து தொல்லை கொடுக்கிறான்!'' என்று கூச்சலிட்டாள். உடனே



அங்கு நின்ற ஜனங்களில் பலர் ஆழ்வார்க்கடியானைச் சூழ்ந்து கொண்டு அவனைக் கண்டிக்கத் தலைப்பட்டார்கள். அவர்களிடம் ஆழ்வார்க்கடியான் அப்படியொன்றும் தான் செய்யவில்லை என்றும், அவர்கள் எல்லாரையும் போல் தானும் மகுடாபிஷேகக் காட்சிகளைப் பார்க்க வந்தவன் என்றும் சத்தியம் செய்து கூறினான். அவனைச் சூழ்ந்து கொண்ட ஜனத் திரளைச் சமாதானப்படுத்திவிட்டு அவன் வெளியேறுவதற்குள் ராக்கம்மாளும் இடுப்பில் குழந்தையோடு கூடிய மற்றொரு பெண்ணும் மறைந்து விட்டார்கள். ஆழ்வார்க்கடியான் கோட்டை வாசல் வரையில் அவர்களைத் தேடிக் கொண்டு சென்றான். கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு மூடு பல்லக்கில் குழந்தையுடன் கூடிய பெண் ஏறிக் கொண்டிருப்பதைக் கண்டான். பல்லக்கைச் சூழ்ந்து நாலு குதிரை வீரர்கள் நின்றார்கள். பல்லக்கில் அப் பெண் ஏறியதும், பல்லக்கும் குதிரைகளும் விரைந்து போகத் தொடங்கின. மேலும் அவர்களைத் தொடர்ந்து போகலாமா என்று யோசிப்பதற்குள் மகுடாபிஷேகத்தைப் பார்ப்பதற்காக வந்து கொண்டிருந்த ஒரு பெரிய ஜனக் கும்பல் ஆழ்வார்க்கடியானை இடித்துத் தள்ளிக் கொண்டு வந்து வெகு தூரம் கோட்டைக்குள்ளே கொண்டு வந்து சேர்த்துவிட்டது. அந்தச் செய்தியைக் கோட்டைத் தளபதியிடம் உடனே தெரிவிப்பது முக்கியமானது என்று கருதி ஆழ்வார்க்கடியான் பட்டாபிஷேக மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான். அருள்மொழிவர்மரின் கட்டளையின் பேரிலேதான் இவ்வாறு மாறுவேடம் பூண்டிருப்பதாயும், ஜனக் கூட்டத்தில் அங்குமிங்கும் திரிந்து ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து வந்து தம்மிடம் சொல்லும்படி பொன்னியின் செல்வர் பணித்ததாயும், அந்தக் கடமையை நிறைவேற்றி வரும் சமயத்திலேயே மேற்சொன்ன நிகழ்ச்சியைத் தான் காணும்படி நேர்ந்தது என்றும் ஆழ்வார்க்கடியான் விளக்கிய பிறகு சின்னப் பழுவேட்டரையர் அவனுடைய வார்த்தைகளில் பூரண நம்பிக்கை கொண்டார். தன்னுடைய மகளாகிய பழைய மதுராந்தகனின் மனைவியைப் பற்றி அவருக்கு முன்னமே கவலை இருந்து வந்தது. திருமலை கூறிய செய்தி அவருக்குத் திகிலை விளைவித்து மனக் குழப்பத்தையும் உண்டாக்கிவிட்டது. தாம் தம் அரண்மனைக்குச் சென்று உண்மையை அறிந்து வருவதாகவும், தாம் அவசரமாகப் போக நேர்ந்ததைப் பற்றி முதன் மந்திரி அநிருத்தர் மூலம் சுந்தர சோழருக்கும் பொன்னியின் செல்வருக்கும் அறிவிக்கும்படியும் பணித்துவிட்டுச் சின்னப் பழுவேட்டரையர் அந்த மண்டபத்திலிருந்து வேகமாக வெளியேறினார்.

ஆழ்வார்க்கடியான் வந்து பொன்னியின் செல்வரிடம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. தமிழ்ப் புலவர் நல்லன் சாத்தனாரிடம் பேசிக்கொண்டிருந்தபோதே இளவரசர் சின்னப் பழுவேட்டரையர் மீதும் கவனம் செலுத்தி வந்தார். அவர் மண்டபத்தை விட்டு அகன்றவுடன் பொன்னியின் செல்வருடைய திருமுகம் முன்னைக் காட்டிலும் ஒளி பொருந்தியதாயிற்று. சக்கரவர்த்தியின் பக்கம் திரும்பி நின்று அவர் கம்பீரமான குரலில் கூறலுற்றார்:

''தந்தையே! நம் கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையர் ஏதோ மிக அவசர காரியமாக வெளியே செல்கிறார். அது காரணமாக இந்த மகுடாபிஷேக வைபவம் தடைப்பட வேண்டியதில்லை. இந்தச் சபையில் இன்னும் பல பெரியோர்கள் இருக்கிறார்கள். வீர மறக் குலத்து முதல்வர்கள் இருக்கிறார்கள். வேலும் வாளும் ஏந்தி எத்தனையோ போர்க் களங்களில் போர் செய்து விழுப்புண் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரேனும் தங்கள் வீரத் திருக்கரத்தினால் இந்தப் புராதன சோழ குலத்தின் மணி மகுடத்தை எடுத்துச் சூட்டலாம். அவ்வளவுபெரும் இந்தப் பொற்கிரீடத்தையும் உடைவாளையும் செங்கோலையும் தங்கள் ஆய்வந்த கரத்தினால் தொட்டு ஆசிகூறியிருக்கிறார்கள். ஆகையால் இனி என் கரத்தினால் நானே எடுத்து இம் மணிமகுடத்தைச் சூட்டிக் கொண்டாலும் தவறு ஒன்றுமில்லை. ஆனால் அப்படி செய்வதற்கு முன்னால் தந்தையே! தங்களிடத்தும் இங்கே விஜயம் செய்திருக்கும் பெரியோர்களுக்கும் மறக் குலத்தவர்களுக்கும் விண்ணப்பம் ஒன்று செய்து கொள்ள விரும்புகிறேன். புறாவின் உயிரைக் காப்பதற்காகச் சதையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் வந்தவன் நான். அதனால் நம் குலத்தவர் அனைவரையும் போல் 'செம்பியன்' என்ற குலப் பெயர் பெற்றிருக்கிறேன். கன்றுக்குட்டியை இழந்த பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டு மகனுக்கு மரண தண்டனை விதித்த மனுநீதிச் சோழரின் வம்சத்தில் வந்தவன் நான். நம் குலத்து முன்னோர்கள் அனைவரும் போர்க் களத்தில் புறமுதுகிடாத வீரர்கள் என்ற

புகழ் பெற்றது போலவே நீதி நெறியி லிருந்து அணுவளவும் தவருதவர்கள் என்ற புகழையும் அடைந்து வந்திருக்கிருர்கள். அவர்களுடைய வழியில் வந்தவனுகிய நான் நீதி நெறிக்கு மாருக நடக்க லாகுமா? இன்னெருவருக்கு நியாயமாக உரிய பொருளேயோ, பதவியையோ அபகரிக்கலாமா? நம் ஆஸ்தானப் புலவர் நம் குல முன்னேர்களேப் பற்றி அழகான சந்தக் கவியில் பாடி வந்தபோது அவர்கள் அனைவரும் என் மனக் கண் முன்னுல் வந்து தரிசனம் அளித்தார்கள். இராஜ கேசரிகளும் பரகேசரிகளும் வரிசை வரிசையாக நின்று காட்சி தந்தார்கள். நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பெருங்கிள்ளியும் கோச்செங்கண்ணுரும் என்னைக் கருணை ததும்பும் கண்களால் நோக்கி 'எங்கள் குலத்தில் உதித்த மகனே! இந்தச் சிங்காதனம் உனக்கு உரியதா என்று சற்றுச் சிந்தித்துப் பார்!' என்ருர்கள். விஜயாலயரும் ஆதித்தரும் பராந்தகரும் இராஜாதித்தரும் என்னை வீரத் திரு விழிகளால் பார்த்து, 'குமாரா! நீ இந்தச் சிங்காதனத்தில் ஏறுவதற்கு உரியவனுக என்ன வீரச் செயல் புரிந்தாய் சொல்!' என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு மறுமொழி சொல்லத் தயங்கினேன். பின்னர் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவர்களைக் கை கூப்பி வணங்கி விண்ணப்பித்துக் கொண்டேன். 'சோழ குலத்து முதல்வர்களே! நீங்கள் செய்த அரும் பெரும் செயல்களில் ஆயிரத்தில் ஒன்றுகூட நான் செய்ய வில்லை. ஆனல் உங்கள் ஆசியுடன் இனிமேல்தான் அத்தகைய காரியங்களைச் செய்யப் போகிறேன். நீங்கள் நிலைநாட்டிய சோழ குலத்துப் புகழ் மேலும் வளர்ந்தோங்கி நீடூழி நிலைத்திருக்கும்படியான காரியங்களைச் செய்யப் போகிறேன். செயற்கரிய செயல்களைச் செய்யப் போகிறேன். உலகம் வியக்கும் செயல்கள் புரியப் போகிறேன். வீராதி வீரர்களாகிய நீங்களே பார்த்து மெச்சும்படியான தீரச் செயல்களைப் புரிந்து உங்கள் எல்லாருடைய வாழ்த்துக்களையும் பெறப் போகிறேன்!' என்று இவ்விதம் என்னுடைய குலத்து முன்னேர்களிடம் நான் தெரிவித்தேன். அவர்களும் முகம் மலர்ந்து எனக்கு அன்புடன் ஆசி கூறினுர்கள்.....''

ஆவேச உணர்ச்சி ததும்புமாறு பொன்னியின் செல்வர் கூறிவந்த சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த அச்சபையில் உள்ளோர் எல்லாரும் ரோமாஞ்சனம் அடைந்தார்கள். அவர்களில் ஒருவர் ''வீர வேல்! வெற்றி வேல்!'' என்று முழங்கினுர். உடனே சபையில் இருந்த அத்தனை பேரும் சேர்ந்து ''வீர வேல்! வெற்றி வேல்!'' என்று முழங்கிய ஒலி பட்டாபிஷேக மண்டபத்துக்கு வெளியிலும் கேட்டது. அங்கே கூடியிருந்த மக்களிடையே பெருங் கிளர்ச்சியை உண்டாக்கிற்று.

பொன்னியின் செல்வர் எல்லாருடனும் சேர்ந்து தாமும் ''வெற்றி வேல்! வீர வேல்!'' என்று முழங்கினுர். முழக்கம் அடங்கியதும் கூறினுர்: ''தந்தையே! சோழ நாட்டு வீரர்களுக்குரிய இந்த முழக்கம் ஒரு சமயம், தங்கள் பாட்டனுர் பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் வட பெண்ணைக்கு அப்பால் துங்கபத்திரை—கிருஷ்ணு நதி வரைக்கும் கேட்டது. அந்த நதிகளுக்கு அப்பாலுள்ள வேங்கி நாட்டாரும் கலிங்க நாட்டாரும் கல்யாணபுரத்தாரும் மானியகேடத்தாரும் அந்த முழக்கத்தைக் கேட்டு நடுநடுங்கினுர்கள். இன்னும் மேற்குத் திசையிலும் தெற்குத் திசையிலும் கிழக்குத் திசையிலும் நூறு நூறு மரக்கலங்களில் ஆயிரம் பதினுயிரம் சோழ நாட்டு வீரர்கள் சென்று இந்த நாட்டு வர்த்தகத்தைக் காப்பாற்றி வந்தார்கள். தந்தையே! தாங்கள் நோய்வாய்ப் பட்டுப் படுத்த நாளிலிருந்து சோழ நாட்டு வீர முழக்கத்தின் தொனி குறைந்திருக்கிறது. நாலாபுறமும் பகைவர்கள் தலையெடுத்து வருகிருர்கள். வேங்கியும் கலிங்கமும் கல்யாணபுரமும் மானிய கேடமும் நம்மை வலுச்



ஆசிரியர்: உங்க பையன் வருங்காலத்தில் டாக்டரா வருவான் போலிருக்கே?

பையனின் தந்தை: எப்படிச் சொல்றீங்க?

ஆசிரியர்: நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்னு எழுதுன்னு நோயுற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்னு எழுதறான்!

சண்டைக்கு அழைக்கின்றனர். வடக்கே இமயமலைக்கு அப்பாலிருந்து இந்தப் பழம்பெரும் பாரத தேசத்துக்கு வந்து கொண்டிருக்கும் பகைவர்களின் பேராபத்தைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. சோழ நாட்டின் வளத்தைப் பார்த்துப் பொறாமைப்பட்டுப் புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் மகிந்தன் இன்னமும் படை திரட்டிச் சேர்த்துக் கொண்டிருக்கிறான். வீர பாண்டியன் இறந்துவிட்டாலும் அவனுடைய குலத்தைச் சேர்ந்தவன் என்று யார் தலையிலாவது பாண்டிய நாட்டு மணிமகுடத்தைச் சூட்டிக் கலகம் உண்டாக்க முயன்று கொண்டிருக்கிறான். மகிந்தனும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளும் சேர்ந்து சதி செய்து, வீரத்திலே அபிமன்யுவையும் அரவானையும் நிகர்த்த என் அருமைத் தமையனார் ஆதித்தகரிகாலரின் உயிருக்கு இறுதி தேடிவிட்டார்கள். மேற்கே சேர மன்னன் பெரியதொரு யானைப் படையையும் மரக்கலப் படையையும் சேகரித்துக் கொண்டிருக்கிறான். சேரனுக்கு மரக்கலப் படையைத் தயாரித்துக் கொடுப்பதில் மேற்குத் திசையிலிருந்து புதிதாகக் கிளம்பியிருக்கும் ஒரு முரட்டுக் கூட்டத்தார் உதவி செய்கிறார்கள். சோழ நாட்டைச் சூழ்ந்திருக்கும் புதிய பேரபாயம் இது. தந்தையே! நெடுங்காலமாக அரபு தேசத்தவர்கள் கப்பல் தொழிலில் சிறந்து விளங்குகிறார்கள். சீன தேசம் வரையில் சென்று வர்த்தகம் நடத்தி வருகிறார்கள். நமது நாட்டுத் துறைமுகங்களுக்கும் அவர்கள் அடிக்கடி வந்து செல்வதுண்டு. நாகரிகத்தில் சிறந்த அந்தப் பழைய அராபியர்களை அடக்கி ஒடுக்கிவிட்டு, புதிய அராபியக் கூட்டம் ஒன்று இப்போது கிளம்பியிருக்கிறது. அவர்கள் அராபியர்கள்தானா அல்லது அக்கம் பக்கத்து நாட்டவர்களோ, நாம் அறியோம். ஆனால் மூர்க்கத்தனத்தில் அவர்களை மிஞ்சியவர்களை எங்கும் காண முடியாது. நானே அவர்களுடைய செயல்களை நேரில் பார்க்கும்படி நேரிட்டது. என்னைச் சிறைப்படுத்தி அழைத்துக் கொண்டு வருவதற்காகத் தங்கள் கட்டளையின் பேரில் நம் கோட்டைத் தலைவர் சின்னப் பழுவேட்டரையர் இரண்டு கப்பல்களில் வீரர்களை அனுப்பி வைத்திருந்தார் ...''

சுந்தர சோழர் இந்தச் சமயம் குறுக்கிட்டுத் தழுதழுத்த குரலில், ''மகனே! அப்படி நான் அனுப்பிய காரணத்தை நீ அறியாயா?'' என்று கேட்டார்.

''தந்தையே! அதை நான் நன்கு அறிந்துள்ளேன். இங்கே அரசியல் உரிமை பற்றிக் குழப்பம் நேர்ந்திருந்தது; பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தீர்கள்; ஆகையால் என்னைப் பத்திரமாகத் தங்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகவே சிறைப்படுத்திக் கொண்டு வரச் சொன்னீர்கள். என் மீது தங்களுடைய அளவில்லாத அன்பும் பரிவுந்தான் அத்தகைய கட்டளை இடும்படி செய்தது. எல்லாருக்கும் அது நன்கு தெரியட்டும் என்றுதான் இங்கே சொல்கிறேன். அப்படி என்னைச் சிறைப்படுத்த வந்த நம் வீரர்கள் நூற்றுக்கணக்கானவர்கள். ஈழ நாட்டுக் கடற்கரையில் உடைந்த கப்பலிலிருந்து வந்து ஒதுங்கியிருந்த அராபியர்களோ பத்துப் பேருக்கு மேலிருக்கமாட்டார்கள். நம் வீரர்களில் எத்தனை பேரை அவர்கள் திடீரென்று தாக்கிக் கொன்றுவிட்டார்கள் என்பதைப் பார்த்த நான் அடைந்த வேதனை இன்னமும் என் மனத்தைவிட்டு அகலவில்லை. அந்தப் புதிய அராபிய சாதியார் சேர மன்னனுக்குக் கப்பல் கட்டுவதில் உதவி செய்கிறார்கள். அது மட்டுமல்ல; கலிங்க நாட்டாருடனும் தொடர்பு கொண்டு இருக்கிறார்கள். மூன்று நாட்டாரும் சேர்ந்து சோழ நாட்டுக் கடல் வாணிபத்தை அடியோடு அழித்துவிடத் தீர்மானித்திருக்கிறார்கள். கடல் கொள்ளைக்காரர்கள் அரபு நாட்டாராயிருந்தால்தானென்ன, அல்லது நம்முடன் எத்தனையோ விதத்தில் தொடர்பு கொண்ட சேர தேசத்தாராய் இருந்தால்தான் என்ன, நம் கடல் வாணிகத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், நமது கடற் படையைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். ஆயிரமாயிரம் புதிய மரக்கலங்களைக் கட்ட வேண்டும். புதிய புதிய மாலுமிகளைப் பழக்க வேண்டும். கப்பலில் இருந்து கொள்ளைக்காரர்களுடன் போரிடக்கூடிய வீரர்களைச் சேர்க்க வேண்டும். கீழைக் கடலில் உள்ள தீவுகளில் எல்லாம் புலிக்கொடியை நாட்டி ஆங்காங்கே நம் வீரர்களை நிறுத்தி வைக்க வேண்டும். தந்தையே! இந்தக் காரியங்களையெல்லாம் செய்வதாக நம் குலத்து முன்னோர்களுக்கு நான் வாக்குறுதி அளித்திருக்கிறேன். அதை நிறைவேற்றுவதற்குத் தங்களுடைய அனுமதி வேண்டும். இந்தச் சபையிலுள்ள பெரியோர்களின் சம்மதமும் வேண்டும்!''

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறி நிறுத்தியவுடன் சுந்தர சோழர், ''மகனே! சோழகுலத்து வீரப் புகழை நீ வளர்ப்பதற்கு நான் தடை செய்

வேணு? சோழ நாட்டுக் கடல் வாணிபத்தைப் பாதுகாப்பதற்கு இந்த மகாசபையில் உள்ள பெரியவர்கள்தான் தடை சொல்லப் போகிறார்களா?'' என்றதும், மீண்டும் அச்சபையில் ''வீரவேல்! வெற்றி வேல்!'' என்ற முழக்கம் எழுந்தது.

''தந்தையே! தாங்களும் இச்சபையோரும் தடை சொல்ல மாட்டீர்கள். நான் ஏற்கும் காரியங்களில் வெற்றியடைய வேண்டும் என்று ஆசி கூறியும் அனுப்புவீர்கள். தங்கள் ஆசி நிறைவேறி நான் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்க வேண்டும் என்றால், முதலில் என் உள்ளத்தில் நிம்மதி ஏற்பட வேண்டும். 'நேர்மையற்ற காரியம் எதையும் நான் செய்யவில்லை, என் குலத்து முன்னோர்கள் அங்கீகரிக்க முடியாத செயல் எதுவும் நான் புரியவில்லை, பிறருக்கு உரியதை நான் ஆசையினால் அபகரித்துக் கொண்டுவிடவில்லை' என்ற உறுதியை நான் அடைய வேண்டும். குலதர்மத்துக்கு ஒவ்வாத காரியத்தை இங்கே நான் செய்துவிட்டுப் புறப்பட்டேனானால், என் உள்ளம் என்னை வருத்திக் கொண்டேயிருக்கும். பகைவர்களிடம் போரிட்டு எப்படி வெற்றி கொள்வேன்? தர்மத்தை நிலைநாட்டப் போராடுகிறோம் என்ற நம்பிக்கை என் மனத்தில் எப்படி ஏற்படும்? முன்னொரு தடவை இலங்கைச் சிங்காதனத்தை நான் கவர்ந்து கொள்ள ஆசைப்பட்டதாக ஒரு பெரும் வதந்தி ஏற்பட்டது.....''

''குழந்தாய்! அதை யாருமே நம்பவில்லையே! நீ அத்தகைய குற்றத்தைச் செய்யக் கூடியவன் என்று எவரும் எண்ணவில்லை'' என்றார் சக்கரவர்த்தி.

''தாங்கள் நம்பியிருக்க மாட்டீர்கள், தந்தையே! ஆனால் அத்தகைய பேச்சு என் காதில் விழுந்ததும் என் மனம் எவ்வளவோ வேதனைப்பட்டது. ஈழ நாட்டுப் பிக்ஷுக்கள் எனக்கு அளித்த மணிமகுடத்தை நான் வேண்டாம் என்று மறுதளித்ததை என் நண்பர்கள் இருவர் அறிவார்கள். அவர்கள் அப்போது என் அருகிலேயே இருந்தார்கள்.......''

சபையில் இருந்த புத்த பிக்ஷுக்களின் தலைவர் ''ஆம், ஆம்! நாங்களும் அதை அறிவோம்'' என்று சொன்னார்.

''ஒரு பொய்யான அவதூறு என் உள்ளத்தில் அவ்வளவு வேதனையை உண்டாக்கியது. அதைத் தாங்கள் நம்பவில்லையென்றால், நம்பியவர்கள் சிலரும் இருந்தார்கள். உண்மையாகவே நான் இப்போது இன்னொருவருக்கு உரிமையாக வேண்டிய சிங்காதனத்தை அபகரித்துக் கொண்டேனென்றால், அதனால் இந்தச் சோழ குலத்துக்கு எத்தனை அபகீர்த்தி உண்டாகும்? என் வாழ்நாளெல்லாம் அதைப் பற்றி வேதனைப் பட்டுக்கொண்டிருப்பேன். வேறு எந்தப் பெரிய காரியத்திலும் மனத்தைச் செலுத்த முடியாது; உற்சாகமாகச் செய்யவும் முடியாது.....''

கலாட்டாவுக்குக் குட்பை !



பல்கேரியாவில் கால்பந்தாட்ட மைதானத்தில் ஏற்படும் ரகளைகளை ஒடுக்க அவர்கள் நடமாடும் நீதி மன்றத்தையே மைதானத்துக்குக் கொண்டு போகிறார்கள். ரகளைக்கு வித்திடும் ஆட்டக்காரர்களையோ, கால்பந்தாட்ட ரசிகர்களையோ உடனே நடமாடும் கோர்ட்டில் விசாரித்து உரிய தண்டனை வழங்கி விடுகிறார்கள். குறைந்தபட்ச தண்டனை பதினைந்து நாட்களுக்கு ஊதியமில்லாத சரீர உழைப்பு. இந்த ஏற்பாட்டினால் கால்பந்தாட்ட பந்தயம் எந்த விதக் குந்தகமுமின்றி நிறைவேறுகிறது. தவறிப் போய் எந்த ஆட்டக்காரராவது குற்றமிழைத்துவிட்டாலும் ரகளைக்கு இடமளிக்காமல் உடனே தம் எதிர்க்கட்சி ஆட்டக்காரரிடம் பணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுகிறார். -- பி. எஸ். எம்.

வெகு நேரம் குனிந்த தலை நிமிராமலிருந்த மதுராந்தகத் தேவர் இப்போது பொன்னியின் செல்வரை அண்ணாந்து பார்த்து ஏதோ சொல்வதற்குப் பிரயத்தனப்பட்டார். பொன்னியின் செல்வர் வந்தியத்தேவனைப் பார்த்துச் சமிக்ஞை செய்யவே அவ்வீரன் மதுராந்தகத் தேவர் பக்கத்தில் போய் நின்று கொண்டான். அவர் காதில் மட்டும் கேட்கும் படியான மெல்லிய குரலில், ''நண்பா! சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய முதல் தேவாரத்தின் முதல் அடி என்ன?'' என்று கேட்டான். இந்தச் சமயத்தில் இது என்ன கேள்வி என்ற வியப்புடன் மதுராந்தகர், ''பித்தா! பிறைசூடி !'' என்றார். வந்தியத்தேவன் கள்ளக் கோபத்துடன், ''என்ன, ஐயா, என்னைப் பித்தன் என்கிறீர்? நீர் அல்லவோ பெண் பித்துப் பிடித்து அலை

கிறீர்? அதோ, பாரும்! உமது தர்ம பத்தினி பூங்குழலி உம்மைப் பார்த்துச் சிரிப்பதை!'' என்றான். இது என்ன? இந்த நல்ல சிநேகிதன் இப்படித் திடீரென்று வலுச் சண்டைக்கு வருகிறானே என்ற எண்ணத்துடன் மதுராந்தகர் பெண்மணிகள் வீற்றிருந்த இடத்தை நோக்கினார். உண்மையில், அப்போது பூங்குழலி இவர் பக்கம் பார்க்கவேயில்லை. பூங்குழலி, குந்தவை, வானதி, செம்பியன்மாதேவி, வானமாதேவி ஆகிய அரண்மனைப் பெண்மணிகள் யாவரும் அளவில்லாத ஆர்வம் கண்களில் ததும்பப் பொன்னியின் செல்வரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மறுபடியும் மதுராந்தகர் பொன்னியின் செல்வரைப் பார்த்தபோது அவர் சோழ குலத்தின் புராதன மணிமகுடத்தைத் தமது கரங்களில் தாங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

''தளபதி சின்னப் பழுவேட்டரையர் இன்னும் திரும்பி வரவில்லை. அதனால் என்ன? குறிப்பிட்ட வேளையில் முடிசூட்டு விழாவை நானே நடத்திவிடுகிறேன்! தந்தையே! விஜயாலய சோழர் முதல் நம் முன்னோர்கள் அணிந்து வந்த இந்த மணிமகுடத்தைத் தாங்கள் எனக்கு அளிக்க உவந்தீர்கள். சாமந்தர்கள், தளபதிகள், கோட்டத் தலைவர்கள், பொதுமக்கள் அனைவரும் அதை அங்கீகரித்தார்கள். ஆகையால், இந்தக் கிரீடம் இப்போது என் உடைமை ஆகிவிட்டது. என் உடைமையை நான் என் இஷ்டம்போல் உபயோகிக்கும் உரிமையும் உண்டு அல்லவா? என்னைவிட இந்தக் கிரீடத்தை அணியத் தகுந்தவர் இங்கே ஒருவர் இருக்கிறார். அவர் என்னைவிடப் பிராயத்தில் மூத்தவர். இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு என்னைவிட அதிக உரிமை அவருக்கு நியாயமாக இருந்த போதிலும் அவர் அதைக் கோரவில்லை. நான் முடிசூட்டிக் கொண்டு சிங்காதனத்தில் அமர்வதைப் பார்த்து மகிழச் சித்தமாக இங்கு வந்திருக்கிறார். அவர் என் உயிரை ஒரு தடவை காப்பாற்றினார். என் உயிரினும் இனியவரான என் நண்பரைக் காப்பாற்றினார். இந்தச் சோழ குலத்துக்கு நேர்வதற்கு இருந்த பெரும் விபத்து நேரிடாமல் தடுத்தார். இப்படிப்பட்ட சிறப்பான காரியம் எதுவும் நான் இது வரையில் இந்த நாட்டுக்குச் செய்தேனில்லை. ஆகையால் இந்த மணிமகுடத்தை மகான் கண்டராதித்தரின் குமாரரும் என் சிறிய தந்தையுமான மதுராந்தகத் தேவரின் தலையில் சூட்டுகிறேன்!''

இவ்விதம் பொன்னியின் செல்வர் சொல்லிக் கொண்டே சக்கரவர்த்தியின் மறு பக்கத்தில் வீற்றிருந்த மதுராந்தகரின் அருகில் சென்று அவர் சிரஸில் கிரீடத்தை வைத்தார்.

மகுடத்தை வைக்குங்கால் மதுராந்தகர் அதைத் தடுக்காமலிருக்கும் பொருட்டு வந்தியத்தேவன் முன்ஜாக்கிரதையாக அவர் பின்னால் நின்று அவருடைய தோள்கள் இரண்டையும் நட்புரிமையுடன் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் மதுராந்தகரோ அப்படி ஒன்றும் செய்ய முயலவில்லை. அவர் மெய் மறந்து தம்வசமிழந்து உண்மையிலேயே பித்துப் பிடித்தவர் போல் நாலுபுறமும் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மணிமகுடத்தைச் சூட்டியதும் பொன்னியின் செல்வர், ''கோப்பரகேசரி மதுராந்தக உத்தமச் சோழ தேவர் வாழ்க!'' என்று முழங்கினார். ''சோழ சாம்ராஜ்ய சக்கரவர்த்தி உத்தமச் சோழர் வாழ்க! வாழ்க!'' என்று வந்தியத்தேவன் பெருங் குரலில் கூவினான்.

இத்தனை நேரமும் பிரமித்துப் போய் நின்ற முதன் மந்திரி அநிருத்தர் முதலியவர்கள் அனைவரும் இப்போது ''கோப்பரகேசரி மதுராந்தக உத்தமச் சோழர் வாழ்க!'' என்று முழங்கினார்கள்.

சுந்தர சோழ சக்கரவர்த்தி உணர்ச்சி மிகுதியால் பேசும் சக்தியை அடியோடு இழந்திருந்தபடியால் தம் கையிலிருந்த பல நிற மலர்களை மதுராந்தக உத்தமச் சோழர் மீது தூவினார்.

அரண்மனைப் பெண்மணிகளும் சக்கரவர்த்தியைப் பின்பற்றி மதுராந்தகர் மீது மலர்மாரி பொழிந்தார்கள்.

மதுராந்தகர் சிறிது திகைப்பு நீங்கியதும் எழுந்து நேரே செம்பியன் மாதேவியிடம் சென்று கும்பிட்டு நின்றார். அந்த மூதாட்டியின் கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோலப் பொங்கிப் பொழிந்து கொண்டிருந்தது.

''மகனே! இறைவனுடைய திருவுள்ளம் இவ்வாறு இருக்கிறது! நீயும் நானும் அதற்கு எதிராக நடப்பது எப்படிச் சாத்தியம்?'' என்றார்.

பொன்னியின் செல்வர் சபையில் கூடியிருந்த மற்றப் புலவர் பெருமக்கள், பட்டர்கள், பிக்ஷுக்கள் ஆகியவர்களைப் பார்த்து, ''நீங்கள் இனி உங்கள் வாழ்த்துக் கவிதைகளை உசிதப்படி மாற்றிக் கொண்டு படியுங்கள்!'' என்றார்.

அவர்களும் அவசர அவசரமாக வாழ்த்துக் கவிதைகளை மாற்றி அமைத்துக் கொண்டு பாடத் தொடங்கினார்கள்.

மதுராந்தக உத்தமச் சோழருக்கு மணிமகுடம் சூட்டப்பட்ட சிறிது நேரத்துக்குள்ளே அந்தச் செய்தி தஞ்சை வீதிகளில் கூடியிருந்த மக்களிடையில் பரவிவிட்டது. அது விரைவாகப் பரவுவதற்கு வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் பெரிதும் காரணமாக இருந்தார்கள். பொன்னியின் செல்வர் கட்டளைப்படி அவர்கள் வீதிகளில் ஆங்காங்கே ஆட்களை நிறுத்தியிருந்தார்கள். அவர்களிடமெல்லாம் அவசரமாகச் சென்று சொல்லி, ''கோப்பர கேசரி உத்தமச் சோழ தேவர் வாழ்க!'' என்று முழங்கச் செய்தார்கள். இளவரசர் அருள்மொழி வர்மர் தமக்கு அளிக்கப்பட்ட இராஜ்யத்தைத் தம் சிறிய தந்தை மதுராந்தகருக்கு அளித்துவிட்டார் என்றும், கடற் கொள்ளைக்காரர்களை அடக்குவதற்காகப் பெரிய கப்பல் படை சேர்த்துக் கொண்டு சீக்கிரம் புறப்படப் போகிறார் என்றும் வாய்மொழியான செய்தி மக்களிடையே விரைந்து பரவிக் கொண்டிருந்தது. சிலர் இதை உடனே நம்பினார்கள். பொன்னியின் செல்வரின் பெருங் குணத்துக்கு இது உகந்ததே என்று அவர்கள் கருதினார்கள். இன்னும் சிலர், ''கையில் கிடைத்த பேரரசை யார்தான் இன்னொருவருக்குக் கொடுப்பார்கள்?'' என்று ஐயுற்றார்கள். ஏக காலத்தில் பலவாறு பேசிய பதினாயிரக் கணக்கான குரல்களும், ''வாழ்க! வாழ்க!'' என்னும் முழக்கங்களும் சேர்ந்து புயற்காற்று அடிக்கும் போது அலைகடலில் கிளம்பும் பேரொலியைப் போல் ஒலித்தன.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானையின் மீது அமைத்த பொன்மயமான அம்பாரியில் அமர்ந்து மதுராந்தக உத்தமச் சோழர் பவனி கிளம்பியதும் எல்லாச் சந்தேகங்களும் மக்களுக்குத் தீர்ந்து விட்டன. யானையின் கழுத்தில் யானைப் பாகனுடைய பீடத்தில் அமர்ந்திருப்பவர் பொன்னியின் செல்வர் என்பதைக் கண்டதும் மக்களுடைய உற்சாகம் எல்லை கடந்ததாயிற்று. ''கோப்பர கேசரி மதுராந்தக உத்தமச் சோழர் வாழ்க!'' என்று மக்களின் குரல்கள் முழங்கின. ஆனால் அவர்களுடைய உள்ளங்களில் பொன்னியின் செல்வரின் செயற்கருஞ் செயலே குடி கொண்டிருந்தது. அதை எண்ணியதனால் அவர்களுடைய அகங்களைப் போல் முகங்களும் மலர்ந்திருந்தன. பொன்னியின் செல்வர் மணிமகுடம் சூட்டிக் கொண்டு பவனி வந்தால் மக்கள் எவ்வளவு குதூகலம் அடைந்திருப்பார்களோ, அதைவிடப் பன்மடங்கு அதிகமான குதூகலத்தை இப்போது வெளியிட்டார்கள்.

இமயமலைச் சிகரத்தில் புலி இலச்சினையைப் பொறித்த கரிகால் பெருவளத்தானைப் பொன்னியின் செல்வர் மிஞ்சி விட்டார் என்றும், தியாக சிகரத்தில் இவர் தமது இலச்சினையை என்றும் அழியாத வண்ணம் பொறித்துவிட்டார் என்றும் அறிஞர்கள் மகிழ்ந்தார்கள்.

சாதாரண மக்களோ, அப்படியெல்லாம் அணி அலங்காரங்களையும் உபமான உபமேயங்களையும் தேடிக் கொண்டிருக்கவில்லை. மதுராந்தகர் தலையில் மணி மகுடத்தைச் சூட்டி விட்டுப் பொன்னியின் செல்வர் பட்டத்து யானையை ஓட்டிக் கொண்டு செல்லும் காட்சி அவர்கள் உள்ளத்தைப் பரவசப் படுத்திவிட்டது. ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வாழ்த்திக் கொண்டும் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டும் மலர்களைத் தூவிக் கொண்டும் மஞ்சள் நிற அட்சதையை வாரி இறைத்துக் கொண்டும் மக்கள் ஒரே கோலாகலத்தில் தங்களை மறந்து ஆழ்ந்திருந்தார்கள்.

இவ்விதம் குதூகலத்தினால் மெய்ம் மறந்து கூத்தாடிக் கொண்டிருந்த மாபெரும் ஜனக் கூட்டத்திடையே பட்டத்து யானையைச் செலுத்திக் கொண்டு போவது எளிய காரியமாயில்லை. பொன்னியின் செல்வரும் அவசரப்படாமல் ஜனங்களின் குதூகலத்தைத் தாமும் பார்த்துக் களித்துக் கொண்டு, அங்கங்கே அறிமுகமான முகம் தென்பட்ட போதெல்லாம் ஏதேனும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டு, மெள்ளமெள்ள யானையைச் செலுத்திக் கொண்டு போனார். வீதி வலம் முடிந்து அரண்மனைக்குத் திரும்புவதற்குள் மாலை மயங்கி முன்னிரவு வந்துவிட்டது. வானத்து விண்மீன்களுடன் வீதிகளில் ஏற்றிய தீபங்கள் போட்டியிட்டுப் பிரகாசித்தன. அரண்மனை மேலேயிருந்து மலர் மாரி பொழிந்தது. ''யானைப் பாகா! யானைப் பாகா!'' என்று ஓர் இனிய குரல் கேட்டது. பொன்னியின் செல்வர் அண்ணாந்து பார்த்தபோது வானதியின் புன்னகை மலர்ந்த முகம் அங்கே தோன்றியது.

''பெண்ணே! அஞ்ச வேண்டாம்! மதுராந்தக உத்தமச் சோழரின் தர்ம இராஜ்யத்தில் யானையும் புலியும் கலந்து உறவாடும்; பூனையும் கிளியும் கொஞ்சிக் குலாவிக் கூடி விளையாடும்!'' என்றார் பொன்னியின் செல்வர்.

(தொடரும்)

ஆசை லட்சியம் வாழ்வு

கு. வேங்கடரமணி



ஒரு வாரம்...

எங்கு போகிறோம் என்ற லட்சியம் இல்லாமல் புறப்பட்டவன் எங்கெல்லாமோ சுற்றி அலைந்து விட்டுத் திரும்பியிருக்கிறான். புறப்படும்போது இருந்த மனத் தவிப்பு இன்னமும் மாற்றுக் குறையாமல் அப்படியேதான் ததும்பிக் கொண்டிருக்கிறது.

அவன் திரும்பினான். அறை வாசலில் அவன் தாயார் நின்றிருந்தாள்.

''என்னம்மா?''

''உன் சிநேகிதன் கோபு வந்திருக்கான்.''

''கோபுவா? எப்போ?''

''நீ போன மறுநாளே வந்துட்டான்.''

அவன் நெஞ்சில் சிந்தனை வேகம் கொண்டு தாயாரிடம் கேட்கத் துணிவில்லாத எத்தனையோ கேள்விகளோடு சுழன்றன.

''மஞ்சுவுக்குக் காய்ச்சல். நடுவிலே ரொம்பக் கடுமையாப் போச்சு. நல்லவேளை சமயத்தில் கோபு வந்துவிட்டான்.''

மஞ்சுவுக்கு ஜுரமா?

கோபு வந்திருக்கிறானா?

தவிப்பால் நிரம்பி யிருந்த அவன் மனம் மேலும் படபடத்தது.

அவன் அவசரமாக வெளியேறித் தெருவை அடைந்து, அந்த எதிர் வரிசை நாலாவது வீட்டை நோக்கி நடந்தான். அம்மா ஏன் இதை முதலிலேயே சொல்லவில்லை?

அந்த வீடு வந்துவிட்டது. தெருப்படியில் காலை வைத்ததுமே அவனுடைய படபடப்பும் வேகமும் பொக்கென்று அடங்கி விட்டன!

கதவு திறந்திருந்தது. உள்ளே ஒரே அமைதி.

ஒவ்வொரு அடியாய் நடந்தான். இடைகழியைத் தாண்டியதுமே, கோபு முற்றத்தில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து ஆகாயத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதும், கூடத்தில் அவள் சலனமற்றுப் படுத்திருப்பதும், கம்பியில் மாட்டித் தொங்கவிடப்பட்டிருந்த அரிக்கேன் விளக்கொளியில் தெரிந்தன.

அவனுடைய காலடி ஓசை கோபுவைக் கலைக்கவில்லை. அவன் எதிரில் போய் நின்று, ''கோபு, கோபு!'' என்று அழைத்ததும் மெதுவாகத் திரும்பினான்.

''மூர்த்தியா?''

''நான்தான்!''

மீண்டும் கூடத்துப் பக்கம் ஒரு முறை அவசரமாய்ப் பார்த்துவிட்டுத் திரும்பினான் மூர்த்தி.

''மஞ்சுவுக்கு மூளை ஜுரம்.''

''அப்புறம்?''

''நீயும் இல்லை. டாக்டரை அழைத்துக் கொண்டு வந்து காட்டினேன். ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்க்கிற நிலையில் இல்லை. நேற்று வரைக்கும் ஒரே பிதற்றல். இன்று வாயே திறக்கவில்லை. அப்படியே அழுங்காமல் கிடக்கிறாள்.''

கோபு எழுந்து விளக்குடன் கூடத்துக்குப் போனான். மூர்த்தி படபடக்கும் இதயத்தைக் கைகளால் அழுத்திக் கொண்டே பின்னால் சென்றான்.

அனலில் வாடியது போல் அவள் சுருண்டு கிடந்தாள். விளக்கை அருகில் கொண்டு சென்றதும் அந்த முகம் நன்றாய்த் தெரிந்தது. கண்கள் மூடியிருந்தன.

''மஞ்சு!'' — அவன் — மூர்த்தி — தனக்குள் ஒரு முறை அவளை அழைத்தான்.

சுவாசத்தின் மெல்லிய அசைவைத் தவிர வேறு சலனமே இல்லை அவளிடத்தில்.

மீண்டும் இருவரும் முற்றத்துக்கு வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அட்டைப்படக் கதை



''மூர்த்தி! ஜுர வேகத்தில் அவள் உன்னைப் பற்றிக்கூட ஏதோ பிதற்றினாள். உன் பெயர்தான் காதில் விழுந்தது. வேறே எதுவும் புரியவே யில்லை.''

ஆனால் அவன் தனக்குள், ஒரு வாரம் முன்பு பார்த்த மஞ்சுவை நினைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது இந்த வீட்டில் அவள் மட்டும் தான் இருந்தாள். தாழ்வாரத் தூணில் மூர்த்தியின் எதிரில் சாய்ந்தவாறு நின்ற அவள் முகம் அப்போது சூன்யமாய் இல்லை. உணர்ச்சிகள், உணர்ச்சிகளின் கொந்தளிப்புகள்!

மூர்த்தியின் உடல் இப்பொழுதும் தனக்

ருள் அந்த முகத்தைக் காணும்போது தவிக் கிறது. நண்பனின் எதிரில் தன்னை அடக்கிக் கொள்ள அவன் மிகவும் சிரமப்பட வேண்டி யிருந்தது.

ஆறு மாதங்களுக்குப் பிறகு சந்திக்கும் நண் பனிடம் எவ்வளவோ பேச விஷயங்கள் இருந்தன. எல்லாவற்றையும் விட முக்கிய மாய் இதோ நினைவற்றுக் கிடக்கும் மஞ்சு இருக்கிறாள்.

ஆனாலும் மூர்த்தி வாய் திறக்கவில்லை.

நீண்ட நேரம் இருவரும் அசைவற்று உட் கார்ந்திருந்தார்கள்.

''இவளை என்னோடு அழைத்துக் கொண்டு போய்விடலாம் என்ற திட்டத்தோடே வந் தேன். அதற்காகச் சென்னையிலே ஒரு வீடு பார்த்து ஏற்பாடுகள் எல்லாம் செய்துவிட் டேன். இங்கே வந்து பார்த்தால் இவளுக்கு நினைப்பே இல்லே, மூர்த்தி! முன்னே ஒரு தடவை இவளை வேதனை நிறைந்த இடத் திலே இருந்து மீட்டுக் கொண்டு வந்தேன். இப்போ இவளை இங்கிருந்து அழைத்துக் கொண்டு போகப் போகிறேனா, இல்லே...''

கோபுவின் பேச்சில் குறுக்கிட்ட தயக்கம்— அந்த இடைவெளி — இருவராலுமே தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது.

நண்பனின் பழைய இயற்கையான குணம் மூர்த்திக்கு ஞாபகம் வந்தது. அவன் எதிலும் அலட்சியமான போக்குக் கொண்டவன். பற் றில்லாமல், வாழ்க்கையை அதன் வழியி லேயே விட்டுவிடுகிறவன்.

அவனைத் தீவிரமாகச் சிந்திக்க வைத்த ஒரே நிகழ்ச்சி இந்த மஞ்சுவின் சந்திப்புதான்.

அந்தச் சந்திப்பு நிகழ்ந்து ஆறு மாதங்கள் கழிந்து விட்டன. அப்பொழுதுதான் மஞ்சு வையும் அழைத்துக் கொண்டு கோபு இந்த ஊருக்கு வந்தான்.

''மஞ்சு! இவன்தான் மூர்த்தி'' என்றான் கோபு.

ஒரு மெல்லிய சலனம் பதிலாய்க் கேட்டது.

மஞ்சு! — இவள்தானா அந்த ஆச்சரியம்?

வீட்டுக்கு வந்து சாமான்களை இறக்கி வைத்த போது மூர்த்தி அயர்ந்துவிட்டான். எப்போதும் கையை வீசிக் கொண்டு வருவான் கோபு. அவனிடம் தன்னுடையது என்ற பிணைப்பும், சுமையும் ஒட்டிக் கொண்டிருந்த தாக எந்தப் பொருளுமே நினைவுக்கு வர வில்லை. ஆனால் இப்பொழுது? பெரிய பெட் டிகள் இரண்டு. பிரயாணப் பைகள், படுக்கை....

சந்தடி கேட்டு மூர்த்தியின் தாய் இடை கழிக்கு வந்தாள்.

''கோபு வந்திருக்கான் அம்மா!''

மஞ்சு படிக்கட்டிலேயே தயங்கினாள்.

''கம்மா உள்ளே போ மஞ்சு!'' என்று அவளைத் தைரியப்படுத்தினான் கோபு.

''என்ன தம்பி இது? எனக்குத் தெரியவே தெரியாதே?''

''எனக்குந்தான் அம்மா! கோபு நமக் கெல்லாம் சொல்லவே யில்லே.''

மஞ்சு தலை கவிழ்ந்தாள். கோபு சாமான் களைச் சரிபார்த்துக் கொண்டே, ''ம்... எல்லாம் ஒரே அவசரத்தில் நடந்துபோச்சு. அதுதான் இங்கே நேரிலேயே வந்தாட்டமே'' என்று ஏதோ சொல்லிச் சமாளித்தான்.

பொழுது விடிய வெகு நேரம் இருந்தது. மூர்த்தியை எழுப்பி அழைத்துக் கொண்டு சாலையோடு நடந்த கோபு, ''மூர்த்தி! என் னைப் பற்றி நீ என்ன நினைக்கிறே?'' என்று திடீரென்று கேட்டான்.

இருவருக்கும் நடுவில் தேங்கிவிட்ட, பேசப் படாத செய்தியைப் பற்றிச் சொல்ல இந்தக் கேள்வியை ஆரம்பமாக வைத்துக் கொண் டானோ என்று தோன்றியது மூர்த்திக்கு.

''ஏன், இது என்ன கேள்வி? இப்போது?''

''இருக்கட்டும் சொல்லேன்.''

''கோபு, நீ நீதான்! இரண்டு மாதங்களுக்கு ஒரு கம்பெனியாய் மாறிக் கொண்டே இருக்கிறாய். இந்த லட்சணத்தில் ஒரு பெண்ணை வேறு...''

''அதெல்லாமில்லே! இப்போது ஆறு மாசமாய் ஒரே இடத்தில்தான் வேலே செய்கிறேன். பெரிய கம்பெனி. விற்பனைப் பிரிவிலே ஊர் ஊராகப் போய் எங்கள் தயா ரிப்புக்களைப் பிரபலப்படுத்துகிற வேலே.''

''உனக்கு ஏற்ற வேலேதான்.''

''இல்லே மூர்த்தி! எனக்கும் ஊரைச் சுற்று வது அலுத்துப் போச்சு.''

''நிஜமாகவா?''

''ஆமாம்.''

''அப்போ நீ மாறிப் போயிட்டே கோபு. ம்... மாறித்தானே ஆகணும்?''

அந்த முகம்தான் மறுபடியும் நினைவுக்கு வருகிறது. நெற்றியின் அகலம், அந்தக் கண்கள் — அவை சொல்லாமல் சொல்லும் ஏக்கம். கோபு, அதுதானா உன்னை மாற்றி விட்டது?

''இன்னும் ஆறு மாசம் போனால் இந்த ஊர் சுற்றுகிறதெல்லாம் இருக்காது. சம்பள மும் தாராளமாய் வரும். அதுவரை கஷ்டந் தான். மஞ்சுவை என்னோடு அழைத்துக் கொண்டு போக முடியாது. மூர்த்தி, நீதான் உதவி செய்யணும்!''

''உனக்கு இல்லாததா? ம், சொல்லு. என்ன செய்யணும்?''

''உனக்குச் சொந்தமாய் இன்னொரு வீடு இருக்கே, அதை ஒழித்துக் கொடு. ஆறு மாசமும் அவள் அதிலே இருக்கட்டும்.''

''அது காலியாகத்தான் கிடக்கிறது. எனக்கு ஆட்சேபமில்லே.''

''ஒரு கவலை விட்டது.''

''கவலை எப்படி விடும்? கவலையெல்லாம் இனிமேல்தானே ஆரம்பம்!''

வறட்சியாய்ச் சிரித்தான் கோபு.

''கோபு! இப்படி ஒரு கிராமத்தில் வந்து தனியாக் குடித்தனம் நடத்தவா ஒருத்தி உன்னை நம்பி வந்தாள்?''

''இல்லே. இப்போதைக்கு வேறு வழியே இல்லே.''

மேலும் கொஞ்ச தூரம் நடந்தார்கள்.

கோபு மறுபடியும் நின்றான். கேட்டான்: ''நான் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லவில்லே.''

''என்ன கேட்டே?''

''என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறே?''

''உன் கேள்வியின் அர்த்தம் எனக்குப் புரியவில்லே.''

''சரி! நேராகவே கேட்கிறேன். நான் நல்லவனா, கெட்டவனா?''

''நல்லவன். உன்னாலே யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்ய முடியாது என்பது நிச்சயம்.''

''என்னை நம்பலாம் இல்லையா?''

''ஓ! கண்டிப்பாய்.''

''அவள் என்னை — என் பேச்சை நம்பித் தான் வந்திருக்கிறாள்.''

''ஒரு பெண் ஓர் ஆணை நம்பாமல் எப்படி வர முடியும்?''

''இது அப்படிச் சாதாரணமாய் — எங்கேயும் நடக்கிற மாதிரியான விஷயமில்லே மூர்த்தி!''

சற்றே தனக்குள் ஆழ்ந்து போனான் கோபு. பிறகு, ''உன்னைத் தவிர எனக்கு யாருமே இல்லே மூர்த்தி! உன்கிட்டே எல்லாம் சொல்லித்தான் ஆகணும்'' என்றான்.

''சரி வா! அப்படி அந்த மணல் மேட்டிலே உட்கார்ந்து பேசலாம்'' என்று அவனது கையைப் பற்றிக் கொண்டான் மூர்த்தி. இந்த உணர்ச்சி வேகப் படபடப்பு, மனத் தவிப்பு இவையெல்லாம் கோபுவுக்கு எப்படி வந்தன என்று ஆச்சரியமாக இருந்தது.

''நான் சொல்லப் போகிறது உனக்கு நம்ப முடியாததாய், வேடிக்கையாய்க்கூட இருக்கலாம். ஆனா எல்லாம் உண்மை; வேதனை கலந்த உண்மை!''

''வேதனையா?''

''வேதனைதான்! மனசு என்று இருக்கிறவனுக்கு இது வேதனைதான்.''

''ஏன்னடா கோபு இது? நீயா பேசுகிறே? மனசு, வேதனை என்று உணர்ச்சிகளின் ஆழத்துக்குப் போக உனக்குத் தெரியுமா? உன்னாலேகூட இதெல்லாம் முடியுமா?''

''கேள்விகளாகவே கேட்டுத் தீர்க்காதே மூர்த்தி! பதிலே — முக்கியமாய் மஞ்சுவின் பிரச்னைக்கு — நான் தேட முயற்சி செய்கிறேன்.''

எதிரே அமர்ந்திருக்கிற நண்பனைக் கடந்து தூரத்தில் — ஆனால் தெளிவாய் — மஞ்சுவின் ஏக்கம் நிறைந்த முகம் தெரிந்தது. அது ஒரு பிரச்னையா? கோபுவைத் திணற வைத்த கேள்வியா?

''உம்.... மேலே சொல்லு.''

''பெயர் தேவையில்லே. அந்த ஊருக்கு நான் என் தொழில் முறையிலே போனேன். அங்கே எங்கள் கம்பெனிச் சரக்குகளுக்குப் பெரிய ஆர்டர் கொடுக்கிற வியாபாரி ஒருத்தர் இருந்தார். ஆனால் இந்தத் தடவை நான் போன சமயம் சரியில்லே. உடனே காரியம் முடியவில்லே. இரண்டு நாட்கள் தங்கும்படி ஆகிவிட்டது. நான் எப்போது அந்த ஊருக்குப் போனாலும் வழக்கமாய் ஓர் ஓட்டலுக்குச் சாப்பிடப் போவேன். அங்கே தங்குகிற அறை எதுவும் இல்லே. இருந்தாலும் பழக்கம் காரணமாய் அங்கே போனேன்.

'அதனாலே என்ன சார்? மேலே ஓர் அறை இருக்கு. அதை ஒழிச்சுத் தர்றேன், தங்குங்க' என்றார்.

அன்றையப் பொழுது போச்சு.

பகல் வேளைச் சாப்பாட்டை மஞ்சுதான் போட்டாள். முதலில் அகஸ்மாத்தாய் நிமிர்ந்தபோது அவள் என் பார்வையில் தென்பட்டாள். நான் நினைத்தது நம்பிக்



'' இதென்ன! சமையல் பாத்திரங்களுடன் ஆபீஸ் வந்துட்டே?''

'' மழை பெய்தால் என் வீட்டைச் சுற்றி ஒழுகுது சார்!''

கொண்டிருந்தது எல்லாம் வேறு என்னமோ. ஒரு கண நேர அதிர்ச்சியால் எனக்குள் புதுப் புது நினைப்புக்கள் பொறியாய் விழுந்தன. அந்த ஹோட்டல் முதலாளிக்கு வயது ஐம்பதுக்கு மேலே ஆகியிருக்கும்.

சில வேளைகளில் ஒருத்தரைப் பார்த்து நாம் செய்கிற பிரமை கலந்த முடிவு நிஜமாகவே ஆகிவிடுகிறதே! மஞ்சு அவருடைய இளைய மனைவியோ, மகளோ இல்லே என்று ஓர் எண்ணம். கடைசியிலே அது உண்மையாகவே இருந்தது.

பகல் பொழுது மெல்ல நகர்ந்து போயிற்று. மாலையில் ஊரைச் சுற்றிவிட்டு வந்து என் அறைக்குள் உட்கார்ந்தேன்.

கொஞ்ச நேரத்தில் அந்த ஹோட்டல் சிப்பந்தி ஓடி வந்தான். அவன் முகத்திலே கலவரம் படர்ந்திருந்தது.

'சார்! அம்மா அப்படியே மயக்கம் போட்டுக் கட்டையாய்க் கிடக்கிறாங்க. வந்து பாருங்க சார்!'

ஓடிப் போய் அவளை நெருங்கி, ஒரு பக்கமாய்ச் சாய்ந்திருந்த முகத்தை என் கையாலே திருப்பி, மூடிக் கிடந்த விழிகளை விலக்கிப் பார்த்தேன். சுவாசத்தின் மெல்லிய இழை, அவளோட நெஞ்சிலே சலனமாய்த் தெரிந்தது.''

''அப்புறம்?''

மூர்த்தி அவசரப்பட்டான்.

''அது ஒரு தற்கொலை முயற்சி. ஒரு டாக்டரை அழைத்து வந்து முறிவு மருந்து கொடுத்த பிறகு மஞ்சு பிழைத்துக்கொண்டாள். நான் விஷயம் வெளியே பரவாமல் பார்த்துக் கொண்டேன். வேலைக்காரப் பையனுக்குக் கூடத் தெரியாது. ஒரு வழியாய் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினால் போதும் என்றிருந்தது.

மூன்றாம் நாள் அவள் கிட்டத்தட்ட பழைய சாதாரண நிலைமைக்கு வந்து விட்டாள். 'இனிமேல் தற்கொலை முயற்சியில் இறங்கக் கூடாது' என்று அவளிடம் வாக்குறுதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு அவளைக் கேட்டேன்.

அவள் விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். அழுகையின் நடுவிலே தன் கதையைச் சொன்னாள். என்னிடம், என்னோட நாலு அநுதாப வார்த்தைகளுக்குப் பதிலாய் அவள் தன் அந்தரங்கங்களை யெல்லாம் கொட்டித் தீர்த்து விட்டாள். அவளை ஒரு முறை சாவிலே இருந்து காப்பாற்றிவிட்டு அப்படியே விட்டு விட்டு வருகிறதிலே அர்த்தமே இல்லை என்பது புரிஞ்சுது. அதற்கு மேலே ஒரே ஒரு வழிதான் இருந்தது. அதையும் அவளிடம் சொன்னேன். எப்படியாவது அந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டும் என்ற முடிவிலேதான் அவளும் இருந்தாள்.

''அதற்கு மேலே எல்லாம் சுருக்கமாய் முடிஞ்சு போச்சு. மஞ்சு என்னோடு என்னை நம்பி வந்து விட்டாள்.''

கோபு பெருமூச்சு விட்டு எழுந்து நின்றான்.

''கோபு! மஞ்சு யார் என்று சொல்லவில்லையே? அந்த ஓட்டல்காரருக்கு அவள்—''

''மூர்த்தி! அவளும் என்னைப் போலவே தான். அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை. அவர் ஏதோ தூரத்து உறவுக்காரர். வெறும் அனுதாபத்திலே மட்டும் அவர் அவளுக்குச் சாப்பாடு போடல்லே! அவள் அவருக்கு... அவளை அவர்...'' சொல்லும்போதே கோபு மன அதிர்ச்சியில் தன் பேச்சை முடிக்க முடியாமல் திணறினான்.

மூர்த்தியின் நெஞ்சிலும் அந்த முற்றுப் பெறாத வாக்கியம் அதிர்வாய் எதிரொலித்தது. ஆனால் அடுத்த கணமே கோபு சாதாரண நிலைக்கு மீண்டு, வந்த வழியே திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

மஞ்சுவின் உயரமான தோற்றம்—அந்தக் கண்கள், கன்னங்களில் வழியும் சுருள் சுருளான கேசம், அந்தப் பார்வை அந்த ஏக்கம் எல்லாம் மறுபடியும் கண் முன் வந்து நின்றன.

எத்தனை அனுபவங்கள் அப்படி அவள் முகத்தில் நிழலாய், நெஞ்சில் தைக்கும் சோகமாய்ப் படிந்திருக்கின்றன!

''கோபு! உன் வழியிலே இது ஒரு விசித்திரமான சம்பவம்தான்!''

ஆனால், வறட்சியாய்ச் சிரித்துவிட்டுக் கோபு சொன்னான்: ''மஞ்சுவிடம் எனக்கு ஏற்பட்டது அநுதாபம் மட்டும்தான். அவளுடைய பெண்மையோ, அல்லது அழகோ அதற்குக் காரணமில்லை.''

கோபு சென்னைக்குப் போய் ஒரு வாரமாகி விட்டது. எதிர் வரிசையில் காலியாய்க் கிடந்த வீட்டை ஒழித்துச் சுத்தம் செய்தாகி விட்டது. மஞ்சுவின் தனி வாழ்வுக்குத் தேவையான மிக அவசியமான சாமான்கள் எல்லாம் கோபுவே வாங்கி வந்திருந்தான். எல்லாவற்றையும் அங்கே கொண்டு போயும் வைத்தாகி விட்டது. ஆனால் அவள் மட்டும் இன்னும் அங்கே குடி போகவில்லை.

''பத்து நாட்கள் இங்கே எனக்குத் துணையாய் இருக்கட்டுமே'' என்று சொல்லி அவளைத் தங்க வைத்து விட்டாள் மூர்த்தியின் தாயார்.

முதல் நாலைந்து நாட்கள் அவளுக்கு அந்த இடம் அந்நியமாய் இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு தான் அந்த இடத்துக்குப் புதியவள் என்ற நினைப்பைப் பார்க்கிறவர்கள் உணராத படி செய்து விட்டாள் மஞ்சு.

மூர்த்தியின் பார்வையில் எப்பொழுதாவது ஒரு விநாடி அவள் உருவம் தட்டுப்படும். வெளித் தோற்றத்தில் அவள் உருவம் மாறிக் கொண்டு வருகிறாள் என்பதை அவன் கண்டான். ஆனால் அவள் மனம்?

'எனக்கு ஏன் இந்தக் கவலை? கோபு அவளை எங்கோ சந்தித்தான். அவளுக்குத் தன் வாழ்வில் இடம்கொடுக்கத் தீர்மானித்துவிட்டான். இன்னும் சில மாதங்களில் இவளை அழைத்துச் செல்லப் போகிறான்' என்று தனக்குள் சொல்லிக்கொள்வான் மூர்த்தி. ஆனால் அவளைக் காணாத வேளைகளில்தான் இந்தக் கதியில் அவனது நினைவோட்டம் செல்லும். மீண்டும் அவளைப் பார்த்துவிட்டால், அவனை அறியாமல் அவன் மனம் அவளுடைய முகத்தில் அந்த ஏக்கத்தையோ, அல்லது அந்த ஏக்கம் மறைந்து அதற்குப் பதிலாகப் பரவிக் கிடக்கும் நிம்மதியையோ தேட முயலும்.

ஒருநாள் மாலை, முகம் கழுவக் கிணற்றடிக்குப் போனான் மூர்த்தி. புறக்கடைப் படிக்கட்டை விட்டு இறங்கியதும், தோட்டத்து முகப்புக் கிணற்றடியில் மஞ்சு நின்றுகொண்டிருந்தாள். ராட்டினத்துக்காக நிறுத்தியிருந்த கருங்கல் தூணில் சாய்ந்து அசைவே இல்லாமல் நின்றாள் அவள். நேராகத் தொலை தூரத்துக்கு ஓடியிருந்தது அவளது பார்வை. ஆனால் அவள் எதையும் காணாமல் வெறும் சூன்யமான பார்வையோடுதான் நிற்கிறாள் என்பது தெளிவாய்த் தெரிந்தது.

அவன் தன்னையே பார்த்தபடி சிறிது தூரத்தில் நிற்பது அவளுக்குத் தெரியவில்லை. தன்னுடைய பழைய நினைவுகளிலோ, பொய்யான கனவுகளின் கற்பனையிலோ லயித்தவள் போல் இருந்தாள். சில நிமிஷங்களில் அவள் அந்த அசைவற்ற நிலையிலிருந்து விடுபட்டபோது, அவள் நெஞ்சம் விம்மித் தணிந்தது. அவளுடைய இமைகள் படபடத்தன. கண்களில் நீர் ததும்பிக் கன்னங்களில் கோடாய் இறங்கிற்று. அவள் தன்னையே தேற்றிக் கொள்ள யாதொரு முயற்சியும் செய்யாமல் விம்மினாள்.

அந்த முகத்தில் அந்த ஏக்கம் இப்பொழுது கனமாய்ப் படிந்திருந்தது.

''மஞ்சு!''

வாய்விட்டு அழைத்தபிறகுதான் அவன், அவளுடைய அந்தரங்கமான அந்த விநாடியில் தான் குறுக்கிட்டிருக்கக் கூடாதோ என நினைத்துப் பார்த்துத் தடுமாறினான். அதுவும் உணர்ச்சி வேகத்தில் அவளுடைய பெயரைச் சொல்லி அழைத்து விட்டது அவனுக்கு என்னவோ போலாகி விட்டது.

முகத்தைத் துடைத்துக் கொண்டு அவசரமாய்த் திரும்பினாள் அவள்.

''என்னை மன்னிக்கணும். தவறுதலாய் தான்....''

''இல்லை, இல்லை; நான் சின்னவள்; ரொம்ப ரொம்பச் சாதாரணமானவள்.''

எதற்காக அவள் இப்படிப் பேசுகிறாள் என்று புரியவில்லை. ஒன்றும் புரியாத குழப்பத்தோடு அவளைப் பார்த்தான்.

''இன்னமும் ஏன் கண்ணீர் விடணும்? இதை மாற்றத்தானே இத்தனை முயற்சியும் செய்தான் கோபு?''

அவள் நீர்க்கமாய்ச் சுவாசத்தை உள்ளுக்கு இழுத்துக் கொண்டாள்.

''எனக்கே தெரியவில்லை. பழசை யெல்லாம் மறந்துவிடணும் என்று நினைக்கிறேன். அதுதான் இப்படி அழுகையா வருது. இதுக்கு மேலே என்னாலே எந்தக் காரணத்தையும் சொல்ல முடியல்லே. அது போகட்டும். உங்க சிநேகிதர் அப்புறம் தபால் போட்டாரா?''

''கோபுவா? ஊஹூம்! போய்ச் சேர்ந்ததும் இரண்டு வரி எழுதினானே அவ்வளவு தான். எப்போதுமே அவன் சுபாவம் அது தான். நினைத்துக் கொண்டால் பக்கம் பக்கமாய் எழுதுவான். இல்லாவிட்டால் பல நாட்கள் ஒரே மௌனம்தான்.''

''நீங்க அவருக்கு எழுதப் போறீங்களா?''

''உம்.... எழுதணும்.''

''எழுதினால் இப்போ நீங்க பார்த்ததை எழுத வேண்டாம். மஞ்சு சாதாரணமாய் இருக்கிறாள் என்று எழுதுங்கள் போதும்.''

அவன் சரி என்று தலையசைத்தான்.

அடுத்த நாளே மஞ்சு அந்தத் தனி வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள்.

பத்து நாட்கள் கழிந்து விட்டன.

அவன் வெளித் தாழ்வாரத்தில் செய்தித் தாளுடன் உட்கார்ந்திருந்தான்.

தெருவோடு வந்த பால்காரி, ''தம்பி, தம்பி!'' என்று அவனை அழைத்தாள்.

''அம்மா இல்லையா தம்பி?''

''இல்லியே!''

''புதுசா நம்ம வீட்டுக்குக் குடி வந்திருக்காங்களே அந்த அம்மா தலைவலி மருந்து இருந்தாக் கேட்டாங்க.''

அவன் உள்ளேபோய் மருந்து பாட்டிலைத் தேடினான். அது காலியாய்க் கிடந்தது.

''மருந்து இல்லே. தீர்ந்து போச்சு.''

''சரி, நான் சொல்லிடறேன்.''

மறுபடியும் செய்தித் தாளைப் புரட்ட ஆரம்பித்தபோது அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

சைக்கிளை எடுத்துக் கொண்டு சாலைக் கடைக்குப் போய், தலைவலித் தைலமும், மாத்திரையும் வாங்கி வந்தான். வீட்டில் அவன் தாயார் இல்லை. நேற்றே தன் அண்ணனைப் பார்த்து வரப் பிறந்த ஊருக்குப் போய் விட்டாள். அதனால் அவனே மஞ்சுவைப் பார்க்கப் போனான்.


அவள் கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்தாள்.

''மஞ்சு, மஞ்சு!''

கிட்ட நெருங்கியதும் ஜுர வேகம் அனலாய் வீசிற்று. மெதுவாய் முனகிக் கொண்டே திரும்பினாள்.

''ம்... நீங்களா?''

''வெறும் தலைவலி என்றுதானே பால்காரி சொல்லிவிட்டுப் போனாள்?''



'' நேற்று பழுதுஷியா இருந்தீங்க, இன்று ஒரே சோகமா இருக்கீங்களே, ஏன் ?''

'' நேற்றுமாதிரியே பக்கத்து வீட்டுக்காரரும் அவர் மனைவியும் எங்கே சார் தினசரி சண்டை போட்டுக்கிறாங்க ?''

''அப்போ.... அப்போ.... தலையெல்லாம் ரொம்பப் பாரமா, வலியாத்தான் இருந்தது. கொஞ்ச நேரத்திலே காய்ச்சல் வந்துட்டுது. படுத்துட்டேன்.''

அவள் எழுந்து உட்கார முயன்றாள்: முடியவில்லை. நிதானமில்லாமல் சாயப் போனவளை மூர்த்தி தாங்கிப் பிடித்துக்கொண்டு படுக்க வைத்தான்.

''அப்படியே இரு. இதோ வந்துவிட்டேன்'' என்று சொல்லி விட்டுச் சமையலறையை நோக்கிச் சென்றான்.

கரி அடுப்பில் வெந்நீர் ஓசையிட்டுக் கொண்டிருந்தது. பக்கத்தில் பால் சொம்பு. அவன் அவசரமாய்க் காப்பி தயாரித்தான். மாத்திரையை விழுங்கிக் கொஞ்சம் காப்பியும் குடித்ததும் அவள் உடம்பில் வியர்த்து விட்டது.

''இப்போ எப்படி இருக்கு?''

''கொஞ்சம் தேவலை. தலைதான் ஒரே பாரமாய்க் கனக்குது.''

''தைலம் தடவி விடட்டுமா?''

''அதெல்லாம் வேண்டாம்.'' ஜுரத்திலும் அவள் உடல் மெதுவாய் நெளிந்தது.

''சிரமம் கொடுக்கிறதே என் பிழைப்பாய்ப் போச்சு. அங்கே உங்க சிநேகிதர் மூணு நாள் பாடுபட்டு என்னைப் பிழைக்க வச்சார். இங்கே வந்து உங்களைக் கஷ்டப்பட வைக்கிறேன். நான் பிறந்த வேளை — என் ஜன்மம் இப்படியே ஆயிடுத்து.''

''சிரமம் என்ன இதிலே?''

அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். இப்பொழுது ஜுரம் இல்லை.

''ஜுரம் இல்லை. பகல் பொழுது போகட்டும். மாலையிலே டாக்டரை அழைத்து வந்து காட்டலாம்.''

''அதெல்லாம் வேண்டாம். இது தன்னாலே சரியாய்ப் போயிடும். வெளியிலே நாலு பேருக்குத் தெரியவே வேண்டாம்.''

அவன் மௌனமாய்ச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான்.

''உங்களுக்கு நாழியாகலையா?''

''ஒரு வேலையும் இல்லே! அம்மா கூட ஊரிலே இல்லை.''

''எங்கே போயிருக்காங்க?''

''மாமா வீட்டுக்கு.''

''மாமா மகளைத்தான் நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களாமே?''

''யார் சொன்னது?''

''உங்க அம்மாதான்.''

''அம்மாவுக்கு வேறே வேலை இல்லே.''

''ஏன், அந்தப் பொண்ணு ரொம்ப அழகா இருக்குமாமே? நல்லாப் பாடுமாம்.''

''ஆமா.''

''அப்போ கல்யாணத்தை முடிச்சுட வேண்டியதுதானே?''

''அதுக்கென்ன இப்போ அவசரம்?''

தொண்டையைக் கனைத்துக் கொண்டு உலர்ந்து போன உதடுகளை மீண்டும் ஈரமாக்கிக் கொண்டு, ''நான் ரொம்பப் பேசிட்டேனு ?'' என்று கேட்டாள் மஞ்சு.

''ஆமாம், தொண்டை உலர்ந்து போகும். அப்புறமாப் பேசிக்கலாமே?''

''அதுக்குச் சொல்லல்லே. உங்க சொந்த விஷயமெல்லாம் பேசிட்டேன்.''

''எல்லாம் அம்மா உனக்குச் சொன்னது தானே !''

'' இருந்தாலும் நான் யாரோ, எங்கிருந்தோ வந்தவள்; பத்துப் பதினைந்து நாளைக்கு முன்னாடி உங்க ஊருக்கு எதிர்பார்க்காமே வந்தவள்.''

'' ஓ !''

''இங்கே வந்தது முதலே திடீர்னு ஊமையாய்ப் போயிட்ட மாதிரி இருக்கு. உங்க சிநேகிதர் என்னை ஊமையாப் பண்ணி வைச்சிட்டுப் போயிட்டாரோன்னு தோணுது.''

''அதுதான் நிறையப் பேசிட்டயாக்கும்.''

அவள் ஜுர வாட்டத்தினிடையே ஒரு முறை முக மலர்ச்சியைக் காட்ட முயன்று, முடியாமல் போய்க் கடைசியில் இருமினாள்.

திடீரென்று தன் தாயிடமிருந்து இப்படி ஒரு கேள்வி வரும் என்று மூர்த்தி எதிர்பார்க்கவேயில்லை.

''ஏண்டா, உன்னோட அருமைச் சிநேகிதன் கிட்டே இருந்து தபால் எதுவும் வரவே இல்லியா?''

'' இல்லேயே! ஏம்மா ?''

''ஒரு ஜாகை பார்த்து அந்தப் பெண்ணை அழைச்சுக்கிட்டுப் போக வேண்டாமா?''

'' அதுதான் இப்போ பார்க்கிற வேலையிலே சாத்தியப்படாது என்று அவன் சொன்னானே !''

''ஆமாம், அவனுக்கு எப்போது சாத்தியப் படப் போவுதோ ?''

'' இது என்ன பேச்சும்மா ?''

''அது எப்படியாவது போகட்டும். நீ இனிமேல் அங்கே அதிகமாகப் போக வேணாம். போகவே வேணாம்.''

'' ஏன்? போனால் என்ன?''

'' ஏனா, அவ வயசுப் பொண்ணு.''

'' அதுனாலே ?''

''ஊரிலே நாலும் பேசுவாங்க.''

அதற்குப் பிறகு பல நாட்கள் வரை அவன் மஞ்சு குடியிருந்த வீட்டுப் பக்கம் போகவே இல்லை. அவளுக்குத் தேவையான சாமான்களை அவ்வப்போது வாங்கி வந்து கொடுக்கும்படி ஓர் ஆளை ஏற்பாடு செய்திருந்தான். அவன் கொண்டு வரும் செய்திகளோடு சரி.

அவள் தன்னைப் பற்றி என்ன நினைப்பாளோ என்ற எண்ணம் தோன்றும். போய்ப் பார்த்துவிட்டு, இரண்டு வார்த்தைகளாவது பேசிவிட்டு வரலாமா என்ற ஆசை எழும். ஆனால் அவன் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்வான்.

'' அவ ஒரு வயசுப் பொண்ணு.''

தாயின் இந்த வார்த்தைகளைக் கேட்டா அவன் மஞ்சுவைச் சந்திக்காமல் இருக்கிறான்?

ஒரு முன்னிரவு.

மூர்த்தி பக்கத்து ஊருக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான். திடீரென்று வானில் மேகங்கள் வந்து கவிந்து கொண்டன. அவன் தெருவுக்குள் நுழையும்போது படபடவென்று தூறல் விழ ஆரம்பித்துவிட்டது. வேகமாய் நடந்தான். எதிர் வரிசையில் அந்த நாலாவது வீடு வந்துவிட்டது.

வெளித் தாழ்வாரத்தில் ஒதுங்கிக் கொண்டான் மூர்த்தி. இப்பொழுது மழை அசுர வேகத்தில் பிடித்துக் கொண்டு விட்டது. 'சோ'வென்ற அதன் இரைச்சலில் ஊர் ஒடுங்கிப் போய்விட்டது. காலெல்லாம் சாரல். மேலே நகர்ந்து கதவருகில் சென்றான். இடுக்கு வழியே வீட்டுக்குள்ளிருந்து வெளிச்சம் தெரிந்தது.

மஞ்சு இன்னும் தூங்கியிருக்க மாட்டாள். கொட்டக் கொட்ட விழித்தபடியே மழை பெய்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டு அவள் உட்கார்ந்திருக்கலாம்.

அவன் மெள்ளக் கதவைத் தட்டினான்.

''யாரது?''

''மஞ்சு !''

கையில் விளக்குடன் வந்து கதவைத் திறந்தாள், முகத்தில் திகைப்போடு.

'' மழையிலே நனைஞ்சுட்டீங்களா ?''

''இல்லே.... மழை வலுக்கிறதுக்கு முன்னாலேயே வந்து ஒதுங்கிவிட்டேன்.''

''உள்ளே வாங்க.''

திறந்த கதவு வழியே சாரல் புகுந்து சுழித்தது. அவள் கதவை அடைத்து மூடினாள்.

இருவரும் உள்ளே வந்தார்கள்.

''நல்ல காலம்! இன்னிக்கு மழை வந்தது.''

'' ஏன் ?''

'' அதுதான் உங்களை இங்கே கொண்டு வந்துவிட்டது.''

''இல்லே! எனக்கு ஒழியவே இல்லே.''

'' நீங்க வரமாட்டீங்களான்னு ஒரு சமயம் நினைச்சுப்பேன். அப்புறம் இது என்ன பைத்தியக்கார நினைப்புன்னு தோணும்.''

'' ஏன் ?''

'' நான் யார் அப்படி நினைக்க ?''

'' நீ..... நீ.... !''

அவள் ஒருநாள் கோபுவால் சந்திக்கப்பட்டு இங்கே அழைத்து வரப்பட்டவள்.

கோபுவுக்குப் பதிலாய் இவன் மஞ்சுவைச் சந்தித்திருந்தால் ?

மூர்த்திக்கு நினைப்பே சுட்டது. உடலெங்கும் அனல் ஓடியது.

அவளை நிமிர்ந்து பார்த்தான்.

தூணில் சாய்ந்தபடி நின்றிருந்தாள் அவள்.

''கோபு தபால் ஏதாவது எழுதினாரா ?''

''இல்லே.''



இஸ்ரேலிய பாதுகாப்பு மந்திரி மோஷே தயான் ராணுவ அதிகாரியாக விளங்கி ஒரு போரில் பங்கு பற்றியபோது அவரது கண்ணில் ஒரு குண்டு பாய்ந்தது. அதனால் அவருக்கு அந்தக் கண் பார்வையே போய்விட்டது. ஒரு முறை இவர் சுமார் எழுபத்தைந்து மைல் வேகத்தில் கார் ஓட்டிச் சென்றதைக் கண்ட போலீஸ்காரர் இவரை 'புக்' பண்ணிவிட்டார். இவ்வளவு வேகமாகப் போகலாமா என்று போலீஸ்காரர் கேட்டதற்கு தயான் சட்டென்று கூறினார்: "நான் என்ன செய்வது? எனக்கு இருப்பதோ ஒரே ஒரு கண். அந்த ஒரு கண்ணால் நான் 'ஸ்பீடாமீட்ட'ரைப் பார்ப்பதா, சாலையைப் பார்ப்பதா?"

தகவல்: சம்பத்குமாரி-ஆதாரம்: 'ஹிம்மத்'

"இல்லையா?"

"உம்.... அவர் எழுத மாட்டார். மாசா மாசம் பணம் வருது. அவ்வளவுதான். போகிற போதே சொல்லிவிட்டார். 'நான் தபாலே எழுதமாட்டேன்' அப்படீன்னு."

"ஏன் அப்படி?"

"அப்படித்தான் இருப்பாராம்; இருக்கணுமாம்."

"அவன் எப்போதுமே இது மாதிரி ஏதாவது மாறுபாடாகவே பேசுவான்; செய்வான்."

"இல்லே. அவர் சொன்னார். நானும் சம்மதிச்சேன்."

"இந்தப் பைத்தியக்காரத்தனத்துக்கா?"

திடீரென்று அவள் உணர்ச்சி வசப்பட்டுப் போய், "அவர்.... அவர்..... ரொம்ப உயர்ந்தவர். நான் அவருக்குத் தகுந்தவள் இல்லே!" என்று சொல்லும்போது அவளுக்கு நெஞ்சை அடைத்தது.

"அவரோட முதல் பார்வையே, முதல் பேச்சே அவர் எத்தனை நல்லவர் என்கிறதை சொல்லிட்டுது. அப்புறம் ஒவ்வொரு நிமிஷமும் அவர் மேலே, மேலே உயர்ந்து போய்க் கொண்டே இருக்கிறார். 'ஆறு மாசம் உன்னைப் பார்க்கமாட்டேன். உனக்குத் தபால் கூட எழுதமாட்டேன். அப்போதான் நீ என்னை நம்பி வந்தது நிஜம். எனக்கும் உன்னோட நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளத் தகுதி இருக்கும்.' — இப்படிச் சொல்லி விட்டுப் போனார். அந்தப் பேச்சு முழுக்க எனக்குப் புரியல்லே. ஆனால் அவரோட நல்ல மனசுதான் எனக்குப் புரிஞ்சுது."

"அப்படியானால் அவன் சொன்னது எவ்வளவு பெரிய உண்மை!"

"என்ன சொன்னார் அவர்?"

"கோபு உன்னோட உருவத்தைப் பார்த்து ஆசைப்படவில்லையாம். உன்னோட சங்கடமான வாழ்க்கையைப் பார்த்துத்தான் அனுதாபப்பட்டானும்!"

"இப்பவும் எனக்குச் சங்கடமாய் இருக்கு. அவர் சாதாரணமானவராய் — உண்மையைச் சொல்லிவிடட்டுமா? இந்த உடம்பை ஆசைப்படுகிறவராய் இருந்தால் எனக்கும் கொஞ்சம் நிம்மதி இருக்கும்."

விளக்கொளியில் மிகச் சமீபத்தில் தெரிந்த அவளை ஆழ்ந்து நோக்கினான் மூர்த்தி. அவன் பார்வை தீவிரம் கொண்ட போதும், அதைக் கவனியாமல், அசையாமல் நின்றாள் மஞ்சு.

"என்னாலே அது முடியும்னு தோணல்லே. அவரோட மனைவியாய் ஒரு நாள் வாழ முடியும்னு எனக்கு நம்பிக்கை ஏற்படவே மாட்டேங்குது."

மழையின் வேகம் இப்போது அடங்கி விட்டது.

"மஞ்சு!"

".........."

"மழை விட்டுப் போச்சு."

"ஆமாம்."

"நான் வீட்டுக்குப் போயிடலாம் என்று பார்க்கிறேன்."

"இந்த மழைக்காகத்தான் இங்கே வந்தீங்க. சரி போங்க. ஒண்ணு மட்டும் சொல்லி விட்டுப் போங்க. என்னை உங்களுக்குப் புரியுதா? என்னோட நிலைமையை உங்களாலே புரிஞ்சுக்க முடியுதா?"

"உம்...." இட்டத்தில் அவள் அவ்வளவு பக்கத்திலே.....

"ஒருகால் அது நடக்காமப் போயிடலாம்."

"ஏன்?"

"அதுதான் சொன்னேனே. நான் அவருக்கு ஏற்றவள் இல்லே. இந்த ஜன்மத்தில் அப்படிப்பட்டவரை அடையப் பாக்கியம் செய்யவில்லே."

இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? போலியாய்—சாதாரணமாய் — சில வார்த்தைகளைப் பேசுவதில் அர்த்தமிருக்கிறதா? அவன் எண்ணிப் பார்த்தான்.

இடை கழி.

"வரேன் மஞ்சு."

"வாங்க."

கதவைத் திறக்கிறான். காற்று சுழிப்போடு உள்ளே உள்ளே புகுந்து வருகிறது.

விளக்கொளியில் ஒரு நடுக்கம். கொஞ்ச நேரம் இடைகழி இருள்கிறது. அவன் நிலையில் கையை வைத்து வழியை நிதானிக்க முயல்கிறான். ஆனால் நடுவில் அவளுடைய கை தட்டுப்படுகிறது. அவன் தோளருகே வெம்மையான சுவாசம். மீண்டும் ஒரு தடவை தயக்கத்தோடு அவன் கேட்கிறான், "வரட்டுமா, மஞ்சு?"

"ஐயோ, இனிமேல் வராதீங்க. நீங்க வந்தால் நான் என்னவெல்லாமோ பேசறேன்."

"இல்லே மஞ்சு, வரமாட்டேன்."

"அம்மா சொல்கிறதைக் கேளுங்க. சீக்கிரமாக் கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ளுங்க."

பதில் சொல்லாமல் அவன் வெளியேறினான்.

மறுபடி ஒரு சந்திப்பு நிகழ வேண்டாம்—நிகழக் கூடாது என்ற முடிவில் அவன் தீவிரமாக இருந்தான். ஒவ்வொரு நாளாய் மெதுவாய் நகர்ந்தது. கோபு வருவதாய்ச் சொல்லியிருந்த கெடுவும் கடந்துவிட்டது. அவன் எப்போது வருவான் ?

'உங்களைக் கடைசியாய் ஒரு முறை சந்திக்கப் பேசணும். தயவுசெய்து ஒரு நாள் வருவீங்களா? — மஞ்சு!' மூர்த்தி தன் மேஜையின் மேல் குவிந்து கிடந்த புத்தகங்களையெல்லாம் எடுத்து அடுக்கும்போது அடியில் நாலாய் மடிக்கப்பட்ட ஒரு துண்டுக் காகிதம் கிடந்தது.

எப்போது இதை எழுதியிருப்பாள் என்று புரியவில்லை, எப்படி இது தன் மேஜைக்கு வந்திருக்கும் என்றும் புரியவில்லை. அவன் வீட்டில் இல்லாத நேரத்தில் அவளே இங்கே வந்திருக்கலாம்; இதை அவன் பார்வைக்காக மேஜை மீது வைத்துவிட்டுப் போயிருக்க வேண்டும். ஒரு வகையாய்த் தீர்மானித்துக் கொண்டான் அவன்.

அவனுடைய உறுதி அவன் தீவிரமாய்ச் செய்து கொண்டிருந்த முடிவு — மெதுவாய்த் தளர்ந்து போகத் தொடங்கியது. உடனே அவளைப் போய்ப் பார்க்கும் எண்ணம் அவசரமும் படபடப்புமாய் அவனுள் இறங்கியது.

அப்போது அவள் தாழ்வாரத்துத் தூணில் சாய்ந்தவாறு நின்றிருந்தாள். உணர்ச்சிகள் பரவி நின்ற முகம் அவன் பக்கம் திரும்பியதும் மெதுவாய் நடுங்கியது.

''மஞ்சு !'' பதில் இல்லை.

''மஞ்சு !''

''ஏன்?''

''என்னை நீ எதிர்பார்க்கவில்லை?''

''அப்படிச் சொல்லாதீங்க!''

''பின்னே?''

''நீங்க வந்தும் நான் அசையாமல் நிற்கிறேன் என்றுதானே கேட்கிறீங்க?''

''இல்லே, மஞ்சு ! மறுபடியும் என்னை நீ வரக் கூடாது என்று சொன்னே! ஆனால் நான் வந்துட்டேன்.''

அவள் நிமிர்ந்து ஒரு மெல்லிய நகையோடிய முகத்தோடு அவனைப் பார்த்தாள்.

''ஏன் வந்தேன், தெரியுமா?''

''அதெல்லாம் நான் கேட்கவில்லையே!''

ஒரு நெட்டுயிர்ப்புக்குப் பிறகு அவள் சிரித்தாள். ''எங்கேயோ கிடந்த என்னைச் சந்திக்க அவர் ஏன் வந்தார்? அவரை நம்பி அவர் பின்னாலேயே நான் ஏன் வந்தேன்? இந்தக் கேள்விக்கெல்லாம் என்ன பதில் சொல்ல முடியும் ?''

''கோபு வந்தது தற்செயலாய். நீ...நீ..''

''நான்... நான்....வந்திருக்க மாட்டேன். அவர் என்னைப் பிழைக்க வச்சிருக்காட்டா.''

''அப்படிப் பார்த்தால் நீ வந்ததுக்கும் காரணம் இருக்கு. நீ வாழணும் என்று அவன் விரும்பினான். உனக்கும் அந்த ஆசை—இல்லாட்டா நம்பிக்கை இருந்தது.''

''உயிர் வாழணும் என்கிற ஆசை யாருக்குத்தான் இல்லே? செத்துப் போயிடணும் என்று அவசரமாய் ஒரு வினாடியிலே முடிவு பண்ணினேன். ஆனால் அவர் என்னைப் பிழைக்க வைச்சதும் . ாவு பயங்கரமாய்த் தோணிச்சு. வாழணும் என்கிற ஆசையும் பலமா ஏற்பட்டது. இப்போ நினைச்சுப் பார்க்கிறேன். ஆசை இருந்தாப் போறாது. தகுதியும் இருக்கணும்.''

''கோபு உன்னை அப்படி நினைக்கலையே?''

''என்னை அப்படி நினைக்க வைத்துவிட்டார். அவர் பேரில் நான் குறை சொல்லவில்லை. என்னை நானே நினைச்சுப் பார்த்தால்...''

''அவன் எப்போ வருகிறான்?''

இதற்கு அவள் பதில் சொல்லவில்லை.

ஆனால் அவள் வேறொரு கேள்வி கேட்டாள்: ''அன்னிக்கு அவருக்குப் பதிலாய் உங்களை நான் சந்தித்திருந்தால்?''

மூர்த்தி திடுக்கிட்டுப் போனான். சென்ற முறை அவன் மஞ்சுவைப் பார்த்தபோது தனக்குள் அவன் அதே கேள்வியைக் கேட்டுக் கொண்டான். இப்பொழுது அவளே அதை வாய் விட்டுக் கேட்கிறாள்.

''ஏன் பதிலையே காணும்?''

''உண்மையைச் சொல்லட்டுமா மஞ்சு? கோபுவைப் போல் உன்னை அழைத்து வந்து உறுதியோடு உன்னைத் தனியாய் இப்படி விட்டு விட்டு, இதெல்லாம் என்னாலே முடியாது. நான் சாதாரணமானவன்.''

வானில் நட்சத்திரங்கள் பளிச்சிடத் தொடங்கி விட்டன. இன்னும் விளக்கேற்றப்படவில்லை. முற்றத்தில் அந்திப் பொழுதுக்கு ஏற்பட்ட மன மயக்கம்.

கடைசியில், ''அவர் நாளைக்கு வருகிறாராம்'' என்றாள் மஞ்சு.

''முதலில் இதை நீ சொல்லவில்லையே?''

''என் பிசகுதான். எல்லாமே என்னோட குறைதான். என் குற்றம்தான்.''

மூர்த்தியின் நெஞ்சில் சுருக்கென்றது. 'கோபு நாளைக்கு வருகிறான். எல்லாமே என் குறைதான்...'

வீட்டுக்கு வந்து, இரவில் வெகு நேரம்வரையில் இருளில் ஆழ்ந்து போன தெருவில், ஜன்னல் வழியே அந்த வீட்டையே பார்த்துக் கொண்டு நின்றான்.

அது எப்படி நிகழ்ந்தது? யாருடைய குற்றம், அல்லது பலஹீனம்? மஞ்சுவைத் தான் சந்திக்காமலே இருந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும் என்று இப்பொழுது அவன் தெளிவாகப் புரிந்து கொண்டு விட்டான்.

அதற்குப் பிறகு அந்த ஜன்னல் கதவுகள் ஒரு வாரம் திறக்கப்படாமல் மூடிக் கிடந்தன.

''**எ**ல்லாம் முடிஞ்சு போச்சு!''

முற்றத்துச் சாய்வு நாற்காலியில் வந்து உட்கார்ந்தான் கோபு. அவன் எதிரில் அந்த வெற்றுக் கூடத்தை ஒரு தடவை ஓய்ந்த பார்வையால் நோக்கிவிட்டுத் திரும்பிய மூர்த்தி பதில் எதுவும் சொல்லாமல் அமர்ந்திருந்தான்.

''ஆமாம்! எல்லாம் முடிந்து போய்விட்டது. ஆனால் தீர்க்கப்படாமல் முடிந்து போயிற்று'' — மூர்த்தி நெட்டுயிர்ப்பை அடக்கிக் கொண்டான்.

கோபுவின் லட்சியத்தாலும், மூர்த்தியின் பலவீனத்தாலும் தீர்க்க முடியாத, மஞ்சு என்ற சமூக அந்தஸ்தை இழந்துவிட்டவளின் வாழ்க்கை என்னும் பிரச்னை தற்செயலாய் நிகழ்ந்த மரணத்தால் முடித்து வைக்கப்பட்டது.

சென்னை, மந்தைவெளிப்பாக்கம் 'கல்யாண நகர்'. 'கந்தமலை' என்ற பெயருடன் விளங்கும் திரு கி. வா. ஜகந்நாதன் இல்லத்தினுள் பாராளுமன்ற உறுப்பினரான திரு எஸ். எஸ். மாரிசாமியின் மனைவி ஸ்ரீமதி ருக்மிணி மாரிசாமி நுழைந்தார். கூடவே சிரித்தபடி கேள்வியும் கேட்டார்:

ஸ்ரீமதி ருக்மிணி மாரிசாமி: பத்திரிகைகளில் 'கேள்வி பதில்' பகுதி வருவதுபோல், பத்திரிகை ஆசிரியரின் மனைவியிடமும் கேள்விகளைக் கேட்கலாமா ?

ஸ்ரீமதி அலமேலு ஜகந்நாதன்: கேளுங்களேன்! பத்திரிகைகளில் மட்டுந்தானா கேள்விகள்? பார்லிமெண்டிலும் சட்டசபையிலும் கூடக் கேள்விகள்தானே ? பார்லிமெண்டில் கேள்வி கேட்கும் அரசியல்வாதியின் மனைவியிடம் நானும் கேள்வி கேட்பேன்!

ரு. மா. (சிரித்தபடி): உங்கள் கணவர் தமிழ்த் தாத்தாவின் மாணவராயிற்றே; உங்கள் திருமணத்துக்குத்தமிழ்த்தாத்தா வந்திருந்தாரா ? அவர் உங்களை எப்படி வாழ்த்தினார் ?

அ. ஜ.: ஐயர்வாள்தான் எங்கள் கல்யாணத்தையே நடத்திவைத்தார்கள். 'வருங்காலத்திலே பிரகாசமாக இருக்கப் போகிற மாப்பிள்ளைக்கு ஏற்றபடி நடந்துண்டு வா!' என்று சொன்னார்கள். ஐயர்வாளின் முழுப் பெயரை அவரும் சொல்ல மாட்டார். நானும் சொல்ல மாட்டேன்.....!

நீங்கள் டில்லி போனது உண்டா ? உங்கள் கணவர் முதல் நாள் தாம் பார்லிமெண்டுக்குப் போய் வந்த விவரத்தை உங்களிடம் சொன்னாரா ?

ரு. மா.: பார்லிமெண்டை ஒரே ஒரு தடவை பார்த்து விட்டு வந்தேன்.... பிரதம மந்திரி நேரு வந்திருந்தபோது விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டாராம் இவர். ராஜாஜியிடமிருந்தும் அன்றைக்கே வாழ்த்துச் செய்தி வந்திருந்ததாம். "I wish you a sucessful parliamentary career"ன்னு தந்தி வாசகம் இருந்த ஞாபகம்... உங்கள் கணவர் 'கலைமக'ளில் எப்போது சேர்ந்தார் ?

அ. ஜ.: ஸ்ரீ நாராயணசாமி அய்யர் 'கலைமகளை' 1932ல் ஆரம்பித்தபோதே சேர்ந்து விட்டார்.

ரு. மா.: ஆரம்பத்திலிருந்தே ஆசிரியராகப் பணியாற்றி வருகிறாரா ?

அ. ஜ.: இல்லை. கலைமகள் ஆரம்பமானபோது ஆசிரியர் குழு என்று அமைத்திருந்தார்கள். அப்போது உதவி ஆசிரியராக இவர் சேர்ந்தார். அப்புறம் 1937ல் அதன் முதல் ஆசிரியராகி விட்டார்.

உங்கள் கணவர் பார்லிமெண்டில் முதலில் எ.தைப் பற்றிப் பேசினார் ?

ரு. மா.: பட்ஜெட் பற்றித்தான் முதலில் பேசினார். போட்டிருக்கும் புது வரிகள் அதிகம்னு சொல்லி, 'வெள்ளைக்காரர்கள் நல்லவர்கள் என்ற பெயரை ஆளும் கட்சிக்காரர்களாகிய நீங்கள் உண்டாக்கி விட்டீர்கள்' என்றும் சொன்னாராம்.

உங்கள் கணவர் ஆசிரியராக இருக்கும் கலைமகளையும், மற்றப் பத்திரிகைகளையும் படித்து, கதைகள் கட்டுரைகள் தொடர்கதைகள் பற்றிக் கணவரிடம் விவாதிப்பீர்களா ?

அ. ஜ.: முன்பெல்லாம் நிறையப் படித்துச் சொல்லிக் கொண்டிருப்பேன்... கலைமகளில் வரும் விஷயங்களை ஒன்று விடாமல் படிப்பேன். எது தரமாய் இருந்தாலும் நன்றாக இருக்கிறது என்று குறிப்பிடுவேன்....

வணக்கம் சௌக்கியமா?



இரு இல்லத்தரசிகளின் சந்திப்பு





இவ்வாரம்
உரையாடலில் பங்குகொள்வோர் :

ஸ்ரீமதி
அலமேலு ஜகந்நாதன்
ஸ்ரீமதி
ருக்மிணி மாரிசாமி

- திரு கி. வா. ஜகந்நாதன்
- திரு எஸ். எஸ். மாரிசாமி



''எங்க முதலாளி தங்கமானவர்... ஆறு மாசச் சம்பளம் போனஸாகக் கொடுத்தார்.''

''அப்படியா! பரவா யில்லையே!''

''ஆனா அவர்கிட்டே ஒரு கெட்ட குணம்''

''என்ன அது?''

''ஒரு வருஷமா யாருக்குமே அவர் சம்பளம் தரல்லியே!''

எஸ். வி. ஆர்.

இப்போது முன் மாதிரி இல்லே. பத்திரிகைகள் ரொம்பவும் மாறிவிட்டன.....

ரு.மா.: எந்த விதத்தில்?

அ.ஜ.: அட்டைப் படங்களும் சரி; கதைகளில் வரும் படங்களும் சரி. எல்லாமே ஆபாசமாக உள்ளன. அட்டைப்படத்தில் வரும் படங்களைப் பார்க்கவே கூச்சமாயிருக்கு. அப்படிப் போட்டால்தான் விற்கிறதாம்!....

ரு.மா.: அரசியல் மேடையும் ஆபாசப் பேச்சுக்கு இடம் தரத்தான் செய்கிறது. அதுவும் தேர்தல் நெருங்கிவிட்டால் கேட்கணுமா?

(அடுத்த அறையொன்றில் அதுவரை யாரிடமோ பேசிக் கொண்டிருந்த திரு கி. வா. ஜ. 'என்ன வாதம் பலமாயிருக்கே?' எனக் கேட்டபடி வந்து சில வார்த்தைகள் கூறி விட்டுத் திரும்புகிறார்.)

கி.வா.ஜ.: பத்திரிகைகள் சமாசாரம் அவங்களுக்கும் அவர் கணவர் மாரிசாமிக்கும் தெரியாத புதிய விஷயமா? மாரிசாமியும் பத்திரிகை ஆசிரியராக இருந்தவராச்சே !.... காஞ்சிபுரம், இமயம், பேரிகை ஆகிய பத்திரிகைகள் நடத்தியவர். நான்கூட அந்தப் பத்திரிகைகளின் பொங்கல் மலர்களுக்கு எழுதியிருக்கிறேன் !

ரு.மா.: இந்தக் காலத்தில் எல்லாரும் கதை கட்டுரைகள் எழுத ஆசைப்படுகிறார்கள். வீட்டுக்கு வீடு பெண்களிடம் எழுதற ஆசை அதிகமாக வளர்ந்திருக்கு....

உங்களுக்குத் தெரிந்த பெண்மணிகள் கதைகளோ நாவல்களோ எழுதிக்கொண்டு வந்து, உங்களைச் சிபாரிசு செய்யுமாறு கோருவது உண்டா ?

அ.ஜ.: நான் சிபாரிசே செய்யமாட்டேன்! யார் கதையையாவது நான் சிபாரிசு பண்ணினாலும், அவர் ஏற்கவே மாட்டார் ! வீட்டிலே கொண்டு வந்து தரும் கதைகள் கலைமகள் ஆபீசுக்குப் போகவே போகாது. இந்த விஷயத்தில் ரொம்பவும் கண்டிப்பாக இருப்பவர்....

ஆமாம். அரசியல்வாதிகளுக்குச் சில சமயம் ஆபத்தான சோதனைகள் வரக் கூடுமே.....?

ரு.மா.: ஒரு தடவை ஸ்விட்ஜர்லாந்தில் நடந்த ஒரு மகாநாட்டுக்குப் போயிருந்த போது, இந்தியாவுக்கு எதிராகவும் நேருவுக்கு எதிராகவும் பேசினார்களாம். இது 1955ல் நடந்தது. அதை ஆட்சேபித்து எங்க வீட்டுக்காரர் கண்டனம் தெரிவிக்கவே, கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டுவிட்டதாம்.

அந்த மகாநாட்டுக்கு அழைப்பு வந்து போயிருந்ததால், அங்கேயே சில நாட்கள் வீட்டுக் கைதி மாதிரி நடத்தத் தொடங்கி விட்டார்கள். உடனே உண்ணாவிரதம் நடத்தப் போவதாகச் சொன்னார். ஸ்விட்ஜர்லாந்திலிருந்து ஜெர்மனிக்குக் கொண்டு போய் விட்டுவிட்டார்கள் !

அங்கிருந்து பாரிஸ் வந்து, இந்திய தூதரகத்தில் நடந்த சம்பவங்களைக் கூறி விட்டு, இந்தியா திரும்பினார்.... அது சரி, உங்களுக்கு அறுபதாம் கல்யாணம் நடந்து ஐந்து அல்லது ஆறு வருஷம் ஆகியிருக்குமா?

அ.ஜ.: எல்லாம் ஐயர்வாள் தந்த ஆசிகளால் அமோகமாக நடந்தது. அவருடைய தம்பி (கி. வா. ஜ.வின் சகோதரர்)யும், குடும்பத்தினரும், மணிவிழாக் குழுவினரும் சேர்ந்து சிறப்பாக நடத்தினார்கள். மணி விழாவுக்காக எங்கள் இருவரையும் இலங்கைக்கும் அழைத்தார்கள். போயிருந்தோம். யாழ்ப்பாணம், கண்டி இன்னும் நாலைந்து இடங்களில், வீட்டுக்கு வீடு பூர்ண கும்பம் கொடுத்து வரவேற்று, தெருவெல்லாம் நாதசுரம் முழங்க ஊர்வலமே நடத்தினார்கள். எங்கள் கல்யாணம்கூட இத்தனை சிறப்பாக நடக்கவில்லே. என் மாமனார் மாமியார் இருந்து பார்க்கவில்லையே என்று கூட எனக்குக் குறை!.... போகட்டும், நாட்டின் வரவு செலவுகளைப் பற்றி பார்லிமெண்டில் பேசும் உங்கள் வீட்டுக்காரர் வீட்டுச் செலவுகளில் எப்படி இருக்கிறார்?

ரு. மா. ஊஹூம்! கொடுக்கல் வாங்கல் எல்லாம் நான்தான். என்ன செலவு என்று கூடக் கேட்டுக் கொள்ளமாட்டார்.

அ.ஜ.: தேவலாமே, அந்தவிதத்தில் நம் இருவருக்கும் ரொம்ப ஒற்றுமைதான் !

ரு.மா.: உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் ஏதும் நிகழ்ந்ததுண்டா ?

அ.ஜ.: நான் சொல்லப் போவதை இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது.

மோகனூரைச் சேர்ந்த காந்த மலையில், மூன்றாவது பிள்ளைக்குப் பூணூல் கல்யாணம். முகூர்த்த சமயத்தில் சாஸ்திரிகள், 'தங்க, வெள்ளி பூணூல் வேண்டுமே, கொண்டு வாருங்கள்' என்றார். நாங்கள் அதை வாங்கவில்லே. சாஸ்திரிகள் வாங்கி வருவார் என்றே நம்பி விட்டோம். அவரிடம் அப்படிச் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டதாக எப்படியோ ஓர் எண்ணம் எங்களுக்கு விழுந்து விட்டிருந்தது. ஒரே குழப்பம். எனக்குப் பெரிய குறையாக இருந்தது. என்ன ஆச்சரியம், பாருங்கள்! அதே சமயத்தில் வாசலில் ஒரு செட்டியார் ''தங்கப் பூணூல், வெள்ளிப் பூணூல் இருக்கு..... வேண்டுங்களா?'' என்று கேட்டபடி வந்தார்.

எல்லாரும் சிலையாகிவிட்டோம். சமயத்துக்குச் சொல்லி வைத்தாற்போல் முருகனே செட்டியாராக வந்தாரோ என்னவோ என எண்ணினோம்.

ரு.மா.: பக்தி சிரத்தை இருக்குமிடத்தில் எல்லாம் விக்னமின்றி நிறைவேறுவதில் என்ன ஆச்சரியம்.... சரி, நான் வரட்டுமா?

(வீட்டின் மூத்த மருமகள் கொண்டு வந்து தந்த வெற்றிலை பாக்கு மஞ்சள் குங்குமத்தைப் பெற்றுக் கொண்டு ஸ்ரீமதி மாரிசாமி கிளம்பினார்.)

உரையாடல் தொகுப்பு: ஏ. சுவாமிநாதன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


இதோ, ஒரு தீமையற்ற தலைவலி மாத்திரை!



அவேதன்®

அற்புத 'எபெப்' அடங்கியது.

(என்-அஸிடில்-பி-எமினோஃபினோல்)



தலைவலி மாத்திரை ஏதாவது தீங்கு விளைவிக்குமோ என்கிற பயத்தால், நாம் எத்தனையோ தடவை தலைவலியைப் பொறுத்துக்கொண்டு அவதிப்படுகிறோம்.

ஆனால் அப்படி அவதிப்பட வேண்டாம். அவேதன் தீமையில்லாமல் தலைவலியைப் போக்குகிறது. ஏனெனில், அவேதனில் அற்புத 'எபெப்' அடங்கியுள்ளது. அவேதன் சாப்பிட்ட பின் எவ்வித துன்பகரமான பின் விளைவுகளும் ஏற்படாது; துரிதமான நிச்சய நிவாரணம் கிடைக்கும்.

எனவே, தீமையற்ற முறையில் தலைவலியைப் போக்குங்கள். ஜலதோஷம், ஃப்ளூ மற்றும் இதர வலிகளையும் நோவுகளையும் கூடத்தான்! 'எபெப்' அடங்கிய அவேதன் சாப்பிடுங்கள்.



அவேதன்—அற்புத 'எபெப்' அடங்கியது. தலைவலி, ஜலதோஷம், மற்றும் ஃப்ளூவிலிருந்து தீமையற்ற நிச்சய நிவாரணம் அளிக்கிறது.

SQUIBB® SARABHAI CHEMICALS

® இ.ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்கைக் குறிக்கிறது. காம்சந்த் ப்ரேம்சந்த் பிரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

Shilpi HPMA 37A/70 TAM

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

